உலகளவில் 8,000 பேரை குறிவைத்துள்ளது ஐ.எஸ்.



பக்கம் 14-15

விலை ரூபா 20

பக்கங்கள் 28

# உதயன்

34c - 27c

தெளிவான காலநிலை

சுடர் 31 | கதிர் 198 | வள்ளுவர் ஆண்டு 2047 | வைகாசி 29, சனிக்கிழமை 11.06.2016

## இலங்கை மீதான தீர்மானம்; ஸுவையர்—ஹுசேன் பேச்சு

கொழும்பு, ஜூன் 11
பிரிட்டன் வெளிவிவகார மற்றும் பொதுநலவாய அலுவலக இணை அமைச்சர் ஹியூகோ ஸுவையர், ஜெனிவாவில் ஐ.நா.மனித உரிமை ஆணையாளர் சையிட் அல் ஹுசைனை நேற்றுமுன்தினம் சந்தித்துப் பேச்சு நடத்தியுள்ளார். இந்தச் சந்திப்பில், இலங்கை விவகாரம் தொடர்பாகவும் பேசப்பட்டுள்ளது.
ஐ.நா. மனித உரிமைகள் சபையில் நிறைவேற்றப்பட்ட இலங்கை தொடர்பான தீர்மானத்தின் மீதான பிரிட்டனின் அர்ப்பணிப்பு குறித்து, ஐ.நா. மனித உரிமை பக்.24

# அரசு மீது சம்பந்தன் நேற்று மென் சாடல்

### நல்லிணக்க நடவடிக்கைகளில் தமிழர்களுக்குத் திருப்தியில்லை என்றார் செய்யவேண்டியவை ஏராளம் உண்டு என்றும் சுட்டிக்காட்டு



கொழும்பு, ஜூன் 11
ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன ஆட்சிக்கு வந்து 17 மாதங்கள் கடந்து விட்டன. புதிய அரசு ஆட்சியமைத்து 9 மாதங்கள் முடிவடைந்துவிட்டன. ஆனால் அரசின் செயற்பாடுகளால் தமிழ் மக்கள் திருப்தியடையக் கூடிய நிலமை இல்லை. நல்லிணக்கம் உரிய முறையில் தென்படவில்லை. செய்வதற்கு இன்னமும் எவ்வளவோ இருக்கின்றன. பெருந்தொகையான காணிகள் விடுவிக்கப்படவேண்டியுள்ளன. இதற்கான முடிவுகளை எடுக்கவேண்டிய நேரம் வந்துவிட்டது.
இவ்வாறு நேற்று நாடாளுமன்றத்தில் தெரிவித்தார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும், எதிர்க்கட்சித் தலைவருமான இரா.சம்பந்தன்.
"ஐ.நா. மனித உரிமைகள் சபையில் அதன் ஆணையாளரால் எதிர்வரும் 29ஆம் திகதி வாய்மூல அறிக்கையும், அடுத்த பக்.23

# தமிழருக்குச் சுயாட்சி கிடைக்க பிரிட்டனின் ஆதரவு வேண்டும்

### யாழ்ப்பாணம் வந்த தூதுவரிடம் முதலமைச்சர் விக்கி வலியுறுத்து

யாழ்ப்பாணம், ஜூன் 11
புதிய அரசமைப்பில், நீதியான - நீடித்து நிலைக்கக் கூடிய தீர்வையே தமிழ் மக்கள் எதிர்பார்ப்பதனால், அந்தத் தீர்வைப் பெற்றுக்கொள்ளக்கூடிய வழிகளை அரசு வகுக்கவேண்டும். எமக்குப் போதுமான அளவு சுயாட்சி கிடைக்கும் வகையிலான நடவடிக்கைகளை பிரிட்டனும் எடுக்கவேண்டும். பக்.04



# மைத்திரி - ரணில் முடிவால் அமெ. காங்கிரஸ் அதிருப்தி

### கலப்பு நீதிமன்றில் வெளிநாட்டு நீதிபதிகளை உள்ளடக்க மறுப்பதால் சிக்கல்

கொழும்பு, ஜூன் 11
போர் தொடர்பாக பொறுப்புக் கூறும் உள்ளகப் பொறி முறையில், வெளிநாட்டு நீதிபதிகளை உள்ளடக்குவதற்கு, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும், பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும், மறுப்புத் தெரிவித்திருப்பது குறித்து, அமெரிக்க காங்கிரஸின் வெளியுறவுக் குழு ஏமாற்றம் வெளியிட்டுள்ளது.
அமெரிக்க காங்கிரஸ் வெளியுறவுக் குழுவின் ஆசிய பசுபிக் உபகுழுவில், இலங்கை தொடர்பாக நேற்றுமுன்தினம் நடந்த கலந்து பக்.25

# தமிழ் மீனவர்களின் தரவுகளை இருட்டடிப்புச் செய்த ராணுவம்

### அமைச்சர் தலைமையிலான கூட்டத்தில் சர்ச்சை

யாழ்ப்பாணம், ஜூன் 11
முல்லைத்தீவில் 1956ஆம் ஆண்டு முதல் சிங்கள மீனவர்களே அதிகளவில் பாடுதொழிலை மேற்கொண்டதாகவும், அவர்களிடம் கூலித் தொழிலாளிகளாகவே தமிழ் மீனவர்கள் இருந்தனர் என்றும் இராணுவ அதிகாரி ஒருவர் தெரிவித்த கருத்தால், அமைச்சர் தலைமையிலான கூட்டத்தில் சலசலப்பு ஏற்பட்டது.
அதனை மறுத்துரைத்த மீனவர் சங்கப் பிரதிநிதி, திட்டமிட்டுத் தமிழ் மக்களின் தரவுகள் இருட்டடிப்புச் செய்யப்பட்டுள்ளன எனக் குற்றஞ்சாட்டினார்.
வடக்கு மாகாணக் கடற்றொழிலாளர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணவும், பக்.06

முச்சந்தி முரளி



பொறுப்புக் கூறச் சீருடையினர் மறுக்கினம்.. இதுதான் உங்கட நல்லாட்சியோ.......

# ஐங்கரநேசனின் தலை தப்பியது

### கட்சி ரீதியான முடிவு என்கிறார் முதலமைச்சர்

யாழ்ப்பாணம், ஜூன் 11
வடக்கு மாகாண சபையில் அமைச்சர் ஒருவருக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டுவர இருந்தமை உண்மை. இருப்பினும் கட்சி ரீதியான முடிவின் பிரகாரம் அது கைவிடப்பட்டுள்ளது.
இவ்வாறு தெரிவித்தார் வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன்.
வடக்கு மாகாண விவசாய அமைச்சர் ஐங்கரநேசனுக்கு எதிராகவே இவ்வாறு நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டுவரப்பட இருந்ததாக முதலமைச்சர் முன்பு தெரிவித்திருந்தார்.
இது தொடர்பில் அவர் தெரிவித்ததாவது:
இது தொடர்பில் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனுடன் உரையாட நான் கொழும்பு சென்றி பக்.24

# கிராம அலுவலர்களை அச்சுறுத்திய இராணுவத்தினருக்கு நடந்தது என்ன?

யாழ்ப்பாணம், ஜூன் 11
முல்லைத்தீவு மாவட்டத்தில் கிராம அலுவலர்கள் இருவர் தென்பகுதி மீனவர்களால் தாக்கப்பட்டபோது இராணுவத்தினரால் அச்சுறுத்தப்பட்டனர் என்ற குற்றச்சாட்டுத் தெரிவிக்கப்பட்டு நேற்றுடன் இரண்டு மாதங்கள் முடிவுற்றுள்ளன. இது தொடர்பில் உரிய தரப்புக்களால் என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது என்பது தொடர்பில் பொறுப்பு வாய்ந்த - சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் 'உதயன் பத்திரிகை' வினவியது.
முதலில் "இந்த விடயம் தொடர்பில் பொலிஸார் விசாரணை செய்து கொண்டிருக்கின்றனர். அவர்களின் பங்கு இதில் முக்கியமானது. இது தொடர்பில் பொலிஸாரின் விசாரணை நடவடிக்கை தெரியாமல், என்னால் பதில் வழங்க முடியாது. நீங்கள் முல்லைத்தீவு பொலிஸ் நிலையத்துடன் தொடர்பு கொள்ளுங்கள்" - என்றார் இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் ஜெயநாத் ஜயவீர.
முல்லைத்தீவு பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியின் கைத்தொலைபேசி இலக்கத்துக்கு தொடர்பு கொண்டோம். "கிராம அலுவலர்கள் இருவர் ஏப்ரல் மாதம் 10ஆம் திகதி புலிபாய்ந்தகல் பகுதியில் வைத்து தென்பகுதி மீனவர்களினால் தாக்கப்பட்டனர். அத்துடன் இராணுவத்தினரால் அச்சுறுத்தப்பட்டனர். பக்.24

## இனிப்பை உண்ட மாணவர்கள் மோதல்

யாழ்ப்பாணம், ஜூன் 11
யாழ்ப்பாணத்தில் உள்ள பாடசாலை ஒன்றைச் சேர்ந்த உயர்தர மாணவர்கள் நால்வர் நேற்றுச் சீருடை அணிந்த நிலையில் சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர். பக்.24

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# எம். பிக்களாவதற்கு கல்வித் தகைமையை கட்டாயமாக்குங்கள்

## சபாநாயகரிடம் கோருகிறார் அமைச்சர் ராஜித

கொழும்பு, ஜூன் 11

நாடாளுமன்ற உறுப்பினராக வருவதற்கு கல்வித் தகைமை கட்டாயமாக்கப்படவேண்டும். அதற்கான நடவடிக்கைகளை சபாநாயகர் முன்னெடுக்கவேண்டும்.

இவ்வாறு சுகாதார அமைச்சர் ராஜித சேனாரத்ன வலியுறுத்தியுள்ளார்.

நாடாளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை இடம்பெற்ற நிதியமைச்சருக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை விவாதத்தில் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:

கடந்த ஆட்சிக் காலத்தில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச நிதியமைச்சராகவும் பதவி வகித்தார். இன்று நிதியமைச்சருக்கு எதிராக நம்பிக்கையில்லாபிரேரணையை முன்வைத்தவர்கள் அன்று மகிந்தவுக்கு எதிராக வாய்கூடத் திறக்கவில்லை. மௌனித்திருந்தனர்.

அன்று எதனோல் கொண்டு வந்தவர்கள், மது விற்பனையில் ஈடுபட்டோர் உட்பட மகிந்த ராஜபக்சவுக்குச் சார்பானவர்களுக்குச் சுங்க வரிகளோ அல்லது வேறு எந்த வரிகளோ அறவிடப்படவில்லை.

சலுகைகள் வழங்கப்பட்டன. இதனால் நாட்டுக்குக் கிடைக்க வேண்டிய வரி வருமானங்கள் கிடைக்காமல் போயின. இன்றைய நிதியமைச்சர் சுங்க வரி உட்பட அனைத்து வுரிகளையும் அறவிடுகின்றார்.

நாட்டுக்குச் சேர வேண்டிய வரிகள் இன்று கிடைக்கின்றன. அரச வருமானம் அதிகரித்துள்ளது. இவ்வாறு நாட்டுக்கு வருமானத்தைப் பெற்றுக் கொடுக்கும் நிதியமைச்சருக்கு எதிராகவா நம்பிக்கை இல்லாப் பிரேரணையைக் கொண்டு வந்துள்ளனர்.

கடந்த ஆட்சிக் காலத்தில், நிதியமைச்சரின் செயலாளராகவிருந்த பி.பி.ஜயசுந்தரவின் ஆலோசனையைக் கேட்டே தேர்தல் நடத்தப்பட்டது. கடந்த காலத்தில் சுங்கத்தையும் திறைசேரியையும் அழித்தவர்கள் இன்று நம்பிக்கையில்லாப் பிரேரணையை முன்வைக்கின்றனர்.

நாடாளுமன்றத்தில் இன்று நிதி நிர்வாகம் தெரியாதோர், பல்கலைக்கழகம் செல்லாதோர், கல்வி அறிவு இல்லாதவர்கள் வெறுமனே கூச்சலிடுகின்றனர். எனவே படித்தவர்கள் நாடாளுமன்றம் வரவேண்டும். நாடாளுமன்றத்துக்கு வருவோருக்கு கல்வித்தகைமை இருக்கவேண்டும். அதற்கான நடவடிக்கைகளைச் சபாநாயகர் மேற்கொள்ள வேண்டும் - என்றார். (த-ஜ-5)

## மாற்றுத் திறனாளிகளுக்கென நவீன வசதியுடன் மலசலகூடம்

### வவுனியா இளைஞர் கண்டுபிடித்தார்

வவுனியா, ஜூன் 11




மாற்றுத்திறனாளிகளுக்கென நவீன வசதியுடன் கூடிய புதிய மலசலகூடம் ஒன்றை வவுனியா இளைஞர் ஒருவர் கண்டுபிடித்துள்ளார். ஆனால் அதனை இலங்கையில் எவருமே பெற்றுக் கொள்ளாத நிலையில் அதன் உரிமையை இந்திய நிறுவனம் ஒன்று பெற்றுக் கொண்டுள்ளது.

இலங்கையில் உள்ள நிறுவனங்கள் தனக்கு ஒத்துழைக்காததாலேயே, இந்திய நிறுவனத்துக்குத் தனது கண்டுபிடிப்பைக் கொடுத்ததாகவும் குறித்த மலசலகூடத்தைக் கண்டுபிடித்த என்.என். ஜக்சன் தெரிவித்தார்.

இதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் நேற்றுக் காலை வவுனியா மாவட்ட செயலகத்தில் பதிவுகளை மேற்கொண்டதன் பின்னர் இடம்பெற்றது.

புதிய மலசலகூடம் தொடர்பில் இலங்கையில் பல நிறுவனங்களுக்கு இணையத்தளத்தினூடாக விளம்பரப்படுத்தியிருந்தபோதும், இலங்கை நிறுவனங்களிடம் இருந்து எவ்வித அழைப்பும் விடுக்கப்படவில்லை.

அதேவேளை, இந்தியா மும்பாயிலிருந்து ஜெய்.பி கூட்டுத்தாபன நிர்வாக இயக்குநர் பிலிப் லாசர் குறித்த கண்டுபிடிப்பை வரவேற்றதுடன், இணையத்தளமூடாக வியாபார ஒப்பந்தத்தை மேற்கொள்ளவுள்ளதாகவும் தெரிவித்தார்.

அதன்படி அவர் வவுனியாவுக்கு வந்து மாற்றுத்திறனாளிகள் பாவிப்பதற்குக் கண்டுபிடிக்கப்பட்ட மலசல கூடத்தைப் பார்வையிட்டார். இதன் பின்னர் அவர் இதன் உரிமையைத் தமது நிறுவனத்துக்குப் பெற்றுத் தருமாறு கோரினார். இதனடிப்படையிலேயே இந்த ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டுள்ளது எனக் குறித்த மலசல கூடத்தைக் கண்டுபிடித்த இளைஞனான ஜக்சன் தெரிவித்தார். (த-ஜ-21)

## திருநெல்வேலிச் சந்தைக்குச் செல்வோர் வாகனங்களை நிறுத்த இடம் ஒதுக்கீடு

யாழ்ப்பாணம், ஜூன் 11

திருநெல்வேலிச் சந்தைக்குச் செல்வோர் தமது வாகனங்களைச் சிரமமின்றி நிறுத்துவதற்கு வசதியாக, சந்தைக்கு முன்பாக ஆடியபாதம் வீதிக்கு கிழக்குப் பக்கமாக முன்பு வாழைக்குலை வியாபாரம் செய்யப்பட்ட காணியில் இடம் ஒதுக்கப்படவுள்ளது. அதற்கான நடவடிக்கையைப் பிரதேச சபைச் செயலாளர் மேற்கொண்டுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

நல்லூர் பிரதேச சபை நிதியிலிருந்து பல மில்லியன் ரூபா செலவில் மக்கள் நலம் சார்ந்த பல வேலைத் திட்டங்கள் ஆரம்பித்து நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன.

திருநெல்வேலி சந்தைக் கட்டடத்தின் தரைப் பகுதியில் உள்ள வாகனத் தரிப்பிடம் சிறிய இடத்தில் வசதியீனங்கள் மத்தியில் இயங்கி வருகின்றது. நாளாந்தம் மோட்டார் சைக்கிள், சைக்கிள் போன்ற ஏராளமான வாகனங்கள் அங்கு நிறுத்தப்படுவதால் வியாபாரிகள் மட்டுமல்ல பொதுமக்களும் சிரமங்களுக்குள்ளாகிறார்கள். இந்தக் குறைபாடுகளை நிவர்த்தி செய்யவே நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. வாகனத்தரிப்பிடப்புனரமைப்பு உட்பட 6 மில்லியன் ரூபா செலவில் அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இதேபோல் வாசகர்களின் நலன் கருதி கொக்குவிலிலுள்ள பொது நூலகமும் 4 மில்லியன் ரூபா செலவில் அபிவிருத்தி செய்யப்பட்டு வருகின்றது. நூலகத்துக்கு வரும் வாசகர்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்து வருவதைத் தொடர்ந்து வாசகர், வசதியாக இருந்து பயன்பெறும் வகையில் மாற்றம் செய்யப்பட்டு வருகின்றது.

இதேவேளை, குளப்பிட்டியில் சிறிய கட்டடத்தில் இயங்கி வந்த ஆயுள் வேத வைத்தியசாலை மக்களின் வசதி கருதி காங்கேசன்துறை வீதியில் அமைந்துள்ள பொதுச் சந்தைக் கட்டடத்தின் ஒரு பகுதிக்கு மாற்றம் செய்யப்பட்டுள்ளது. இந்த வைத்தியசாலை வசதியான இடத்தில் சகல வசதிகளுடனும் இயங்கி வருவதால் நாளாந்தம் வரும் நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருவதாக செயலர்ளர் தெரிவித்துள்ளார். (த-ஜ-115)

## கிராம அலுவலரிடம் உள்ளன வாக்காளர் பட்டியல் விவரங்கள்

### முதலாம் தரம் மாணவர் அனுமதிக்கு பெற்றோர் அதனைப் பெறலாம்

கொழும்பு, ஜூன் 11

முதலாம் தரத்துக்கு மாணவர் அனுமதிக்கு விண்ணப்பிப்பதற்கு, வாக்காளர் பெயர்ப் பட்டியல் விவரங்களைக் கிராம அலுவலர் அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளமுடியும் என்று தேர்தல்கள் திணைக்களம் அறிவித்துள்ளது.

2017ஆம் ஆண்டு முதலாம் தரத்துக்கு மாணவர்களை அனுமதிப்பதற்குரிய விண்ணப்பங்களை முழுமை செய்யும்போது, அதில் பெற்றோரின் கடந்த 5 ஆண்டு கால வாக்காளர் பெயர்ப் பட்டியல் விவரங்கள் கோரப்படும்.

இந்தத் தகவல்களைப் பெற்றுக் கொள்வதற்குப் பலர் மாவட்ட தேர்தல்கள் திணைக்களத்துக்கு வருகை தருகின்றனர். இந்த விவரங்களை மாவட்டத் தேர்தல்கள் திணைக்களத்தில்தான் பெற்றுக் கொள்ள வேண்டும் என்பதில்லை. அதனை அவர்களது கிராம அலுவலரிடமே பெற்றுக் கொள்ள முடியும் என்று தேர்தல்கள் திணைக்களம் தெரிவித்துள்ளது. (த-வ-5)

## 1, 575 போத்தல் கோடாவுடன் சந்தேகநபரும் கைதானார்

கிளிநொச்சி, ஜூன் 11

வடிப்பதற்குத் தயாரான நிலையில் இருந்த ஆயிரத்து 575 போத்தல் கோடாவைக் கைப்பற்றியதோடு, அதனை வைத்திருந்த குற்றச்சாட்டில் ஒருவரையும் தாம் கைது செய்துள்ளனர் என்று தருமபுரம் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

தமக்குக் கிடைத்த இரகசியத் தகவலை அடுத்து, குறித்த இடத்துக்குச் சென்றபோது வடிப்பதற்குத் தயாரான நிலையில் 4 பரல்களில் இருந்த ஆயிரத்து 575 போத்தல் கோடாவையும், மோட்டார் சைக்கிள் ஒன்றையும் கைப்பற்றியதுடன் சந்தேகநபர் ஒருவரையும் கைது செய்தோம் என்றனர் பொலிஸார்.

அவ்வாறு கைது செய்யப்பட்ட சந்தேகநபர் கிளிநொச்சி நீதிவான் மன்றில் முன்னிலைப்படுத்தப்பட்டபோது நீதிமன்று அவரைப் பிணையில் விடுவித்ததாகவும் பொலிஸார் மேலும் கூறினர். (த-ஜ-21-ரி3)

## மகளைத் துஷ்பிரயோகம் செய்த நபரின் தேநீர்க் கடையை மூடுக

### தாயார் பகிரங்கக் கோரிக்கை

வவனியா, ஜூன் 11

நெடுங்கேணிப் பகுதியில் பாடசாலை மாணவி ஒருவரைத் துஷ்பிரயோகம் செய்தார் எனக் கூறப்படும் நபரின் தேநீர்க் கடையை மூடுவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு குறித்த சிறுமியின் தாய் கோரிக்கை விடுத்தார்.

குறித்த தேநீர்க் கடைக்குள் இன்னுமொரு சிறுமி மீது இவ்வாறான செயல் இடம்பெறக்கூடாது என்பதற்காகவே அதனை மூடுமாறு தான் கோரிக்கை விடுக்கிறார் எனவும் அவர் தெரிவித்தார்.

வவுனியா நெடுங்கேணிப் பகுதியில் உள்ள தேநீர்க் கடை உரிமையாளர் ஒருவரால் பாடசாலைச் சிறுமி ஒருவர் கடந்த மாதம் கடைக்குள் வைத்து துஷ்பிரயோகம் செய்யப்பட்டார் எனக் குற்றஞ்சாட்டப்பட்டது. இதனையடுத்துக் குறித்தகடையின் உரிமையாளர் வவுனியா பொலிஸாரால் கைது செய்யப்பட்டிருந்தார்.

துஷ்பிரயோகத்துக்கு உள்ளான சிறுமி வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வீடு திரும்பியுள்ளார்.

"பாடசாலையின் முன்னால் உள்ள குறித்த தேநீர்க் கடை உரிமையாளர் எனது மகளுக்குப் போதைமருந்து கலந்த லேகியத்தை இனிப்பு எனக் கொடுத்து துஷ்பிரயோகத்தில் ஈடுபட்டுள்ளார். இந்தச் சம்பவத்தின் பின் மகள், அம்மா எனக்கு அந்தக் கடையை பார்த்தாலே பயமாக இருக்கிறது. நான் பாடசாலை போகவில்லை எனக் கூறுகின்றார்.

எனது மகளுக்கு நடந்த இந்தக் கொடுமையான சம்பவம் இனி எந்தக் குழந்தைக்கும் நடக்கக்கூடாது. எனவே இந்தத் தேநீர்க் கடை கட்டாயம் மூடப்படவேண்டும்.

எனது மகள் உடல் ரீதியாகவும், உள ரீதியாகவும் பாதிக்கப்பட்டுள்ளதால் அவளுக்கு உளவியல் ரீதியான ஆற்றுப்படுத்தல் தேவையானதாக இருக்கிறது- என்றார். (த-ஜ-21)

தேசிய போசணை மாதம் - ஜூன் - 2016

- உணவில் ருசியை அதிகரிக்க எண்ணெயில் பொரித்தல், அதிக உப்புச் சேர்த்தல் என்பவற்றைத் தவிர்ப்போம்.
- வாசனைத் திரவியங்களின் வகி பாகம் உணர்வோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தின் தீர்மானங்களும் கையாலாகாதவை

## கரந்தாய் மக்கள் குற்றச்சாட்டு

கிளிநொச்சி, ஜூன் 11

ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் எடுக்கப்படும் தீர்மானங்களும் கையாலாகாதவையே. அவற்றினால் எந்தப் பயன்களும் கிடைக்கப் போவதில்லை எனக் கிளிநொச்சி – கரந்தாய் மக்கள் குற்றம் சாட்டியுள்ளனர்.

தமது காணிகளைத் தம்மிடம் ஒப்படைக்கவேண்டும் என்று மக்கள் கோரிவரும் விடயம் பூதாகரமாகியுள்ள நிலையில், அதனைத் தருவதாக ஒருங்கிணைப்புக் கூட்டத்தில் அவர்களுக்குக் கூறப்பட்ட போதும் இதுவரை எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை எனப் பாதிக்கப்பட்ட மக்கள் தெரிவித்துள்ளனர்.

பளை, கரந்தாய் மக்களுக்குச் சொந்தமான காணி மீளவும் அவர்களிடமே பெற்று கொடுக்கப்படும் என்று கிளிநொச்சி மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானம் இன்று வரை கிடப்பில் போடப்பட்டுள்ளதாகவும் அவர்கள் சுட்டி காட்டியுள்ளனர்.

கிளிநொச்சி – பளை பிரதேச செயலாளர் பிரிவின் கீழ் உள்ள கரந்தாய் கிராமத்தில் 1976 ஆம் ஆண்டு காணிச் சீர்திருத்த ஆணைக்குழுவால் மக்களுக்கு காணிகள் வழங்கப்பட்டன. இந்தக் காணிகளைத் தற்போது தெங்கு உற்பத்திச் சபையினர் தமக்குச் சொந்தமான காணிகள் எனத் தெரிவித்து, அங்கு மீளக்குடியமர்ந்த மக்களை அங்கிருந்து வலுக்கட்டாயமாக வெளியேற்றியிருந்தனர்.

இது தொடர்பாகக் கிளிநொச்சி நீதிவான் மன்றிலும் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

பின்னர் இந்தப் பிரச்சினை தொடர்பாக மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தின்போது, ஆராயப்பட்டு குறித்த காணி மக்களுக்குச் சொந்தமான காணிதான் எனவும், இந்தக் காணியை அடாத்தாகவே தெங்குப் பயிர்ச்செய்கைச் சபையினர் பிடித்து வைத்திருக்கின்றார்கள் என்றும், அவர்களால் அத்துமீறிக் கையகப்படுத்தி வைக்கப்பட்டுள்ள காணியை மீண்டும் மக்களிடமே கைளிக்கப்படவேண்டும் என்றும் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் இணைத்தலைவர்களால் தீர்மானிக்கப்பட்டது.

இந்தத் தீர்மானம் நிறைவேற்றப்படாத நிலையில் மீண்டும் ஒரு முறை மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தின்போது குறித்த விடயம் தொடர்பாக மீண்டும் ஆராயப்பட்டிருந்தது.

இதன்போது தெங்குப் பயிர் செய்கைச் சபையினர் குறித்த காணிகளில் தென்னங்கன்றுகளை நாட்டியுள்ளனர். எனவே அந்த காணிகளுக்குப் பதிலாக வேறு காணிகள் மக்களுக்கு வழங்கப்படும் எனத் தெரிவித்ததாகப் பளை பிரதேச செயலாளர் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுத் தலைவர்களிடம் தெரிவித்திருந்தார்.

இதன்போது அந்தக் காணிகள் மக்களுடைய காணிகள் என்பதால் தென்னங்கன்றுகளுடனேயே மக்களிடம் ஒப்படைக்கப்படவேண்டும் என்றும் தீர்மானிக்கப்பட்டிருந்து. ஆனால் இன்று வரை குறித்த காணிகள் மக்களுக்கு வழங்கப்படவில்லை. இதனாலேயே கரந்தாய் கிராமத்தைச் சேர்ந்த மக்கள் விசனம் வெளியிட்டுள்ளனர். (த-ஜ-21-ரி3)

---

# குடாநாட்டில் போசாக்கின்மையை ஒழிப்பதற்கான திட்டம் ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஜூன் 11

குடாநாட்டில் போசாக்கற்ற நிலையை ஒழிப்பதற்காக, தனியே சுகாதாரத் துறையை மட்டுமன்றி, ஏணைய துறைகளையும் இணைத்துச் செயற்படுத்துவது தொடர்பிலான கூட்டம் யாழ்.மாவட்ட செயலத்தில் நேற்று இடம்பெற்றது.

ஜனாதிபதியின் பணிப்புரைக்கு அமைவாக, நாட்டில் போசாக்கு மட்டத்தை அதிகரித்து போசாக்கற்றவர்களின் சதவிகிதத்தை குறைப்பதை அடிப்படையாக கொண்ட தேசிய வேலைத்திட்டம் யாழ்.மாவட்டத்தில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

சுகாதார அமைச்சு மற்றும் ஜனாதிபதி செயலகத்தின் ஏற்பாட்டில் நாடு முழுவதுவும் நடைமுறைப்படுத்தப்படும் இந்தச் செயற்திட்டத்தை யாழ்ப்பாணத்தில் ஆரம்பிக்கும் நிகழ்வு யாழ். மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் மாவட்டச் செயலாளர் நா.வேதநாயகன் தலைமையில் நேற்று நடைபெற்றது.

யாழ். மாவட்டத்தில் காணப்படும் போசாக்குக் குறைபாடுகளை நிவர்த்தி செய்து, போசாக்கை மேம்படுத்துவது தொடர்பில் சுகாதார அமைச்சிலிருந்து வருகைதந்திருந்த வளவாளர்களினால் விரிவுரைகள் இதன்போது இடம்பெற்றது.

யாழ்.மாவட்ட மேலதிக செயலாளர் செந்தில் நந்தனன், பிரதேச செயலாளர்கள் மற்றும் துறை சார் அதிகாரிகள் உள்ளிட்ட பலரும் இதில் கலந்து கொண்டனர். (த-வ-4,101,106)

# பரீட்சை மண்டபம் இடமாற்றம்

யாழ்ப்பாணம், ஜூன் 11

இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தினால் நடத்தப்படும் சிங்களமொழிக் கற்கைநெறிக்கான தரப்படுத்தல் பரீட்சை மண்டபம் இடமாற்றப்பட்டுள்ளதாக யாழ். பிராந்திய நிலைய உதவிப் பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு யாழ். பல்கலைக்கழகத்தில் நடைபெற இருந்த பரீட்சையானது, இடவசதியைக் கருத்திற் கொண்டு யாழ். பல்கலைக்கழக வெளிவாரிப் பட்டப் படிப்புக்கள் அலகின் பரீட்சை மண்டபத்துக்கு மாற்றப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார். (வ-ரி)

---

## நெஞ்சைவிட்டகலாத 12ஆம் ஆண்டு நினைவலைகள்

மண்ணில் 08 • 04 • 1972

விண்ணில் 11 • 06 • 2004



அமரர்
**அம்புரோஸ் அலெக்ஸ்புறுஸ்ரன் (ஜெனி)**

வானுறையும் தெய்வத்தினுள் சங்கமமாகிய
எங்கள் குடும்பத்தின் தலைவனே!
பாசத்தின் பிறப்பிடமாய், பண்பின் உறைவிடமாய்
இப்பாரினில் வாழ்ந்த எம் பாசமிகு தெய்வமே!
எம்மையெல்லாம் துன்பக்கடலிலே தவிக்கவிட்டு
நின்னுயிர் நீத்த மாயம் தான் என்ன?
ஆண்டுகள் பன்னிரண்டு ஆனபோதிலும்
பறந்து சென்ற உம் அன்பினைப் பிரிவதனால்
சோகத்தில் நாமிங்கு தவிக்கின்றோமே.
எத்தனை எத்தனை பொழுதுகள் இங்கு ஆனபோதும்
உங்களுக்கு நிகர் தான் எதுவோ
உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

(C/21864)(10.17)

வெற்றிலைக்கேணி,
முள்ளியான்.

நீங்கா நினைவுகளுடன்
மனைவி, பிள்ளைகள்.

---

இம்முறை தனயோகம் உங்களுடையதா?

| திகதி | வெற்றி வாரம் | வர்ணம் |
| --- | --- | --- |
| 10.06.2016 | 1989 | சிவப்பு |

இடபம்
வெற்றி இலக்கங்கள்
16 24 34 59

ஞாயிற்றுக்கிழமை வெற்றிப்பொதி
ரூ 27,04,460 /-

தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>LW என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும்.
அவசர துரித அழைப்பு: 1919

2016.06.12 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை ஜயா நிற டிக்கட்டுக்களாகும்.
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

கோடிபதி ஷனிதா
வெற்றி வாரம் 018
2016-06-10

அடுத்த செவ்வாய்க்கிழமை சுப்பர் பரிசுப் பொதி
ரூ.83,488,240/-

2016-06-14 செவ்வாய்க்கிழமை தோஸ் நிற டிக்கட்டுக்களாகும்.
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

ஆங்கில எழுத்து மற்றும் வெற்றி இலக்கங்கள்
Y 14 26 49 53

தொ.பே: 011 4 062 002 / 011 4 062 062 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>SF என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும்.
அல்லது துரித அழைப்பு: 011 4 824 824

நியத்த ஜய

| வெற்றி வாரம் | 469 |
| --- | --- |
| திகதி | 10.06.2016 |
| வர்ணம் | நீலம் |

17 18 26 44 S

எதிர்வரும் செவ்வாய்க்கிழமை ஜக்பொட் பரிசுத்தொகை
ரூ 10,433,000/=

தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>NJ
1919 இற்கு அனுப்பவும்.
Tel: 011 4 824 824

2016.06.14 ஆம் திகதி வெள்ளிக்கிழமை

---

## யா/நயினாதீவு ஸ்ரீ கணேச கனிஷ்ட மகா வித்தியாலய பழைய மாணவர் சங்கம்

விஷேட கலந்துரையாடலும் ஒன்று கூடலும் – 2016

**இடம் :** யா/நயினாதீவு ஸ்ரீ கணேச கனிஷ்ட மகா வித்தியாலய பொது மண்டபம்.
**காலம் :** 12.06.2016 ஞாயிற்றுக்கிழமை
**நேரம் :** முற்பகல் 10.00 மணி
**விடயம் :** வித்தியாலய பழைய மாணவர்களுடனான கலந்துரையாடலும் ஒன்று கூடலும்.

விஷேட கலந்துரையாடலும் ஒன்று கூடலும் நிகழ்வில் நயினாதீவு ஸ்ரீ கணேச கனிஷ்ட மகா வித்தியாலயத்தில் கல்வி பயின்ற அனைத்துப் பழைய மாணவர்களையும், நலன் விரும்பிகளையும் கலந்து கொள்ளுமாறு அன்புரிமையுடன் கேட்டுக் கொள்கின்றோம்.

செல்வி ரிஷிதா இராஜேஸ்வரன்
செயலாளர்
பழைய மாணவர் சங்கம்,
யா/நயினாதீவு ஸ்ரீ கணேச கனிஷ்ட வித்தியாலயம் நயினாதீவு.

திருமதி யோ.திரவியநாதன்
அதிபர்
யா/நயினாதீவு ஸ்ரீ கணேச கனிஷ்ட வித்தியாலயம்
நயினாதீவு.

---

## யாழ்ப்பாணம் மாநகர சபை

**வளிச்சீராக்கிகள் ( Air conditioners ) சேவிஸ், திருத்தம் செய்வதற்கான கூறுவிலை கோரல்.**

யாழ்ப்பாணம் மாநகரசபை மற்றும் பொது நூலகத்தில் காணப்படுகின்ற வளிச்சீராக்கிகளினை (Air conditioners) முழுமையாக ஒரு வருடத்திற்கு திருத்தம், சேவிஸ் செய்வதற்கு நிபுணத்துவம் வாய்ந்த நிறுவனங்களிடமிருந்து கூறுவிலைகள் கோரப்படுகின்றன. மேற்படி சேவையினை வழங்கக்கூடிய நிறுவனங்கள் 13.06.2016 ஆம் திகதி தொடக்கம் 16.06.2016 ஆம் திகதி புதன்கிழமை நண்பகல் 12.00 மணிவரை கூறுவிலைப் படிவங்களினை மாநகரசபையின் கொள்வனவுப் பகுதியில் பெற்று பூர்த்தி செய்து கடித உறையிலிட்டு உறையின் இடதுபக்க மேல் மூலையில் 'வளிச்சீராக்கி திருத்தம், சேவிஸ் செய்வதற்கான கூறுவிலை' எனக் குறிப்பிட்டு 'ஆணையாளர் மாநகரசபை யாழ்ப்பாணம்.' என்ற முகவரிக்கு 20.06.2016 ஆம் திகதி நண்பகல் 12.00 மணிக்கு முன்பதாக கிடைக்கக் கூடியவாறு அனுப்பி வைக்கவும்.

பொ.வாகீசன்
ஆணையாளர்
மாநகரசபை
யாழ்ப்பாணம்.

---

## வீடு வாடகைக்குத் தேவை

4பேர் கொண்ட குடும்பத்துக்கு வீடு வாடகைக்குத் தேவை.
இடம் : நல்லூர், திருநெல்வேலி, யாழ்ப்பாணம், கந்தர்மடம், கச்சேரி, கொக்குவில்.
தொடர்பு: 077 290 6703

## பணிப்பெண் தேவை

கைதடியில் தங்கிநின்று வீட்டு வேலை செய்வதற்குப் பணிப்பெண் தேவை.
077 222 4918

## விற்பனைக்கு

ஒரு வயது நிரம்பிய ஜேர்மன் செப்பேட் ஆண், பெண் நாயும், பொமேரியன் ஆண், பெண் நாயும், 60 நாள் பூர்த்தியான பொமேரியன் ஆண், பெண் குட்டிகளும், டாசோன் ஆண், பெண் குட்டிகளும், ஒரு வருட ஜமுனா பாறி ஆட்டுக் கிடாய்களும் விற்பனைக்கு உண்டு.

தொடர்பு
மயூரன் பாம் சென்ரர்
நீர்வேலி கந்தசாமி கோவிலடி பின்வீதி
077 015 8690

## பெயர் மாற்றம்

இல.53 புதியகடற்கரை வீதி குருநகர் யாழ்ப்பாணத்தில் வசிக்கும் யாங்கிராஸ் சினுவைராஜா ஆகிய நான் இன்றிலிருந்து எனது பெயரை யாங்கிராஸ் பத்தினாதர் என பெயர்மாற்றி கொள்வதுடன் இனிவரும் காலங்களில் சகல ஆவணங்களிலும் பத்தினாதர் என்றே கையொப்பமிடுவேன் என அறியத்தருகிறேன்.

பத்தினாதர்.

## உடனடி வேலைவாய்ப்பு

எமது அமெரிக்க நிறுவனம் இலங்கையின் வடக்கில் ஆரம்பிக்கவிருக்கும் புதிய கிளைகளுக்கு O/L, A/L படித்த இளைஞர், யுவதிகள் தேவை!

- பயிற்சி அளிக்கப்பட்டு நிரந்தர தொழில் வாய்ப்பும், வெளிநாட்டு வேலை வாய்ப்பும் வழங்கப்படும்.
- பயிற்சியின் போது 12000/- 20000/-
- வயதெல்லை 18-30
- தங்குமிட வசதிகள் உண்டு
- முன் அனுபவம் அவசியமற்றது

இன்றே அழையுங்கள் : 077 7009820, 077 2302795

20 வருடங்களுக்கு மேலாக இலங்கை முழுவதும் தமது கிளைகளை வியாபித்திருக்கும் Canadiyan Multinational Company இன் மேலும் விஸ்தரிக்கப்படவுள்ள Jaffna, Mannar, Vavuniya ஆகிய கிளைகளுக்கு முகாமைத்துவ பயிற்சியுடனான பல வேலைவாய்ப்புக்கள். பயிற்சியின் போது Earn - 12000 - 15000 /= பின் குறைந்தது 45000/= (தகைமைக்கேற்ப பேசித் தீர்மானிக்கப்படும்.)
தகைமை குறைந்தது O/L

077 999 4807, 076 699 4226

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# காசு மாலை அணிவித்து வெற்றிக் கொண்டாட்டம்

கொழும்பு, ஜூன் 11
நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்கவுக்கு எதிராக மகிந்த ஆதரவு அணியினரால் கொண்டு வரப்பட்ட நம்பிக்கையில்லாப் பிரேரணை தோற்கடிக்கப்பட்டதால், அமைச்சர் ரவி கருணாநாயக்கவின் ஆதரவாளர்கள் நேற்று முன்தினம் இரவு வெற்றிக் கொண்டாட்டத்தில் ஈடுபட்டனர்.
பத்திரமுல்ல - ஜயந்திபுரவிலுள்ள நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்கவின் இல்லத்துக்கு அருகிலேயே இந்த வெற்றிக் கொண்டாட்டம் இடம்பெற்றது.
இல்லத்தின் முன்னால் கூடியிருந்த சில ஆதரவாளர்கள் அமைச்சர் ரவி கருணாநாயக்கவுக்குக் காசு மாலை அணிவித்துக் கைதட்டி ஆரவாரம் செய்து தமது மகிழ்ச்சியைப் பகிர்ந்து கொண்டனர். (த-ஜ-5)

# கொஸ்கம வெடிவிபத்துடன் புலிகளுக்குத் தொடர்பில்லை

## இராணுவ உயர்மட்டம் கூறுகிறது

கொழும்பு, ஜூன் 11
கொஸ்கம - சலாவ இராணுவ ஆயுதக் கிடங்கில் ஏற்பட்ட வெடிவிபத்துக்கும் விடுதலைப் புலிகளுக்கும் தொடர்பு இருப்பதாக எந்தச் சான்றும் இதுவரை நடத்தப்பட்ட விசாரணைகளில் கண்டறியப்படவில்லை.
இவ்வாறு உயர்மட்ட இராணுவ அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.
இது அலட்சியத்தால் ஏற்பட்ட விபத்தா அல்லது திட்டமிட்ட செயலா என்று, விசாரணைகள் முடியும் வரை எந்த முடிவுக்கும் வர முடியாது என்றும் அந்த அதிகாரி குறிப்பிட்டார் எனக் கொழும்பு ஆங்கில ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.
இதற்கிடையே, வெடிவிபத்து ஏற்பட்ட சலாவ இராணுவ ஆயுதக் கிடங்கு, நீண்ட காலமாக உரிய வகையில் பராமரிக்கப்படவோ, கண்காணிக்கப்படவோ இல்லை என்றும் மற்றொரு இராணுவ உயரதிகாரி தெரிவித்தார்.
இந்த ஆயுதக் கிடங்கு முற்றிலும், நிலத்துக்குக் கீழ் அமைக்கப்பட்டதல்ல. மோட்டார் குண்டுகளும், ஏனைய வெடிபொருள்களும் தரைத்தளத்தில் இருந்த கட்டடங்களிலேயே களஞ்சியப்படுத்தப்பட்டிருந்தன.
போரின் இறுதிக் கட்டத்தில், 2008-2009ஆம் ஆண்டு காலப் பகுதியில் இறக்குமதி செய்யப்பட்ட கனரக ஆயுதங்கள், குண்டுகள், வெடி பொருள்களே அங்கு சேமிக்கப்பட்டிருந்தன.
இவற்றில் உற்பத்தியின்போது சேதமடைந்தவையும் இருந்திருக்கலாம். ஆயுதக் கிடங்குகள், இரண்டு வாரங்களுக்கு ஒருமுறை திறக்கப்பட்டு ஆய்வு செய்யப்படவேண்டும்.
திடீரென அதிகரிக்கும் வெப்பநிலை, வெடிப்புகளை ஏற்படுத்தலாம் என்பதால், அதனைத் தடுப்பதற்குக் குளிர்ச்சியான ஜெலி போன்ற பொதிகள் வெடி பொருள் பெட்டிகளில் வைக்கப்படுவது வழக்கம் என்றும் அந்த இராணுவ அதிகாரி தெரிவித்தார். (த-ஜ-5)

# நகரை தூய்மையாக்கும் திட்டம்; வரியிறுப்பாளர்கள் ஒத்துழைப்பு

சாவகச்சேரி,ஜூன் 11
'நகரத்தைத் தூய்மையாக்குவோம்' திட்டத்தை அறிமுகப்படுத்திய பின்னர் வீதிகளில் கண்ட இடங்களில் குப்பை கொட்டுவதை, சாவகச்சேரியில் வரியிறுப்பாளர்கள் குறைத்துள்ளனர் என்று சாவகச்சேரி நகர சபையின் செயலாளர் தெரிவித்தார்.
"சாவகச்சேரி நகரசபையின் 'நகரத்தைத் தூய்மையாக்குவோம்' திட்டத்துக்கு வரியிறுப்பாளர்கள் ஒத்துழைப்பு வழங்குகின்றனர்.
தினமும் இடம்பெறும் குப்பை அகற்றலுக்கு மக்கள் முழு ஆதரவு வழங்கித் திண்மக் கழிவுகளை அப்புறப்படுத்த உதவுகின்றனர்.
இதுவரை காலமும் பிற்பகல் வேளைகளில் நகரப் பகுதியில் மட்டும் இடம்பெற்று வந்த குப்பை அகற்றல் விரைவில் பிற்பகல் வேளைகளிலும் வட்டாரங்களில் மேற்கொள்ளப்படவுள்ளன.
மேலும் சபை எல்லைக்குட்பட்ட சனசமூக நிலையங்களில் பொதுமக்களுக்கான கலந்துரையாடல்களை நடத்தி, சபையின் திட்டத்தைச் சிறப்புற நடத்தி சாவகச்சேரி நகரைத் துப்புரவாக வைத்திருந்து, யாழ். மாவட்டத்தில் முன்மாதிரியான சபையாகத் திகழ நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றும் சபையின் செயலாளர் கா.சண்முகதாசன் தெரிவித்தார்.
அத்துடன் தணங்களப்பு வீதியில் உள்ள சபையின் இறுதித் திண்மக் கழிவகற்றல் இடத்தில் பொதுமக்கள் வீதியோரங்களில் போட்டு வந்த திண்மக் கழிவுப் பொருள்களைத் தாமாக முன்வந்து வாகனங்களில் கொண்டு வந்து கொட்டுகின்றனர்.
இதனால் சபையின் வேலைப்பளு குறைவடைந்துள்ளதுடன் நகரைத் தூய்மையாக வைத்திருக்கும் திட்டத்தை நடைமுறைப்படுத்தக் கூடியதாக உள்ளதெனவும் தெரிவித்தார். (த-ஜ-9)

# பூகோள அமைதிச் சுட்டியில் இலங்கைக்கு இடம் 97

கொழும்பு, ஜூன் 10
பூகோள அமைதிச் சுட்டியில், இலங்கை ஒரே ஆண்டில் 18 இடங்கள் முன்னேறி, 97 ஆவது இடத்தைப் பிடித்துள்ளது.
பொருளாதார மற்றும் அமைதிக்கான நிறுவகத்தால் ஆண்டு தோறும் வெளியிடப்பட்டு வரும், பூகோள அமைதிச் சுட்டி- 2016 என்ற தரவரிசைப் பட்டியலிலேயே இலங்கை 97 ஆவது இடத்தைப் பிடித்துள்ளது.
163 நாடுகள் வரிசைப்படுத் தப்பட்டுள்ள இந்தப் பட்டியலில் கடந்த ஆண்டைவிட இந்த ஆண்டு இலங்கை 18 இடங்கள் முன்னேறியுள்ளது.
இந்தப் பட்டியலில், மிகவும் அமைதியான நாடாக - ஐஸ்லாந்து முதலிடத்தில் உள்ளது.
அதையடுத்து டென்மார்க், ஒஸ்ரியா ஆகிய நாடுகள் உள் ளன.
கடைசி இடத்தில் சிரியா உள்ளது. தென் சூடான், ஈராக், ஆப் கானிஸ்தான், சோமாலியா ஆகிய நாடுகள் கடைசி வரிசை யில் உள்ளன.
கடந்த ஆண்டைவிட இரண்டு இடங்கள் முன்னேறியுள்ள இந்தியா 141ஆவது இடத்தில் உள்ளது.
தெற்காசிய நாடுகளில், பூட்டான் 13ஆவது இடத்திலும், நேபாளம் 78ஆவது இடத்திலும், பங்களாதேஷ் 83ஆவது இடத்திலும், பாகிஸ்தான் 153 ஆவது இடத்திலும், ஆப்கானிஸ்தான் 160ஆவது இடத்திலும் உள்ளன. (ற-ஜ-5)

## தமிழருக்குச்

இவ்வாறு பிரிட்டன் தூதுவர் ஜேம்ஸ் டௌவ்ரிஸிடம் வலியுறுத்தினார் வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன்.
இரண்டு நாள் பயணமாக யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்த இலங்கைக்கான பிரிட்டன் தூதுவர், நேற்றுக் காலை வடக்கு மாகாண முதலமைச்சரை, அவரது அலுவலகத்தில் சந்தித்துக் கலந்துரையாடினார்.
இந்தச் சந்திப்பு தொடர்பில் முதலமைச்சர் தெரிவித்ததாவது:
எமது மதம், மொழி, இடம், கலாசாரம், பண்பாடுகள் தமிழர் - சிங்களவர் இடையே பல வேற்றுமைகள் இருக்கின்றன. அதற்கு ஏற்றவாறு நாம் நடவடிக்கைகளை மேற்கொள்ள எமக்கு இடமளிக்கப்பட வேண்டும்.
எமது பொருளாதார விருத்தியை நாமே நடைமுறைப்படுத்த எமக்கு அதிகாரமளிக்க வேண்டும். அதில் மத்திய அரசின் உள்ளீடுகள் குறைவாக இருக்க வேண்டும் என்று வலியுறுத்தியுள்ளேன்.
வடக்கு மாகாணத்தில் நிலவும் பிரச்சினைகள் மற்றும் சமாதானம் ஏற்படுவது சம்பந்தமாகவும், சமாதான நடவடிக்கைகள் எந்தளவிற்கு நன்மை அளித்துள்ளது என்பது பற்றியும் தூதுவர் விரிவாகக் கேட்டார்.
இதுவரை காலமும் மத்திய அரசினால் கொண்டு வரப்பட்ட சட்டங்கள், எடுத்துக்கொள்ளப்பட்ட தீர்மானங் கள் அனைத்தும் நன்மை பயப்பதாக இருப்பதை ஏற்றுக்கொள்கின்றீர்களா? எனவும் பிரித்தானிய தூதுவர் கேள்வி எழுப்பினார்.
அதனை ஏற்றுக்கொள்கின்றேன். அதில் எந்தவிதமான பிரச்சினைகளும் இல்லை. ஆனால் எமது பிரச்சினைகளைத் தீர்ப்பதில் காலதாமதம் ஏற்படுவதையும் சுட்டிக்காட்டினேன். எம்மிடம் கலந்தாலோசிக்காது நடவடிக்கைகள் எடுப்பதும், திட்டங்களைச் செயற்படுத்துவதும், எமக்குப் பிரச்சினைகளை உருவாக்குகின்றது என்றும் தெரிவித்தேன்.
அரசமைப்புக் குறித்து எவ்வாறான தீர்மானங்களையும் எதிர்பார்ப்புக்களையும் கொண்டுள்ளீர்கள் என்று தூதுவர் மீண்டும் கேள்வி எழுப்பினார்.
எமது தீர்மானங்களை நாடாளுமன்ற சபாநாயகரிடம் கையளித்துள்ளோம். ஆனால், எமக்குப் போதுமான அளவு சுயாட்சிக்குரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்று வலியுறுத்தியுள்ளேன்.
வடக்கு மாகாண மக்களையும் ஏனைய மாகாண மக்களையும் நேரடியாக எடுத்துப் பார்த்தால் எமது மக்களிடையே காணப்படும் வேற்றுமைகளும் வித்தியாசங்களும், பலவிதத்தில் காணப்படுகின்றன.
இதனடிப்படையில் அரசமைப்பு மாற்றங்கள் ஏற்பட வேண்டும், அந்த மாற்றங்களை ஏற்படுத்தாவிடின், தொடர்ந்தும் இந்தப் பிரச்சினைகள் எதிர்காலத்திலும் நீடிக்கும். ஆகையால், நீதியான, பலவருடங்கள் நீடிக்கக் கூடிய தீர்வைப் பெற்றுக்கொள்ள வழி வகுக்க வேண்டுமென்றும் பிரிட்டன் தூதுவரிடம் வலியுறுத்தினேன் - என்றார். (வ-4,106,101)

அறைகள்,வீடு வாடகைக்கு உண்டு
இல - 01, 2ஆம் ஒழுங்கை, பலாலி வீதி, யாழ்ப்பாணத்தில் நான்கு மாடிகளுடன் கூடிய புதிய வீடு வாடகைக்கு உண்டு. ஒவ்வொரு தளத்திலும் நான்கு அறைகள், ஒரு சமையல் அறை இரண்டு குளியலறைகள் என்பன உண்டு.
மாணவர்களுக்கும், உத்தியோகத்தர்களுக்கும் மற்றும் சுற்றுலாப் பயணிகளுக்கும் தனிஅறைகளாகவும் நாள், கிழமை, மாத அடிப்படையில் பிரித்துக் கொடுக்கப்படும்.
(J 2022) (14,17,18)
தொடர்பு : 077 666 4674

கணக்காளர் தேவை
சாவகச்சேரி கல்லுடைக்கும் ஆலைக்கு கணக்காளர் தேவை. 50 வயதுக்கு மேற்பட்டவர்கள் விரும்பத்தக்கது.
077 314 4756

வீடு விற்பனைக்கு
இல.33, பழைய பூங்காவீதி, கொய்யாத் தோட்டம் என்னும் முகவரியில் அமைந்துள்ள 3 அறைகளுடன் கூடிய வீடு விற்பனைக்கு உண்டு.
தொடர்புகளுக்கு: ந.சிவகுமார்
021 224 1374, 076 726 6775

காணி விற்பனைக்கு உண்டு
பெரியவிளான் ¼ kmருக்கு அருகில் உள்ள தெல்லிப்பழை வீதியில் மெயின்றோட் அருகில் வற்றாத வெட்டுக் கிணற்றுடன் 40 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.
தொடர்புகளுக்கு
ம.அருளப்பு- 077 945 9186

வேலைவாய்ப்பு
மீசாலையில் இயங்கும் மெடிக்கல் கிளினிக்கில் வேலை செய்வதற்கு O/L படித்த பெண்கள் தேவை.
076 535 9284

விற்பனைக்கு
அல்சேசன், ஜேர்மன் செப்பேட், ஒரு தடுப்பூசி போடப்பட்ட பொமனேரியன் நாய்க்குட்டிகளும் விற்பனைக்குள்ளன.
தொடர்பு: 077 101 6407

வீடு வளவு விற்பனைக்கு
இராசபாதை, கரந்தன் சந்தியில் இருந்து மேற்குப் பக்கமாகப் போகும் றோட்டில் இரண்டாவது முடக்கில் கோயிலுக்கு வடக்கே சுற்று மதிலுடன் 3 பரப்புக்காணி புதிய வீட்டுடன் மின்சார வசதி, குழாய்க் கிணறு, பங்காக உரிய வெட்டுக்கிணறு வழிவாய்க்கால் பாவிப்பு உரித்துடன் விற்பனைக்குண்டு.
077 978 3206

Spoken English
3 மாதங்களில் ஆங்கிலத்தில் சரளமாகக் கதைக்கப் பயில வாரம் 4 வகுப்புகள் மாதக் கட்டணம் 2000/=
ந.விக்னேஸ்வரன் ஆச்சாரி
(Dip in English and Science London)
424/3,K.K.S., வீதி, யாழ்ப்பாணம்.
பிளாக் வீதி, சங்கானை.
077 675 1649 (13,18)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ரவி மீதான பிரேரணை அரசியல் நோக்குடையது

## அமைச்சர் ரிசாத் கூறுகிறார்

**நாட்டைப் பொருளாதாரப் பிரச் சினைகளுக்கு ஆட்படுத்தியுள் ளதாக, நிதியமைச்சர் ரவி மீது பொய்யான குற்றச்சாட்டுகளை சுமத்துவதை கைவிட்டு, எதிர்க் கட்சியினர் அபிவிருத்திப் பாதையில் இதனை இட்டுச்செல்வதற்கு முன்வரவேண்டும்.**

மன்னார், ஜூன் 11

நிதியமைச்சர் ரவி கருணா நாயக்க மீது கொண்டு வரப்பட்ட நம்பிக்கையில் லாப் பிரேரணை வெறு மனே அரசியல் நோக்கம் கொண்டது. நல்லாட்சி அரசு மேற்கொண்டுவரும்நடவடிக் கைகளை முடக்குவதே எதிர்த் தரப்பினரின் நோக்கம்.

இவ்வாறு கைத்தொழில் அமைச் சர் ரிசாத் பதியுதீன் தெரிவித்தார்.

நாடாளுமன்றில் நேற்றுமுன் தினம் இடம்பெற்ற நிதியமைச் சருக்கு எதிரான நம்பிக்கையில் லாப் பிரேரணை குறித்த விவா தத்தில் கலந்துகொண்டு உரை யாற்றியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

கடந்த அரசின் ஆடம்பரமான செலவுகள் மற்றும் வெளிநாட் டுக் கடன்களால் இந்த நாட்டிலே முரணான சூழல் ஒன்று ஏற்பட் டிருப்பதை நாம் இன்னும் கண் ணாரக் காண்கின்றோம்.

இலங்கையில் புதிய சகாப்தம் ஒன்று ஏற்பட்டிருக்கின்றது. சுதந் திரமும், நல்லாட்சியும் இப்போது தான் மலர்ந்திருக்கின்றன. கடந்த காலத்தை நாம் இலகு வில் மறந்துவிட முடியாது. சர் வதேச சமூகத்தின் நெருக்கடிக்கு உள்ளாக்கப்பட்டோம்.

எமது பொருளாதாரம் சிதைந்து போனது. உற்பத்தியாளர்களும், ஏற்றுமதியாளர்களும், தனி யார் துறையினரும் தமது வர்த் தகத்தில் படிப்படியாக நம்பிக் கையை இழந்தனர்.

இந்தச் சவால்களை வெற்றிகர மாக முறியடித்து ஜனாதிபதியும், பிரதமரும் எங்களின் உதவி யுடன் நல்லாட்சியை உருவாக் கினர். தற்போது கருத்துச் சுதந் திரத்துக்கு முன்னுரிமை வழங் கப்பட்டுள்ளது.

சர்வதேச உறவுகள் பெரியள வில் வளர்ச்சிகண்டு வருகின் றன. வெளிநாடுகளின் நன்மதிப் பைப் படிப்படியாகப் பெற முடிந்தி ருக்கின்றது. நிதியமைச்சர் ரவி மீது இப்போது நம்பிக்கையில் லாப் பிரேரணையைக் கொண்டு வந்துள்ளனர். அவர் நாட்டின் பொருளாதாரத்தைப் பிழையான வழியில் கையாள்கிறார் எனவும், நாட்டைப் பொருளா தாரச் சீரழி வுக்கு உட்படுத்தி வருகிறார் எனவும் குற்றஞ்சாட்டப்பட்டிருகின்றார்.

கடந்த அரசின் ஆடம்பர நடவடிக் கைகளால் இந்த நாட்டில் ஏற் பட்ட பிழையான பொருளாதாரக் கொள்கைகளால் நாடு மோசமான நிலைக்கு தள்ளப்பட் டிருந்ததை இவர்கள் மறந்து விட்டார்களா? நல்லாட்சித் தலைவர்களுடன் இணைந்து நிதியமைச்சர் ரவி நாட்டை மீண்டும் பொருளாதார உறுதிப்பாட்டுக்கு கொண்டுவரப் பாடுபடுவது நமக்குத் துலாம் பரமாகத் தெரிகிறது.

கடந்த அரசு சர்வதேச நாடுகளி லிருந்து உயர் வட்டியில் கடனைப் பெற்றது. ஆனால் நிதியமைச் சரின் நடவடிக்கைகளினால், சர் வதேச நாணய நிதியம் எந்த நிபந்தனையுமின்றி நமக் குக் கடன்தர இணங்கியுள்ளது.

கடந்த அரசில் பொருளாதாரத் திட்டங்களால் எமது பணவீக்கம் 15 சதவீதமாகக் கூடியது. தனியாள் வருமானம் குறைந்து, குடும்பத் தின் பொருளாதாரச் சுமை அதி கரித்தது. இவ்வாறான ஒரு நிலை யிலேயே நாசமாக்கப்பட்ட ஒரு பொருளாதாரமே நல்லாட்சியின் கைகளுக்குள் வந்து வீழ்ந்தது.

நாட்டைப்பொருளாதாரப்பிரச்சினை களுக்கு ஆட்படுத்தியுள்ளதாக, நிதியமைச்சர் ரவி மீது பொய்யான குற்றச்சாட்டுகளை சுமத்துவதை கைவிட்டு, எதிர்க் கட்சியினர் அபி விருத்திப்பாதையில்இதனைஇட்டுச் செல்வதற்கு முன்வர வேண்டும். நிதியமைச்சர் ரவியின் பொருளா தாரச் சீர்திருத்தத்தின் மூலம், சீர ழிந்த பொருளாதாரத்தைத் தட்டி நிமிர்த்த முடியும்.-என்றார்.

(த-ஐ-56-2)

# ரவிக்கு எதிரான வாக்கெடுப்பில் பங்கேற்காத இரு அமைச்சர்கள்

கொழும்பு, ஜூன் 11

நிதியமைச்சர் ரவி கருணா நாயக்கவுக்கு எதிரான நம்பிக் கையில்லாப் பிரேரணை மீதான வாக்கெடுப்பில், இரண்டு முக்கிய அமைச்சர்கள் பங்கேற் கவில்லை. வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீரவும், அமைச்சர் ஜோன் செனி விரத் னவுமே வாக்கெடுப்பில் கலந்து கொள்ளவில்லை.

கோத்தபாய ராஜபக்சவை, சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் இரண்டாவது தலைவராக்கு வதற்கான பேச்சுக்கள் முன் னெடுக்கப்படுவதாக அறிவித்த அமைச்சர் ஜோன் செனிவிரத்ன அண்மைய நாள்களாகச் சர்ச் சைக்கு உள்ளாகியிருந்தார்.

ரவி கருணாநாயக்கவுக்கு எதி ரான நம்பிக்கையில்லாப் பிரே ரணையை எதிர்த்து வாக் களிப்பது என்று சிறிலங்கா சுதந்திரக் கட்சி தீர்மானித்தி ருந்ததுடன், ஆளும் கட்சியின் உறுப்பினர்கள் அனைவரும் தவறாது சபைக்கு வரவேண்டும் என்றும் அறிவிக்கப்பட் டிருந்தது.

எனினும், அரசில் இணைந்தி ருந்த சிறிலங்கா சுதந்திரக் கட்சி உறுப்பினர்கள் அனைவரும், பிரேரணைக்கு எதிராக வாக் களித்தபோதும், ஜோன் சென விரத்ன மட்டும் வாக்கெடுப்பில் பங்கேற்கவில்லை.

அதேவேளை, இந்த நம்பிக் கையில்லாப் பிரேரணையில் கையெழுத்திட்டிருந்த 35 நாடாளுமன்ற உறுப்பினர் களில் ஒருவரான, மகிந்த அணி யைச் சேர்ந்த சந்திரசிறி கஜ தீரவும் வாக்கெடுப்பில் பங்கேற் கவில்லை என்பது குறிப்பிடத் தக்கது. (த-ஐ-5)

# அங்கவீனமுற்ற படையினர் ரயிலில் பயணிக்கச் சலுகை

கொழும்பு, ஜூன் 11

அங்கவீனமுற்ற படையினர் சலுகை அடிப்படையில் ரயிலில் பயணிக்கலாம் என்று ரயில்வே திணைக்களம் தெரிவித்துள் ளது.

அத்துடன் அண்மையில் அர சால் இராணுவத்தினருக்கு வழங்கப்பட்ட சலுகை அட்டை களைப் பயன்படுத்தி அங்க வீனமடைந்த படையினருக்கு, ரயில் பற்றுச்சீட்டுக்காக 100 இற்கு 50 வீதம் என்ற சலுகை வழங்கப்படவுள்ளதாக ரயில் போக்குவரத்து அதிகாரி விஜய சமரசிங்க தெரிவித்தார்.

நாட்டில் உள்ள அனைத்து ரயில் நிலையங்களிலும் அங்கவீனமுற்ற படையினர் களுக்கான இந்தச் சலுகை யைப் பெறும் வாய்ப்பு உள்ள தாகவும் அவர் மேலும் குறிப்பிட் டார்.

(த-ஐ-5)

### ஆண்டு நிறைவும் ஒன்று கூடலும்

யாழ்ப்பாணம், ஜூன் 11

கருவி மாற்றுத் திறனாளிகளின் சமூகவள நிலை யத்தின் ஆண்டு நிறைவு விழாவும், அங்கத்தவர் ஒன்றுகூடல் நிகழ் வும்நாளைஞாயிற் றுக் கிழமை பிற் பகல் 3 மணிக்கு குருநகர் கலாசார மண்டபத்தில்நடை பெறவுள்ளது.

கருவி மாற்றுத்தி றனாளிகள் சமூக வள நிலையச் செயலாளர் து. யசிந்தன் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் பிரதம விருந்தி னராக யாழ்.மாந கரசபை ஆணை யாளர் பி.வாகீ சனும், சிறப்பு விருந்தினர்க ளாக யாழ்.சமூக சேவைத் திணைக் கள மாவட்ட உத்தி யோகத்தர் வைர வநாதனும், கிளி நொச்சி வலய உதவிக் கல்விப் பணிப்பாளர் எஸ்.ஸ்ரீக்குமரனும் கலந்து கொள் வர். (த-ஐ-ரி)


# INVITATION FOR BIDS
# JAFFNA MUNICIPAL COUNCIL

**Construction of Sewage Treatment Plant at Kakkaitivu in Jaffna.**
**Contract No : JMC / WD / 01 / CF.BU / 2016 / 42**

01. The Chairman Local Authority Procurement Committee on behalf of the Municipal Council, Jaffna Northern Province, invites sealed bids from eligible and qualified bidders for the Construction works described in the table below.
02. Bidding will be conducted through National Competitive Bidding Procedure.
03. To be eligible for contract award, the successful bidder shall not have been blacklisted and shall have been registered in the field of Building Construction for grade mentioned in the table below with the institute for Construction Training and Development (ICTAD).
04. Qualifications requirements are indicated in section 4 of the Bidding document. Additional details are provided in the schedule (Section 5) of the bidding document.
05. Interested bidders may obtain further information from the **Commissioner, Municipal Council Jaffna. (T.No : 021 222 2019 / Fax 021 222 2334)** on any working day from **0900 hrs to 1400 hrs from 15 June 2016.**
06. A complete set of Bidding Documents in English language may be purchased by interested bidders on the submission of a written application to the **Commissioner, Municipal Council, Jaffna from 15 June 2016 until 29 June 2016 from 0900 hrs to 1400 hrs upon paymet of a non - refundable fees of Rs. 2000.00.** The method of payment should be by cash.
07. Bids shall be delivered to the address below. The **Commissioner, Municipal Council, Jaffna on or before 1430 hrs on 29 June 2016.** Late Bids will be rejected. Bids will be opened at **10.00 hrs on 30 June 2016** in the presence of the Bidder's representatives who choose to attend.
08. Bids shall be accompanied by a Bid security as per the information given in the Table.

| Se. no | Bid No | Description of Work | Engineer's Estimated Cost / (Rs in million) | Estimated Cost with all Taxes / (Rs in million) | Contract Period | Required Grade | Required Bid Security | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | Security Amount | Valid Period |
| 1 | JMC / WD / 01 / CF.BU / 2016 /42 | Construction of Sewage Treatment Plant at Kakkaitivu in Jaffna | 19.150 | 24.225 | 4 months | C 6 or above | 190,000.00 | 91 days (till 28.09.2016) |

09. Pre bid meeting will be held at 10.00 hrs on 23 June 2016 in the Municipal Council Building, Jaffna. Interested bidders may attend the pre - bid meeting at their own expenses.

**Chairman, Local Authority Procurement Committee,**
**11.06.2016** **Municipal Council, Jaffna, Northern Province,**

(அ/21861)(11,17,18)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தமிழ்

அவை தொடர்பில் இறுதித் தீர்வு ஒன்றை எட்டும் நோக்கிலும் கொழும்பில் மீன்பிடி அமைச்சின் செயலாளர் தலைமையில் நேற்றுக் கலந்துரையாடல் ஒன்று இடம்பெற்றது. வடக்கின் சகல மாவட்டப் பிரதிநிதிகளையும் உள்ளடக்கிய வகையில் கூட்டம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அதில் கலந்துகொண்டிருந்த இராணுவ அதிகாரியின் கூற்றே அங்கு சலசலப்பை ஏற்படுத்தியது.

இந்தக் கலந்துரையாடலில் பெரிதும் சர்ச்சைக்குரிய விடயமாகவுள்ள முல்லைத்தீவு மாவட்டத்தில் வெளிமாவட்ட மீனவர்களால் மேற்கொள்ளப்படும் அத்துமீறிய மீன்பிடி தொடர்பிலும், தொடர்ந்தும் தென்னிலங்கை மீனவர்களின் ஊடுருவலால் மேற்கொள்ளப்படும் கரைவலைத் தொழில் தொடர்பிலும் நீண்ட நேரம் பேசப்பட்டது.

அதில் கலந்துகொண்டிருந்த ஓர் இராணுவ அதிகாரி, முல்லைத்தீவு மாவட்டத்தில் இடம்பெறும் பாடு வலை தொடர்பில் கருத்து கூறினார்.

முல்லைத்தீவில் 1956 ஆம் ஆண்டு தொடக்கம் சிங்கள மீனவர்களே அதிகளவில் பாடு தொழிலை மேற்கொண்டனர். அவர்களிடம் கூலித்தொழிலையே தமிழ் மீனவர்கள் மேற்கொண்டனர்.

இதற்குச் சான்றாக அரச வர்த்தமானியில், முல்லைத்தீவில் 86 பாடுவலைகளே உள்ளன. அவற்றினால் 40 க்கும் மேற்பட்டவை சிங்கள மீனவர்களுக்குரியவை எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. அந்த வர்த்தமானி அறிவித்தல் கைவசம் உண்டு. ஆனால் இதுவரை சேகரிக்கப்பட்ட ஆவணங்களில் தமிழ் மீனவர்களின் பாடுகள் தொடர்பில் 12 ஆவணங்களே உள்ளன என்று இராணுவ அதிகாரி தெரிவித்தார்.

இதன்போதே கூட்டத்தில் சலசலப்பு ஏற்பட்டது.

அதனை மறுத்துரைத்த மீனவர் சங்கப் பிரதிநி ஒருவர், திட்டமிட்டு தமிழ் மக்களின் தரவுகள் இருட்டடிப்புச் செய்யப்பட்டுள்ளதாகக் குற்றஞ்சாட்டினார்.

தனது முப்பாட்டன் காலத்திலிருந்து தொழில் புரிவது தொடர்பில் அவர் அதில் தெளிவுபடுத்தினார்.

அங்கு எந்தெந்தக் கிராமங்களில் எத்தனை தமிழர்களிடம் பாடு வலைகள் இருந்தன. எனது பாட்டன் காலம் முதல் பாடு தொழில் புரிகின்றபோதும், இன்று வரை அதற்கான வர்த்தமானி அறிவித்தலைக் காணவில்லை. எனவே வேண்டுமென்றே திட்டமிட்ட வகையில் தமிழ் மக்களின் பதிவுகள் இருட்டடிப்பு செய்யப்பட்டு மறைக்கப்படுகின்றன என்று அமைச்சர் முன்னிலையில் பகிரங்கமாகவே அவர் குற்றஞ்சாட்டினார்.

அத்துடன் எவ்வாறு தமிழர்களின் பதிவுகள் மட்டும் மறைக்கப்பட்டன என்றும் மீனவர் பிரதிநிதி கேள்வி எழுப்பினார்.

இதற்கு உரிய அதிகாரிகள் முறையான பதிலை வழங்கவில்லை என்பதோடு, தமிழ் மக்களின் கைவசம் போதிய ஆவணம் இல்லை எனவும் கூற முற்பட்டனர். இதன்போது குறுக்கிட்ட மாவட்டத்தின் மற்றுமோர் அதிகாரி, இது தொடர்பான உண்மையைத் தெரிவித்தார்.

வட பகுதியில் 1955 ஆம் ஆண்டு தொடக்கம் பாடு வலைத் தொழில் இடம்பெறுகின்றபோதிலும், அவை முதன் முதலாகப் பதிவு செய்யப்பட்டு அரச வர்த்தமானியில் பிரசுரிக்கும் பணி 1983 ஆம் ஆண்டில் தான் இடம்பெற்றது. இதே ஆண்டில் இலங்கையில் இடம்பெற்ற இனக்கலவரத்தின்போது அச்சம் காரணமாக அங்கிருந்து அவர்கள் வெளியேறிவிட்டனர்.

அதைவிட இருந்தவர்களிலும் பலர் பதியவில்லை. இதற்கான பணிகளை மேற்கொள்ள அப்போது கொழும்புக்கே செல்லவேண்டிய நிலை இருந்தமையினால், அதிக தமிழ் மீனவர்களின் பதிவு ஆவணங்களுக்கு என்ன நடந்தது என்பதே தெரியாது என அந்த அதிகாரி குறிப்பிட்டார்.

இதனை அடுத்து குறுக்கிட்ட கடற்றொழில் அமைச்சர், இந்த விடயம் தொடர்பாகவும், வெளிமாவட்ட மீனவர்களால் ஏற்படும் மீனவர்களின் பிரச்சினை தொடர்பிலும் குழு அமைக்கப்பட்டு ஒரு முழுமையான அறிக்கையை இரண்டு மாத காலப் பகுதியில் சமர்ப்பிக்கவேண்டும். அவ்வாறு சமர்ப்பிக்கப்படும் அறிக்கைகள் ஜனாதிபதி மற்றும் பிரதமரின் கவனத்துக்கு கொண்டு செல்லப்படவுள்ளதால், அதன் பணியை உடனடியாக ஆரம்பிக்குமாறு கூறி ஒரு குழுவையும் தெரிவு செய்தார்.

அந்தக் குழுவில், அமைச்சின் செயலாளர், மாவட்டக்கடற்றொழில்நீரியல்வளத்திணைக்கள அதிகாரி, பிரதேச செயலாளர், மீனவர் அமைப்பின் பிரதிநிதிகள், இராணுவம் மற்றும் கடற்படை அதிகாரிகள் உள்ளடக்கப்பட் டனர்.

தொடர்ந்து கருத்துரைத்த மீன்பிடி அமைச்சர், எனது ஏப்ரல் மாதத் தீர்மானத்தை மீறி, அதன் பிற்பாடு இடம்பெயர் மீனவர்களின் 128 படகுகள் முல்லைத்தீவு மாவட்டத்துக்குள்வந்தமை தொடர்பில் உடன் அறிக்கை சமர்ப்பிக்கவேண்டும் - என்றார்.

இதேபோன்றுயாழ்ப்பாணம், கிளிநொச்சி, மன்னார் மாவட்ட மீனவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பிலும் சுட்டிக்காட்டப்பட்டதோடு, மன்னார் மாவட்டத்துக்கு இடம்பெயர் தொழிலில் ஈடுபடும் தென்னிலங்கை மீனவர்கள், வரும்போது மாவட்டத்தின் எந்த அமைப்பிடமும்அனுமதி பெறாது வாடிகள் அமைத்து தொழில் புரிவதுடன், மீண்டும்வெளியேறும்போது வாடிகளை அகற்றாது வெளியேறுவது தொடர்பிலும் பிரஸ்தாபிக்கப்பட்டது.

இதன்போது, மாவட்டத்துக்கு தொழிலுக்கு செல்லும் போது மாவட்டத் திணைக்களத்துக்கும், பிரதேச மீனவ அமைப்புக்கும் தகவல் வழங்கியே ஆகவேண்டும். வெளியேறும்போது குறித்த வாடிகளை அகற்றிவிட்டே வெளியேறவேண்டும் எனவும் கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது.

இந்தச் சந்திப்பில் மீன்பிடி அமைச்சர், வடக்கு ஆளுநர், மீன்பிடிஅமைச்சின் செயலாளர், நீரியல் வளத் திணைக்களபணிப்பாளர் நாயகம், பிரதிப் பணிப்பாளர்கள், மாவட்ட செயலாளர்கள், ஆகியோர் கலந்து கொண்டனர்.

(த-வ-4-101)

## 18ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர் செல்வன்
துரைசிங்கம் தனேஸ்குமார்

அன்னை மடியில் 17.01.1980
ஆண்டவன் அடியில் 11.06.1998

காலங்கள் கடந்து செல்லச் செல்ல உன் இருப்பின் தேவை உணர்ந்து
உள்ளுர உடைகின்றோமடா சந்தோஷத்தில் மட்டுமல்ல
தவிக்கும் துயரத்தில் கூட நீ இருந்திருந்தால் என்று மட்டும்தான்
எம்மால் நினைக்க முடிகின்றதடா! கனவுகள் நிஜமாகின்றன காண்பதற்கு நீயில்லை
**உன் பிரிவால் துயருறும்.....**

அம்மா, அப்பா, அண்ணாமார், தம்பி,
தேவயானி, புஸ்பராணி - அண்ணிமார்
நிருபா - மைத்துனி,
கார்த்திகா, கம்ஷிகா, சர்மினா - பெறாமகள்மார்

கெருடாவில்,
சாவகச்சேரி.

## 5ஆம் ஆண்டு நினைவஞ்சலி

கணபதிப்பிள்ளை மகாலிங்கம்




தோற்றம் 13.04.1951
மறைவு 11.06.2011

அன்பின் திருவுருவே
பாசத்தின் இருப்பிடமே
ஆண்டுகள் ஐந்து ஓடி மறைந்தாலும்
ஆறவில்லை உம் பிரிவுத்துயர்
என்றும் உங்கள் நினைவுகளுடன் இவ்வுலகில் வாழ்கின்றோம்

சோதிவேம்படி லேன்,
மானிப்பாய்.
(J 2037) (14,17,18)
உங்கள் நினைவுகளுடன்
குடும்பத்தினர்.

## ஓராண்டு நினைவஞ்சலி



சின்னக்குட்டி கிருஷ்ணன்

மலர்வு 19.09.1946
திதி: 11.06.2016
உதிர்வு 26.05.2015

எம் குடும்பத்தின் குலவிளக்காய் ஒளிவீசியவரே
நீண்டகாலம் ஒளி தருவீர் என்று
எண்ணியிருக்க திடீரென்று ஒளியற்றுப் போனதேனோ?
எங்கு சென்றாலும் பயணம் சொல்வீர்களே
நீண்ட தூரம் செல்லும்போது சொல்லாமல் சென்றதேனோ?
உங்கள் திருமுகம் காண நீங்கள் சென்ற வழிநோக்கி
ஈரவிழிகளுடன் காத்திருக்கின்றோம்
எப்போது வருவீர்கள் எம் கவலை தீர்க்க?
என்றென்றும் உங்கள் நினைவுடன்...

செல்வமில் வீதி,
இமையாணன்,
உடுப்பிட்டி.

மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

## 4ஆம் மாத நினைவலைகளும் 7ஆம் ஆண்டு நினைவலைகளும்



சிவசுப்பிரமணியக் குருக்கள்
சிவகௌரி (கௌரிசிவம்)
மண்ணில் 20.10.1986
விண்ணில் 09.02.2016

அன்னம்மா
சிவசுப்பிரமணியக்குருக்கள்
மண்ணில் 27.03.1953
விண்ணில் 31.05.2009

எங்கள் குல விளக்குகளாக ஒளி வீசிய நீங்கள்
இருவரும் அணைந்த பின்பும் எங்கள்
மனங்களில் என்றுமே ஒளிவீசிக் கொண்டு இருக்கின்றீர்கள்!
ஏழேழு ஜென்மம் எடுத்தாலும் ஆறாத உம் இழப்பை
நாலாம் மாதத்திலும் ஏழாம் வருடத்திலும் எண்ணித் துடிக்கின்றோம்!
அம்மாவே அன்னம்மா! நீ உன் கடைக்குட்டி கௌரியை
அவள் தாயாகும் தருணமதில் உனதாக்கிக் கொண்டாயோ
ஒரு பிரிவைத் தாங்காத எம் இதயம் இரு பிரிவைத் தாங்கிடுமோ?
தவிக்கின்றோம் தளருகின்றோம்!
உங்கள் ஆத்மாவை கண்ணீரால் துதிக்கின்றோம்!
கேதாரேஸ்வரன் திருவடிகள் சேர உளமாரப் பிரார்த்திக்கின்றோம்!
ஓம் சாந்தி!

(K/78) (11,18)

37/3, சிவகிரி,
[illegible], கிளிநொச்சி.

குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மக்களின் ஒத்துழைப்பால் குறைந்துள்ளன குற்றங்கள்

## வடமராட்சி உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் தெரிவிப்பு



யாழ்ப்பாணம், ஜூன் 11
பொதுமக்களின் ஒத்துழைப்பாலும், ஊடகங்களின் கடமை உணர்வாலும் தற்போது குற்றங்கள் குறைக்கப்பட்டுள்ளன. ஆனால் பொதுமக்களின் ஒத்துழைப்பு இன்னும் அதிகமாக இருக்குமானால் குற்றச் செயல்களைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர முடியும்.
இவ்வாறு வடமராட்சி உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் ஜவ்வர் தெரிவித்தார்.
நெல்லியடிப் பொலிஸ் நிலையத்தில் மாதாந்த சிவில் பாதுகாப்புக் கூட்டம் நேற்றுமுன்தினம் நடைபெற்றது. இதில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
பொதுமக்கள் எமக்குத் தரும் ஆதரவினடிப்படையில் தற்போது குற்றங்கள் குறைக்கப்பட்டு வருகின்றன. முன்னைய காலங்களில் சில பொலிஸார் சட்டத்தை மீறும் வகையில் நடந்திருக்கலாம். ஆனால் தற்போது அவ்வாறு நடப்பதற்கான சந்தர்ப்பங்கள் இல்லை. பொலிஸார் சட்டத்தை மீறினால் பொதுமக்கள் உடனடியாக எனக்குத் தெரியப்படுத்தலாம். அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படும்.
பொலிஸார் சீருடை அணிந்த பொதுமகனாகவும், பொதுமக்கள் சீருடை அணியாத பொலிஸாராகவும் கைகோர்த்துச் செயற்படவேண்டும். தற்போது ரவுடிகளின் அட்டகாசம், வாள் வெட்டு என்பவை குறைக்கப்பட்டுள்ளன. சிலர் இன்னும் வடிசாராயம் விற்கின்றனர். இதை ஓரளவுக்குக் குறைத்துள்ள போதும் முற்றிலும் ஒழிக்க முடியவில்லை. பொதுமக்கள் மேலும் தகவல் தெரிவித்தால் அதையும் முற்றாக ஒழிக்கலாம்.
பெற்றோர்கள் பிள்ளைகளுக்கு முன்னால் சண்டை போடாதீர்கள். அவர்கள் எதிர்காலத்தில் குற்றவாளிகளாக மாற்றப்படுவதற்கு அதுவே காரணமாக அமைகின்றது. நிம்மதியான வாழ்வு மிக முக்கியம். இதற்கு இயலுமானவரை பெற்றோர்கள் பிள்ளைகளுடன் இயல்பாகக் கலந்துரையாடுங்கள்.
மக்களின் பிரச்சினைகளுக்கு முக்கிய காரணமாக அமைவது சாதிப் பிரச்சினை. இது மாற வேண்டும். கோயில்கள், பள்ளிவாசல்கள், தேவாலயங்கள் அமைக்கப்படுவது மக்களைப் புனிதமாக்குவதற்கே தவிர மிருகங்களாக்குவதற்கல்ல. உங்களது ஒவ்வொரு பிரதேசத்திலும் குடும்பக் கோயில்கள் உள்ளன. கௌரவம் பார்த்து அயல் ஊரவர்கள் தாழ்த்தப்பட்டவர்களாக இருந்தால் அவர்களைக் கோயிலுக்குள் செல்லவிடுவதில்லை. தாழ்த்தப்பட்டவர்கள் பெரு மூச்சு விட்டால் அது நெருப்பாக மாறி எம்மைச் சுட்டெரிக்கும். மனிதத் தன்மையை, புனிதத் தன்மையைப் போதிக்கும் இடம்தான் கோயில். அவ்வாறில்லாமல் பிரச்சினைகளை உருவாக்கிப் பொலிஸார் வரும் இடமாகக் கோயில்கள் இருப்பது வேதனைக்குரியது.
பிள்ளைகளுக்கு நேரான கல்வியை, ஆன்மிகக் கல்வியைப் போதியுங்கள். பிள்ளைகள் தொலைபேசி பாவிக்கவோ இணையத்தளங்களைப் பாவிக்கவோ அனுமதிக்காதீர்கள். பெண் பிள்ளைகள் வெளியில் போய் வரும்போது அவதானியுங்கள். உங்களது பிள்ளைகளை நீங்களே வளர்க்க வேண்டும். பிள்ளைகளுக்கு அன்பு காட்டுங்கள். அதுவே அவர்களை மாற்றும்–என்றார்.

(த-ஜ-4-422)

### சட்டவிரோதமாக மணல் ஏற்றியவருக்கு அபராதம்

யாழ்ப்பாணம், ஜூன் 11
சட்ட விரோதமாக உழவு இயந்திரத்தில் மணல் ஏற்றிச் சென்றவருக்கு யாழ். நீதிமன்று 75 ஆயிரம் ரூபா அபராதம் விதித்துத் தீர்ப்பளித்துள்ளது.
அரியாலை, நாவலடிப் பகுதியைச் சேர்ந்த குறித்த இளைஞன் இரண்டு மாதங்களுக்கு முன்னர் இதேபோன்று சட்ட விரோதமாக மணல் ஏற்றிச் சென்ற போது கைது செய்யப்பட்டிருந்தார். அவருக்கு அப்போது நீதிமன்றால் 50 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது. அவர் அபராதம் செலுத்திச் சென்ற நிலையில் கடந்த திங்கட்கிழமையும் இவ்வாறு மீண்டும் மணல் ஏற்றிச் சென்றுள்ளார்.
அவருக்கு எதிராகப் பொலிஸாரால் நீதிமன்றில் கடந்த செவ்வாய்க்கிழமை வழக்குத் தொடரப்பட்டது. அதனையடுத்து அவரை 75 ஆயிரம் ரூபாவை அபராதமாகச் செலுத்துமாறும் மணலைப் பறிமுதல் செய்யுமாறும் நீதிவான் சி.சதீஸ்தரன் உத்தரவிட்டார். (த-ற-ஜ-4,103)

### பெருந்திருவிழா

அளவெட்டி, ஜூன் 11
அளவெட்டி பெருமாக்கடவை சித்தி விநாயகர் ஆலயப் பெருந்திருவிழா இன்று சனிக்கிழமை நண்பகல் 12 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து 10 நாள்கள் நடைபெறும்.
எதிர்வரும் 19 ஆம் திகதி தேர்த் திருவிழாவும், மறுநாள் தீர்த்தத் திருவிழாவும் நடைபெறும்.
(த-ஜ-36)

# இணுவில் இந்து. மாணவர்களுக்கு போசாக்கு உணவளிக்கும் திட்டம்

## நலன்விரும்பிகளின் உதவியுடன்

யாழ்ப்பாணம், ஜூன் 11
இணுவில் இந்துக் கல்லூரி, ஆலயத்துக்கு அருகே இருப்பதால் சைவப் பாரம்பரியத்தைப் பேணிப் பாதுகாக்கும் நோக்குடன், கல்லூரி மாணவர்களுக்கு ரின் மீன் வழங்கப்படுவதில்லை. பதிலாகப் பாடசாலையில் அக்கறை கொண்ட நலன் விரும்பிகள் போசாக்கு உணவை வழங்கி வருகின்றனர் என்று பாடசாலை அதிபர் தெரிவித்தார்.
நாடுமுழுவதும் பாடசாலைகளுக்கு மதியநேரம் போசாக்கு உணவு வழங்கப்பட்டு வருகின்றது. மாணவர்களில் ஒரு பகுதியினர் வறுமை மற்றும் பல காரணங்களால். காலை உணவை உட்கொள்ளாது பாடசாலைக்குச் செல்கின்றமை அவதானிக்கப்பட்டிருந்ததாகக் கல்வித் திணைக்களத் தரப்பினர் தெரிவித்திருந்தனர்.
இதனாலும், மாணவர்களின் தேக ஆரோக்கிய நிலை கருதியும் மாணவர்களுக்கு மதிய நேரத்தில் போசாக்கு உணவு வழங்கப்பட்டு வருகின்றது.
வடக்கிலும் இவ்வாறு மதிய உணவு வழங்கப்பட்டு வருகின்றது. இணுவில் இந்துக் கல்லூரி இரண்டு கோயில்களுக்கு மத்தியில் இயங்கி வருகிறது. அதனால் அங்கு கற்கும் மாணவர்களுக்கு ரின் மீன் வழங்கப்படுவதில்லை.
சைவப் பாரம்பரியத்தைக் காக்கும் அதேவேளை, பாடசாலையில் பயிலும் 400 ஏழை மாணவர்களுக்கு அரசால் வழங்கப்படும் அசைவ உணவை ஈடு செய்யும் முகமாக கல்லூரியின் பழைய மாணவர் களும், பாடசாலையில் அக்கறை கொண்ட நலன்விரும்பிகளும், பேராசிரியர் ஒருவரும் இதற்கு நிதி வழங்கி வருகின்றனர்.
அவர்களுக்கு நன்றி தெரிவிக்கும் அதேவேளை, மேலும் பலரிடமிருந்து உதவிகளை எதிர்பார்ப்பதாகவும் கல்லூரி அதிபர் தி.தேவதயாளன் தெரிவித்தார்.

(த-ஜ-4)

# முதியோர் இல்லத்தில் சிரமதானப் பணிகள்

யாழ்ப்பாணம், ஜூன் 11
சுற்றுச் சூழல் தினத்தை முன்னிட்டு கைதடி அரச முதியோர் இல்லத்தில் இரு நாள்கள் சிரமதானப் பணிகள் இடம்பெற்றன.
முதியோர் இல்லத்தின் அத்தியட்சகர் த.கிருபாகரன் தலைமையில் நடைபெற்ற சிரமதானப் பணியில் பல்கலை மாணவர்கள், யாழ்.மத்திய கல்லூரி உட்படப் பாடசாலை மாணவர்கள், சமூக ஆர்வலர்கள், முதியோர் இல்லப் பணியாளர்கள், முதியோர் எனப் பலரும் கலந்துகொண்டனர்.
இந்தச் சிரமதான நிகழ்வின் போது முதியோர் இல்லச் சுற்றாடல் முழுமையாகத் துப்புரவு செய்யப்பட்டது.
(த-ஜ-17)

# ஆலயங்களில் ஒலிபெருக்கியின் சத்தத்தைக் கட்டுப்படுத்த ஏற்பாடு

## நிர்வாகங்களுக்கு பிரதேச செயலர் அறிவிப்பு

வலி.தென்மேற்கு, ஜூன் 11
வலி.தென்மேற்குப் பிரதேசத்தில் ஆலயங்களில் பயன்படுத்தப்படும் ஒலிபெருக்கியின் சத்தத்தைக் கட்டுப்படுத்த முன்வந்துள்ள பிரதேச செயலர், வழங்கப்பட்ட அனுமதிக்கு அமைவாக ஒலிபெருக்கியைப் பயன்படுத்துமாறு ஆலயங்களின் நிர்வாகத்தினருக்கு அறிவித்துள்ளார்.
ஆலயங்களில் திருவிழாக் காலங்களிலும், ஏனைய நாள்களிலும் அதிக சத்தத்துடன் ஒலிபெருக்கி பயன்படுத்தப்படுவதால் சுற்றாடலுக்கு இடையூறு ஏற்படுவதுடன், மாணவர்களின் கல்வியும், நோயாளரின் ஆரோக்கியமும் பாதிப்படைகின்றது. இந்த நிலை குறித்து பிரதேச செயலருக்குச் சுட்டிக்காட்டிய யாழ். அரச அதிபர், பொது மக்களின் நலன் கருதி ஒலிபெருக்கியின் சத்தத்தை மட்டுப்படுத்துமாறு அறிவித்திருந்தார்.
அரச அதிபரின் சுற்றறிக்கைக்கமைய நடவடிக்கை எடுக்க முன்வந்துள்ள சண்டிலிப்பாய் பிரதேச செயலர், ஆலயச் சூழலில் அமைதியைப் பேணும் வகையிலும், நோயாளரினதும், மாணவர்களினதும் நலன் கருதியும் ஒலிபெருக்கியின் சத்தத்தை மட்டுப்படுத்துமாறு சகல ஆலயங்களின் நிர்வாகத்தினருக்கும் கடிதம் மூலம் அறிவித்துள்ளார். (த-ஜ-115)

# வடமராட்சி கிழக்குப் பகுதியில் 312 பயனாளிகளுக்கு வீடுகள்

யாழ்ப்பாணம்.ஜூன் 11
வடமராட்சி கிழக்கில் அரச வீட்டுத் திட்டத்தின் கீழ் 312 வீடுகளைப் பயனாளிகளுக்கு அமைத்துக் கொடுக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.
இந்த வீட்டுத் திட்டத்தின் கீழ் ஒவ்வொரு வீடும் எட்டு லட்சம் ரூபா செலவில் அமைக்கப்படவுள்ளது.
இதற்கென 312 பயனாளிகள் தெரிவு செய்யப்பட்டு வீடுகள் குறுகிய காலத்துக்குள் அமைத்து முடிக்கவும் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக வடமராட்சி கிழக்குப் பிரதேச செயலர் கே.கனகேஸ்வரன் தெரிவித்தார்.
தற்போது வீடுகளை அமைப்பதற்கு முதற்கட்டமாகப் பயனாளிகளுக்கு அவர்களின் வங்கிக் கணக்குகளுக்கு ஒரு லட்சத்து 90 ஆயிரம் ரூபா அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.
இந்த நிதியைக் கொண்டு வீடுகள் அமைப்பதற்கான கட்டுமானப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.
(த-ஜ-17)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மூலிகைத் தோட்டச் செய்கை ஆரம்பமானது கல்மடு நகரில்

கிளிநொச்சி, ஜூன் 11

வடக்கு மாகாண சுகாதார சுதேச மருத்துவ அமைச்சின் ஏற்பாட்டில் கிளிநொச்சி மூலிகைத் தோட்டச் செய்கை ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

இந்த மூலிகைத் தோட்டச்செய்கை கிளிநொச்சி மாவட்டத்தைச் சேர்ந்த பெண் தலைமைத்துவக் குடும்பங்களால் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

கடந்த புதன்கிழமை வடமாகாண சுதேச மருத்துவத் திணைக்களத்தின் மாகாண ஆணையாளர் திருமதி சி.துரைரட்ணம் தலைமையில் இந்த மூலிகைத்தோட்ட செய்கை ஆரம்பிக்கப்பட்டது.

இதில் நாற்பதுக்கு மேற்பட்ட பயிர்ச் செய்கையாளர்கள் கலந்து கொண்டனர்.

கிளிநொச்சி மாவட்டத்தில் பெண் தலைமைத்துவக்குடும்பங்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் நோக்கிலும், உள்ளூரில் மூலிகைச் செடிகளை உற்பத்தி செய்யும் நோக்கிலும் இந்தச் செயற்திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

வடக்கு மாகாண சுகாதார அமைச்சரின் வழிகாட்டலின் கீழ் சுதேச மருத்துவத் துறையை மேம்படுத்தும் நோக்கில் கல்மடு நகரில் 100 ஏக்கர் காணி மூலிகைத் தோட்டம் அமைப்பதற்கு ஒதுக்கப்பட்டுள்ளது.

இதில் 75 ஏக்கர் வரையான காணியில் மூலிகைச் செடி வளர்ப்பும், 25 ஏக்கரில் மூலிகை பதப்படுத்தும் தொழிற்சாலை அமைப்பதற்கும் திட்டமிடப்பட்டுள்ளது.

இது தொடர்பான தென்னிந்திய சித்தமருத்துவ ஆராய்ச்சி நிறுவனத்தின் பிரதிநிதிகள் அண்மையில் வடக்குக்குப் பயணம்செய்தமை குறிப்பிடத்தக்கது. (த-ஜ-21)

# அதிக காணிப் பிணக்குகளால் ஏனைய பணிகளில் முடக்கம்

## கிளிநொச்சி அரச அதிபர் தெரிவிப்பு

கிளிநொச்சி, ஜூன் 11

கிளிநொச்சி மாவட்டத்தில் காணப்படுகின்ற அதிகளவான காணிப் பிணக்குகளால் ஏனைய பணிகளை மேற்கொள்ள முடியாத துர்ப்பாக்கிய நிலை ஏற்பட்டுள்ளது -

இவ்வாறு கிளிநொச்சி மாவட்ட செயலாளர் சுந்தரம் அருமைநாயகம் தெரிவித்துள்ளார்.

பரந்த பிரதேசமாகக் காணப்படுகின்ற கரைச்சிப் பிரதேச செயலாளர் பிரிவிலேயே அதிகரித்த காணிப் பிணக்குள் காணப்படுகிறன என்றும் அவர் தெரிவித்தார்.

கரைச்சிப் பிரதேச செயலகத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற நிகழ்வு ஒன்றில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

கிளிநொச்சி மாவட்டத்தில் அதிகளவு காணிப் பிணக்குகள் காணப்படுகிறன. நாளாந்தம் பிரதேச செயலகங்கள் மற்றும் மாவட்டச் செயலகத்துக்கு வரும் காணிப்பிணக்குகளை அதிகாரிகளால் தீர்ப்பது என்பது மிகவும் கடினமான பணியாக உள்ளது. இந்த அதிகரித்த காணிப் பிணக்குகள் காரணமாக எம்மால் ஏனைய பணிகளை மேற்கொள்ள முடியாதுள்ளது.

அதிகரித்த காணிப் பிணக்குகள் மாவட்ட அதிகாரிகளுக்கு ஒரு பெரும் சுமையாக உள்ளன. காணிப் பிணக்குகள் என்பது சட்டத்துக்கு உட்பட்டவை. எனவே அதற்குச் சட்டரீதியான தீர்வுகளையே காணவேண்டும்.

கிளிநொச்சி மாவட்டத்தைப் பொறுத்தவரை 99 வீதமான காணிகள் அரசகாணிகள். காணிகளில் உள்ளவர்களுக்கு எவ்வித ஆவணங்களும் இல்லை அல்லது ஆவணங்களைத் தொலைத்திருப்பார்கள் அல்லது ஒரு காணிக்குப் பலர் உரிமை கோருகின்றார்கள். இவ்வாறு பல பிரச்சினைகள் மாவட்டத்தில் உள்ளன.

> கிளிநொச்சி மாவட்டத்தைப் பொறுத்தவரை 99 வீதமான காணிகள் அரச காணிகள். காணிகளில் உள்ளவர்களுக்கு எவ்வித ஆவணங்களும் இல்லை அல்லது ஆவணங்களைத் தொலைத்திருப்பார்கள் அல்லது ஒரு காணிக்குப் பலர் உரிமை கோருகின்றார்கள். இவ்வாறு பல பிரச்சினைகள் மாவட்டத்தில் உள்ளன.

கிளிநொச்சி மாவட்டத்தில் பரந்த பிரதேசமாக காணப்படுகின்ற கரைச்சி பிரதேச செயலாளர் பிரிவிலேயே அதிகரித்த காணிப் பிணக்குள் காணப்படுகின்றன. இந்த பிணக்குளை எந்த அதிகாரிகளாலும் இலகுவாக தீர்த்து விட முடியாது-என்றார். (த-ஜ-21)

# 5 மீன்பிடிச் சங்கங்களுக்கு 13 ஓடங்கள் கையளிப்பு

வவுனியா, ஜூன் 11

வவுனியா மாவட்டத்தில் பதிவு செய்யப்பட்ட 5 நன்னீர் மீன்பிடிச் சங்கங்களுக்கு 7 லட்சத்து 80 ஆயிரம் ரூபா பெறுமதியான 13 ஓடங்களை வடக்கு மாகாண மீன்பிடி அமைச்சர் பா.டெனீஸ்வரன் வழங்கினார்.

இந்த நிகழ்வு வவுனியா மாவட்ட கிராம அபிவிருத்தித் திணைக்கள மண்டபத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்றது.

வடக்கு மாகாணத்தில் நன்னீர் மீன்பிடியை ஊக்குவித்து, மீனவர்களுடைய வாழ்வாதாரத்தைக் கட்டியெழுப்பும் வகையில் அவர்களுக்கான மீன்பிடி ஓடங்கள் வழங்கப்பட்டுள்ளன.

இதற்கமைவாக முகத்தான் குளம் நன்னீர் மீனவர் அமைப்பினருக்கு 4 ஓடங்களும், கல்மடு குளம் நன்னீர் மீனவர் அமைப்பினருக்கு 3 ஓடங்களும், மடுக்கந்தை குளம் நன்னீர் மீனவர் அமைப்பினருக்கு 3 ஓடங்களும், வவுனியாக்குளம் நன்னீர் மீனவர் அமைப்பினருக்கு 2 ஓடங்களும், மணியர் குளம் நன்னீர் மீனவர் அமைப்பினருக்கு ஒரு ஓடமுமாக மொத்தம் 13 ஓடங்கள் வழங்கப்பட்டுள்ளன.

இந்த ஓடங்களுடைய மொத்தப் பெறுமதி 7 லட்சத்து 80 ஆயிரம் ரூபா எனவும் வடக்கு மாகாண மீன்பிடி அமைச்சர் பா. டெனீஸ்வரன் தெரிவித்தார்.

இந்த நிகழ்வில் வடக்கு மாகாண சபையின் உறுப்பினர்களான ஜி.ரி.லிங்கநாதன், ஏ.ஜெயதிலக, ரா.இந்திரராஜா, மாகாண சுகாதார அமைச்சரின் இணைப்புச் செயலாளர், அமைச்சரின் வவுனியா மாவட்ட இணைப்பாளர் செ.மயூரன், அமைச்சின் உதவித் திட்டமிடல் பணிப்பாளர் இ.சுரேந்திரநாதன், வவுனியா மன்னார் மாவட்ட பிராந்திய நீர்வாழ் உயிரின வளர்ப்பு விரிவாக்கல் அதிகாரி நிருபராஜ் ஆகியோர் கலந்து கொண்டனர்.

(த-ஜ-21)




வாழ்வின் எழுச்சித் திணைக்களத்தால் புகைத்தலுக்கு எதிரான நடைபவனி கிளிநொச்சி பழைய கச்சேரிக்கு முன்பாக நேற்று முன்தினம் ஆரம்பித்து கிளிநொச்சி பிரதேச செயலகத்துக்கு முன்பாக நிறைவடைந்தது. இதன்போது புகைபொருள் மாதிரி அமைப்பு ஒன்று பிரதேச செயலாளர் முன்னிலையில் புகைத்தலுக்கு எதிரான நடைபவனியில் சென்றவர்களால் எரியூட்டப்பட்டது. இந்த கவனவீர்ப்புப் போராட்டத்தில் கிராமசேவகர்கள் மற்றும் வாழ்வின் எழுச்சி உத்தியோகத்தர்கள், பொதுமக்கள் என பலர் கலந்து கொண்டனர். (த-ஜ-21)

# கஞ்சாவுடன் கைதானவருக்கு 6,000 அபராதம்

கிளிநொச்சி, ஜூன் 11

கஞ்சாவைத் தனது உடைமையில்வைத்திருந்தவருக்கு 6 ஆயிரம் ரூபா அபராதம் விதித்த கிளிநொச்சி நீதிமன்று குறித்த நபரை 7 நாள்கள் சமூக சேவையில் ஈடுபடுமாறும் தீர்ப்பளித்தது.

கிளிநொச்சி 55 ஆம் கட்டைப் பகுதியில் வைத்து கிளிநொச்சிப் பொலிஸாரால் குறித்த நபர் கைது செய்யப்பட்டிருந்தார். அவரிடமிருந்து 30 கிராம் கஞ்சாவை அவரது உடைமையில் இருந்து மீட்டதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

வழக்கு விசாரணைகளின் போது அவர் தன் மீதான குற்றத்தை ஒப்புக்கொண்டார். இதனையடுத்து அவருக்கு 6 ஆயிரம் ரூபா அபராதமும் 7 நாள்கள் சமூகசேவையில் ஈடுபடுமாறும் நீதிவான் ஏ.ஏ.ஆனந்தராஜா தீர்ப்பளித்தார். (த-ஜ-21-ரி3)

# ஆசிய அபிவிருத்தி வங்கியின் உதவியுடன் 178 வீதிகள் திருத்தம்

யாழ்ப்பாணம், ஜூன் 11

ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதிஉதவியுடன் யாழ்ப்பாணமாவட்டத்தில் உள்ள 17 உள்ளூராட்சி சபைகளுக்குச் சொந்தமான 126.1 கிலோ மீற்றர் நீளமான 178 வீதிகள், கிராமிய வீதிகள் அபிவிருத்தி மற்றும் புனரமைப்புத் திட்டத்தின் கீழ், வீதிகள் அபிவிருத்தி அதிகாரசபையால் புனரமைக்கப்படவுள்ளன.

இந்த வீதிகள் தற்போது உரிய அதிகாரிகளால் பார்வையிடப்பட்டு வருகின்றன.

இதன் பிரகாரம் வலி. வடக்குப் பிரதேசத்தில் 9.4 கிலோ மீற்றர் நீளமான 10 வீதிகளும் , வலி. தெற்குப் பிரதேசத்தில் 6.6 கிலோ மீற்றர் நீளமான 5 வீதிகளும், வலி. தென்மேற்குப் பிரதேசத்தில் 7.5 கிலோ மீற்றர் நீளமான 12 வீதிகளும், வலி. மேற்குப் பிரதேசத்தில் 14.5 கிலோ மீற்றர் நீளமான 14 வீதிகளும் புனரமைக்கப்படவுள்ளன.

அத்துடன் வலி. கிழக்குப் பிரதேசத்தில் 8.7 கிலோ மீற்றர் நீளமான 10 வீதிகளும், நல்லூர் பிரதேசத்தில் 4.5 கிலோ மீற்றர் நீளமான 14 வீதிகளும் , வேலணைப் பிரதேசத்தில் 6.5 கிலோ மீற்றர் நீளமான 13 வீதிகளும், ஊர்காவற்றுறைப் பிரதேசத்தில் 6.6 கிலோ மீற்றர் நீளமான 6 வீதிகளும், நெடுந்தீவுப்பிரதேசத்தில் 6.5 கிலோ மீற்றர் நீளமான 8 வீதிகளும் புனரமைக்கப்படவுள்ளன.

சாவகச்சேரி பிரதேசத்தில் 10.8 கிலோ மீற்றர் நீளமான 8 வீதிகளும் பருத்தித்துறை பிரதேசத்தில் 12. 5 கிலோ மீற்றர் நீளமான 11 வீதிகளும், வடமராட்சி தெற்கு -மேற்கு பிரதேசத்தில் 6.5 கிலோ மீற்றர் நீளமான 4 வீதிகளும், காரைநகர் பிரதேசத்தில் 6.5 கிலோ மீற்றர் நீளமான 8 வீதிகளும், சாவகச்சேரி நகரசபைப் பிரதேசத்தில் 7.5 கிலோ மீற்றர் நீளமான 20 வீதிகளும் , பருத்தித்துறை நகரசபைப் பிரதேசத்தில் 1.8 கிலோ மீற்றர் நீளமான 7 வீதிகளும், வல்வெட்டித்துறை நகரசபைப் பிரதேசத்தில் 4.7 கிலோ மீற்றர் நீளமான 16 வீதிகளும், யாழ்.மாநகரசபைப் பிரதேசத்தில் 5.1 கிலோ மீற்றர் நீளமான 12 வீதிகளுமே புனரமைக்கப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (த-ஜ-9)

# ஐந்தாவது தடவையாகவும் கசிப்புடன் கைதான பெண்

கிளிநொச்சி, ஜூன் 11

வட்டக்கச்சியில் ஐந்தாவது தடவையாகவும் கசிப்புடன் கைது செய்யப்பட்ட பெண்ணுக்கு இரண்டு மாதச் சிறைத் தண்டனையும் ஒரு இலட்ச ரூபா அபராதமும் விதித்துத் தீர்ப்பளித்தது கிளிநொச்சி நீதிமன்று.

பெண் ஒருவர் 4 போத்தல் கசிப்பைத் தனது உடைமையில் வைத்திருந்தார் எனக் கூறப்பட்டு, கடந்த செய்வாய்க்கிழமை கிளிநொச்சி வட்டக்கச்சிப் பகுதியில் வைத்து கைது செய்யப்பட்டார். இவர் கடந்த புதன்கிழமை கிளிநொச்சிநீதிவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்டிருந்தார்.

விசாரணைகளின்போது கசிப்பு விற்பது தொடர்பாகக் குறித்த பெண் ஏற்கனவே நான்கு முறை கைது செய்யப்பட்டு நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்டுள்ளார்.

தற்போது ஐந்தாவது தடவையாகவும் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் கிளிநொச்சிப் பொலிஸார் மன்றில் தெரிவித்திருந்தனர்.

இதன் போது, குற்றவாளி தானே குற்றத்தை ஒப்புக்கொண்டார். இதனையடுத்து நீதிவான் ஏ.ஏ. ஆனந்தராஜா அவருக்கு 2 மாதச் சிறைத்தண்டனையும் ஒரு இலட்ச ரூபா அபராதமும் விதித்துத் தீர்ப்பளித்தார். (த-ஜ-21,ரி3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாவீரர்கள் துயிலும் இல்லத்தை ஊடறுத்து வீதியமைக்கத் திட்டம்

## தடுத்து நிறுத்துமாறு பொது அமைப்புக்கள் கோரிக்கை

முல்லைத்தீவு, ஜூன் 11
முல்லைத்தீவு முள்ளியவளைப் பகுதியில் இருந்த மாவீரர் துயிலும் இல்லத்தை ஊடறுத்து, அதன் மண்ணில் புதையுண்ட மாவீரர்களுக்கு மேலால் வீதி அமைக்கப்படவுள்ளதாகவும், அதற்காகத் தற்போது மேற்கொள்ளப்பட்டுள்ள ஆரம்ப வேலைத்திட்டங்களைத் தடுத்து நிறுத்துமாறும் மாவட்டத்தைச் சேர்ந்த பொதுஅமைப்புக்கள் மற்றும் பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனனர்.

> மாவீரர் துயிலும் இல்லம் அமைக்கப்படுவதற்காகக் குறித்த வீதியை மூடிய விடுதலை புலிகள், போக்குவரத்தை இலகுபடுத்தும் முகமாக புதிய வீதி ஒன்றைத் திறந்து விட்டிருந்தனர்.

1995 ஆம் ஆண்டு முள்ளியவளைப் பகுதியில் இருந்த ஒரு வீதியை மூடிய விடுதலைப் புலிகள், தமிழ் மக்களது வாழ்வுக்காகப் போராடி உயிர் நீத்த மாவீரர்களின் உடல்களை அங்கு அடக்கம் செய்தனர்.
இதனால் அந்த இடம் மாவீரர் துயிலும் இல்லம் என்று அழைக்கப்பட்டு வீரச்சாவடைந்த மாவீரர்களுக்கான அஞ்சலிகளும் அந்த இடத்தில் உணர்வு பூர்வமாகச் செலுத்தப்பட்டு வந்தன.
இந்த நிலையில் கடந்தகாலப் போரின் பின்னர் குறித்த மாவீரர் துயிலும் இல்லத்தைக் கையகப்படுத்திய இராணுவத்தினர் அங்கு அமைக்கப்பட்டிருந்த மாவீரர்களின் தூபிகளை உடைத்தெறிந்து இராணுவ முகாமை அமைத்துக் குடியேறியிருந்தனர்.
மாவீரர் துயிலும் இல்லம் அமைக்கப்படுவதற்காகக் குறித்த வீதியை மூடிய விடுதலை புலிகள், போக்குவரத்தை இலகுபடுத்தும் முகமாக புதிய வீதி ஒன்றைத் திறந்து விட்டிருந்தனர். நீண்ட காலமாகப் பொதுமக்கள் இந்த மாற்று வீதியையே தங் களது போக்குவரத்துத் தேவைக்காகப் பயன்படுத்தி வந்தனர்.
இந்த நிலையில் இவ்வாறு புதிதாக அமைக்கப்பட்ட வீதிக்குச் சொந்தமானவர் என்று கூறி, குறித்த வீதி அமைக்கப்பட்ட காணி உரிமையாளர் வெளிநாட்டிலிருந்து வருகை தந்து தனது காணியைகையகப்படுத்தி அந்த வீதியை மூடுவதற்கு நடவடிக்கை மேற்கொண்டு வருகின்றார்.
இதனால் முன்னர் இருந்த பழைய வீதியான மாவீரர் துயிலும் இல்லம் காணப்பட்ட வீதியைத் திறப்பதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.
மாவீரர் துயிலும் இல்லத்துக்கு அருகில் வேறு வீதிகள் காணப்படுவதால் அந்த வீதிகளைப் பயன்படுத்துமாறும், மாவீரர் துயிலும் இல்லத்தை ஊடறுத்து வீதி அமைக்கும் திட்டத்தை தடுத்து நிறுத்துமாறும் மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.
மக்களின் கருத்துத் தொடர்பாக கரைதுறைப்பற்று பிரதேச செயலாளர் குணபாலனைத் தொடர்பு கொண்டு கேட்டபோது, குறித்த சம்பவத்தை உறுதிப்படுத்திய அவர், மாவீரர் துயிலும் இல்லத்தை ஊடறுத்து இது வரைவீதி அமைக்கப்படவில்லை. ஆனால் தற்போது அந்த வீதி திறந்து விடப்பட்டுள்ளது எனத் தெரிவித்தார். (த-ஜ-21,ரி7)

## மானிப்பாய் மெமோறியலின் 180 ஆவது ஆண்டு நிறைவு

யாழ்ப்பாணம், ஜூன் 11
மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலையின் 180 ஆவது ஆண்டு நிறைவு நிகழ்வு நாளை ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ளதாக பாடசாலைச் சமூகத்தினர் தெரிவித்துள்ளனர்.
பாடசாலையில் பழைய மாணவர் சமூகமும், ஆசிரியர் சமூகமும், இணைந்து நாளை ஞாயிற்றுக்கிழமையில் இருந்து ஒரு வருட காலத்துக்கு இந்த விழாவைக் கொண்டாடுவதற்கு திட்டமிட்டுள்ளது.
அத்துடன் மானிப்பாய் - உடுவில் வீதி மொமோறியல் முகப்பில் புதிய பாடசாலைப் பெயர்ப் பலகை திறத்தலும், பாடசாலையில் உள்ள கட்டடங்களுக்கு நிறுவுநர், அதிபர்கள், நன்கொடையாளர்கள் பெயரிடல் நிகழ்வுகளும், 180 ஆம் ஆண்டு நிறைவு கல்விசார் கலை, கலாசார நிகழ்வுகள், விளையாட்டு நிகழ்ச்சிகள், பொது நிகழ்ச்சிகள் என்பனவும் நடைபெறவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.
(த-ஜ-ரி)

## இராமேஸ்வரம் மீனவர்களுக்கு விளக்கமறியல்

மன்னார், ஜூன் 11
இலங்கைக் கடற்பரப்பினுள் அத்து மீறி நுழைந்து மீன் பிடியில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட இராமேஸ்வரம் மீனவர்கள் 6 பேரை யும், எதிர்வரும் 14 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கு மாறு மன்னார் நீதிமன்று உத்தரவிட்டுள்ளது.
குறித்த மீனவர்களைக் கடற்படையினர் கடந்த புதன்கிழமை இரவு கைது செய்தனர். பின்னர் அவர்களை மன்னார் மாவட்ட கடற்றொழில் திணைக்கள அதிகாரிகளிடம் ஒப்படைத்தனர்.
மன்னார் நீதிமன்றத்தில் பதில் நீதிவான் இ.கயஸ் பெல்டானோவிடம், முற்படுத்தப்பட்டனர். இதன் போதே நீதிவான் விளக்க மறியலில் வைக்க உத்தரவிட்டார்.
இதுதவிர, இலங்கைக் கடற்பரப்பினுள் அத்துமீறி நுழைந்து மீன் பிடியில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் கடந்த 31ஆம் திகதி அதிகாலை தலைமன்னார் கடற்பரப்பில் வைத்துக் கைது செய்யப்பட்ட 7 தமிழக மீனவர்களும் எதிர்வரும் 14 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். (த-ஜ-4,56)

## "இரத்தத்தின் சலனங்கள்" கண்காட்சி முல்லையில்



முல்லைத்தீவு, ஜூன் 11
"இரத்தத்தின் சலனங்கள்" என்ற ஓவியக் கண்காட்சி முல்லைத்தீவில் சிறப்பாக நடைபெற்றது.
முல்லைத்தீவு - உண்ணாப்புலவில் அமைந்துள்ள முல்லைத்தீவு றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடாசலை மண்டபத்தில் நேற்று முன்தினம் இந்தக் கண்காட்சி இடம் பெற்றது.
வலிசுமந்தவர்களை வர்ணங்களால் வரைந்த இந்த ஓவியக் கண்காட்சியானது, நிகழ்வின் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்ட முல்லை வலய உதவிக் கல்விப்பணிப்பாளரால் நாடா வெட்டித் திறந்து வைக்கப்பட்டிருந்து.
நிகழ்வில் முல்லைத்தீவு மகா வித்தியாலய அதிபர், றோ.க. த.க.பாடசாலை அதிபர் மற்றும் ஆசிரியர்கள் கலந்து கொண்டனர். அத்தோடு பெருமளவான பாடசாலை மாணவர்களும், பொதுமக்களும் வருகை தந்து இந்தக் கண்காட்சியைக் கண்டு களித்தனர்.
(த-ஜ-21-ரி7)

## தண்டவாளத்தைக் கடக்க முயன்ற நான்கு பசுக்கள் ரயிலில் மோதிச் சாவு

சாவகச்சேரி ஜூன் 11
தண்டவாளத்தைக்கடக்க முயன்ற ஒரு லட்சம் ரூபா பெறுமதியான 4 பசு மாடுகள் ரயிலில் மோதுண்டு உடல் சிதறிச் சாவடைந்தன.
இந்தச் சம்பவம் சாவகச்சேரி வைத்தியசாலைக்கு முன்பாக நேற்றுக் காலை இடம்பெற்றது.
யாழப்பாணத்திலிருந்து கொழும்புக்குக் கடுகதி ரயில் சென்ற போது மேய்ச்சலுக்குச் சென்று கொண்டிருந்த 10 இற்கும் மேற்பட்ட மாடுகளும் சிதறி ஓடின. இதன்போதே குறித்த 4 மாடுகளும் தண்டவாளத்தைக் கடந்த போது ரயிலில் மோதுண்டு சாவடைந்தன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.
மாடுகளை எவரும் உரிமை கோராததால் சாவகச்சேரி நகர சபை ஊழியர்களால் அவை அப்புறப்படுத்தப்பட்டுத் தனங்களப்பில் புதைக்கப்பட்டன.
ரயிலுடன் மோதுண்டு சாவடையும் கால்நடைகளின் உரிமையாளர்கள் ரயில்வே திணைக்களத்துக்கு நட்ட ஈடு செலுத்த வேண்டுமென அறிவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.
(த-ஜ-9)

## திருட்டில் ஈடுபட்ட பெண்ணுக்கு ஒரு வருடம் சிறைத் தண்டனை

யாழ்ப்பாணம், ஜூன் 11
யாழ்ப்பாணம் நகரப்பகுதியிலுள்ள கடையொன்றில் திருட்டில் ஈடுபட்ட இளம் குடும்பப் பெண்ணுக்கு யாழ்ப்பாணம் நீதிவான் மன்றால் ஒரு வருடச் சிறைத் தண்டனை வழங்கித் தீர்ப்பளிக்கப்பட்டது.
கடந்த ஏப்ரல் மாதம் வருடப் பிறப்புக்கு முதல் நாள் யாழ். நகரப் பகுதியில் உள்ள காலணியகம் ஒன்றில் பெண்ணொருவர் காலணியொன்றைவாங்குவதற்காக வந்தவேளை, சமுர்த்தி வங்கியொன்றிலிருந்து அவரால் கடனாகப் பெற்ற 90 ஆயிரம் ரூபா கைப்பையிலிருந்து திருடப்பட்டது.
இந்தச் சம்பவம் தொடர்பாக தோணிக்கல் வவுனியாவிலிருந்து யாழ்ப்பாணத்துக்கு வந்திருந்த இளம் குடும்பப் பெண்ணொருவர் அன்றைய தினமே பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்.
அவரிடமிருந்து திருடப்பட்ட பணத்தில் 85 ஆயிரம் ரூபாவும், பொலிஸாரால் கைப்பற்றப்பட்டிருந்தது. பொலிஸார் அவரை நீதிமன்றில் முற்படுத்திய வேளை, அவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டிருந்தது.
அடுத்த தவணையின்போது அவருக்கெதிரான குற்றப் பத்திரம் தாக்கல் செய்யப்பட்ட போது, அவர் குற்றத்தை ஏற்றுக் கொண்டமையால் நீதிமன்றால் பிணையில் விடுவிக்கப்பட்டார்.
நேற்று முன்தினம் அவருடைய கைவிரல் அடையாள அறிக்கை நீதிமன்றில் சமர்ப்பிக்கப்பட்ட போது, குறித்த பெண் ஏற்கனவே இவ்வாறான 4 குற்றச்சாட்டுகளுக்கு நீதிமன்றங்களால் தண்டிக்கப்பட்டவர் எனத் தெரிய வந்தது.
இதனையடுத்து அவருக்கு நீதிவான் சி.சதீஸ்தரனினால் ஒரு வருடச் சிறைத்தண்டனை வழங்கப்பட்டது. குறித்த பெண் இராஜசிங்கம் வீதி, திருநகரை நிரந்தர இடமாகக் கொண்டவர் எனவும், அவருடைய கணவர் வேறொரு வழக்குக்காக விளக்க மறியலில் தடுத்து வைக்கப்பட்டவர் எனவும் தெரிவிக்கப்பட்டது. (த-ஜ-103)

## இருபாலை கிராமத்துக்கு குடிதண்ணீர் விநியோகம்

### கோப்பாயிலிருந்து மேற்கொள்ள நடவடிக்கை

இருபாலை கிராமத்துக்கான குடிதண்ணீர் விநியோகத்தை இனிமேல் கோப்பாய் பிரதேசத்தில் இருந்து வழங்குவதற்கு வலி. கிழக்கு பிரதேச சபை நடவடிக்கையை மேற்கொண்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.
தற்போது தொண்டமானாற்றில் இருந்தே வளலாய் மற்றும் இருபாலை கிராம மக்களுக்கான குடி தண்ணீர் தினமும் விநியோகிக்கப்படுகின்றது. முன்னர் கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலைக்கு அருகில்உள்ளநன்னீர்க்குழாய்க்கிணற்றில்இருந்தே பவுசர் மூலம் இருபாலைக்குக் குடிதண்ணீர் விநியோகிக்கப்பட்டது.
இந்த நன்னீர்க் குழாய்க் கிணற்றின் தண்ணீரில் ஒயில் கலப்பு இருப்பதாகத் தெரிவித்து, கிராம மக்களுக்கான குடிதண்ணீர் தொண்டமானாற்றில் இருந்து விநியோகிக்கப்பட்டது.
மீண்டும்கோப்பாய்நன்னீர்குழாய்க்கிணற்றில்இருந்து இந்தக் குடிதண்ணீர் விநியோகத்தை ஆரம்பிப்பதற்குப் பிரதேச சபை நடவடிக்கையை மேற்கொண்டுள்ளதாக சபை அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.
தற்போது இந்தக் குழாய்க் கிணற்றில் இருந்து குடி தண்ணீர் பெறுவதற்கு நீர் வளச் சபையின் அனுமதியை சபை கோரியுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (த-ஜ-17)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மூதூர் தமிழரின் காணிகளை அடாத்தாக அளவிடும் பணி

## வன பரிபாலனத் திணைக்களம் மீது குற்றச்சாட்டு

கொழும்பு, ஜூன் 11

திருகோணமலை மூதூர் கிழக்கில் உள்ள தமிழ்க் கிராமங்களில் உள்ள பொதுமக்களின் விவசாயக் காணிகள் வனவளப் பரிபாலனத் திணைக்களத்தால் அளக்கப்பட்டு எல்லைக் கல் இடும் பணிகள் இடம் பெற்று வருகின்றன.

இவ்வாறான செயல் இப்பகுதி மக்களின் வாழ்வாதாரத்தைக் கேள்விக்குறியாக்குவதுடன், அவர்களின் காணி உரிமையையும் மீறும் செயலாகும் எனக் கட்டைப் பறிச்சான் தெற்கு கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர் கதிரவேற்பிள்ளை திருச்செல்வம் தெரிவித்தார்.

இந்த விடயம் தொடர்பாக ஊடகங்களுக்கு அவர் தெரிவித்தாவது: கடந்த சில தினங்களாக மூதூர் கிழக்கில் உள்ள கிராம சேவகர் பிரிவுகளான கட்டைப் பறிச்சான் தெற்கு, பள்ளிக் குடியிருப்பு, பாட்டாளிபுரம் போன்ற இடங்களில் உள்ள காணிகள் வனவளப் பரிபாலனத் திணைக்களத்தால் அளக்கப்பட்டு எல்லைக் கல் இடப்பட்டு வருகின்றன. இந்தக் காணிகளில் பெரும் பாலானவை வயல் காணிகளாக காணப்படுகின்றன. இங்கிருந்து இப்பகுதி பற்றைக் காடாகக் காணப்படுகிறது.

எனினும் தற்போது இந்தக் காடுகளை அகற்றி விவசாயம் செய்ய அனுமதிப்பதை விட்டு


> கடந்த சில தினங்களாக மூதூர் கிழக்கில் உள்ள கிராம சேவகர் பிரிவுகளான கட்டைப்பறிச்சான் தெற்கு, பள்ளிக் குடியிருப்பு, பாட்டாளிபுரம் போன்ற இடங்களில் உள்ள காணிகள் வனவளப் பரிபாலனத் திணைக் களத்தால் அளக்கப்பட்டு எல்லைக் கல் இடப்பட்டு வருகின்றன.

போர் காரணமாக 2006ஆம் ஆண்டளவில் வெளியேறிய மக்கள் மீண்டும் தாம் விவசாய நடவடிக்கையில் ஈடுபடச் சென்ற போது, இங்குள்ள பற்றைகளையும் மரங்களையும் வெட்டி விவசாயத்தில் ஈடுபடப் பொலிஸார் அனுமதிக்காத காரணத்தால் அவற்றை அரச காணியாக எண்ணி எல்லைக்கல் இடுவது அநீதியாகும் என்று கூறினார்.

இந்த விடயம் சம்பந்தமாக மாவட்ட அரச அதிபருக்கும், அரசியல் தலைமைகளுக்கும் தெரியப்படுத்தியுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். (த-ஐ)

# அரச அதிகாரிகள் கைதினால் சேவை பாதிக்கப்படக்கூடாது

## பிரதமர் ரணில் தெரிவிப்பு



கொழும்பு, ஜூன் 11

நிதி மோசடி குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டிருக்கும் அரச அதிகாரிகளைக் கைது செய்வதால், அரச சேவை பாதிப்படையக் கூடாது என்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

நிதிமோசடிகள் தொடர்பில் குற்றப் புலனாய்வுப் பிரிவினால் இது வரை 44 விசாரணைகள் நிறைவு செய்யப்பட்டுச் சட்டமா அதிபரின் ஆலோசனைக்காக அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

அவற்றில் 6 ஆவணங்கள் சட்டமா அதிபரின் ஆலோசனையின் பிரகாரம் நீதிமன்ற விசாரணைக்கு ஆற்றுப்படுத்தப்பட்டுள்ளன என்றும் பிரதமர் குறிப்பிட்டார்.

நாடாளுமன்றத்தில் கடந்த புதன்கிழமை இடம்பெற்ற "பிரதமரிடம் கேள்வி" நேரத்தில் மக்கள் விடுதலை முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் சுனில் ஹந்துன்நெத்தி எழுப்பிய கேள்விக்குப் பதிலளித்தபோதே பிரதமர் இந்த விடயத்தைக் குறிப்பிட்டார்.

பெரிய நிதி மோசடிகளை விசாரிப்பதற்கான ஜனாதிபதி ஆணைக் குழு மற்றும் நிதி மோசடி பற்றிய குற்றப்புலனாய்வுப் பிரிவினரால் இதுவரை நிறைவு செய்யப்பட்டுள்ள விசாரணைகள் தொடர்பில் சுனில் ஹந்துன்நெத்தி பிரதமரிடம் கேள்வி எழுப்பினார்.

இதற்குப் பதிலளித்த பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, இந்த விடயங்களை ஆரம்பித்தபோது இதில் பயிற்றப்பட்ட அணியினர் இருக்கவில்லை. அதற்குப் பயிற்சி வழங்கவேண்டியிருந்தது. அதற்காக வெளிநாடுகளுக்கும் அனுப்பவேண்டியிருந்தது. தற்போது இரண்டாவது அணியினர் இலங்கையில் பயிற்றுவிக்கப்படுகின்றனர்.

இந்த விசாரணைகளைச் செய்யும்போது வெளிநாடுகளுக்கும் செல்ல வேண்டியுள்ளது. சில நிறுவனங்கள் ஒத்துழைப்பு வழங்க மறுக்கின்றன. ஆகையால் அரசுகளினூடாகச் செல்ல வேண்டி உள்ளது.

நிதி மோசடிகள் பற்றி குற்றப்புலனாய்வுப் பிரிவினரால் இது வரை 44 விசாரணைகள் நிறைவு செய்யப்பட்டு சட்டமா அதிபரின் ஆலோசனைக்காக அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. சட்டமா அதிபரின் ஆலோசனைக்குப் பின்னர் அடுத்த கட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் - என்றார்.

இதையடுத்து கேள்வி எழுப்பிய மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் அநுரகுமார, கைது செய்து வாக்குமூலம் பதிவு செய்து நீதிமன்றில் முற்படுத்துமாறு சட்டமா அதிபர் திணைக்களத்தால் உத்தரவிட்டதன் பின்னர், அவ்வாறு குற்றம் சுமத்தப்பட்டவர்கள் ஜனாதிபதிக்கு மனு கொடுத்ததற்காக அந்தச் சட்ட நடவடிக்கைகளைத் தவிர்க்க முடியுமா? இது அரசியல் தலையீடாகாதா? என்று கேள்வி எழுப்பினார்.

இதற்குப் பதிலளித்த பிரதமர், இந்த நடவடிக்கைகளால் அரச சேவைகளில் பெரிய பிரச்சினை ஏற்படும். எனவே, இது குறித்து ஆராய்ந்து உத்தரவொன்றை வழங்குமாறு சட்டமா அதிபரிடம் கோரப்பட்டுள்ளது.

அந்த வகையில், அவர்கள் சில நேரங்களில் கைது செய்யப்படலாம். கைதுசெய்யுமாறு சட்டமா அதிபர் தெரிவித்தால் அவர்கள் கைது செய்யப்படுவார்கள்.

எனினும், அரச சபைகளில் இருந்து விலகுவது என்று அதிகாரிகள் சிலர் கையொப்பம் திரட்டி வருகின்றனர். அந்த வகையில் அரச சேவையையும் பாதிக்க அனுமதிக்க முடியாது. அரச அதிகாரிகள் என்றாலும் கூட கைது செய்யுமாறு சட்டமா அதிபரின் உத்தரவும் வரலாம் - என்றார். (த-ஐ-5)

# நாடாளுமன்றம் அருவருப்பானது

## வேடுவர் சமூகம் கருத்து

கொழும்பு, ஜூன் 11

நாடாளுமன்றமென்பது சண்டை சச்சரவுகள் மலிந்துள்ள இடம். நாம் அந்த இடத்தை அருவருப்புடன் தான் நோக்குகிறோம். இதனால்எமது இனத்தவரை அங்கு அனுப்பி வைக்க நாம் விரும்பவில்லை.

-இவ்வாறு பழங்குடியினரான வேடுவச் சமூகத்தினர் தெரிவித்துள்ளனர்.

அரசமைப்புக் குறித்து கருத்துக்கள் வினவப்பட்டிருந்த வேளையில் அவர்களால் இவ்வாறு தெரிவிக்கப்பட்டது.

புதிய அரசமைப்புக் குறித்து, மக்களின் கருத்துக்களைப் பெறுவதற்கு நியமிக்கப் பட்டிருந்த குழு தனது அறிக்கையை சபாநாயகரான கருஜயசூரியவிடம் கையளித்தது.

இதன் பின்னர் குழுவின் உறுப்பினர்களால் பல்வேறு சமூகத்தினரிடமிருந்து வெளிப்படுத்தப்பட்டிருந்த கருத்துக்கள் வெளியிடப்பட்டன. இதில் வேடுவத் தலைவரால் இந்தக் கருத்துத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், ஐந்து லட்சம் வரையிலான பழங்குடியினர் தமது சந்ததியில் உள்ளனர் என வேடுவத் தலைவர் குறிப்பிட்டிருந்தார் என அந்தக் குழு தெரிவித்திருந்தது.

(த-ஐ-22)

# கொத்தலாவல பல்கலையின் வேந்தராக அட்மிரல் சந்தகிரி



கொழும்பு, ஜூன் 11

கொத்தலாவல பாதுகாப்புப் பல்கலைக்கழகத்தின் புதிய வேந்தராக, கடற்படையின் முன்னாள் தளபதி அட்மிரல் தயா சந்தகிரி நியமிக்கப்பட்டுள்ளார்.

ஜனாதிபதி செயலகத்தில் நடந்த நிகழ்வில், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, இந்த நியமனத்தை வழங்கினார்.

அட்மிரல் தயா சந்தகிரி, கடற்படையின் 14ஆவது தளபதியாக, 2001 தொடக்கம், 2005 வரையான காலப் பகுதியில் பணியாற்றியிருந்தார்.

அதன் பின்னர், 2005 செப்ரெம்பர் மாதம் அட்மிரலாக தரமுயர்த்தப்பட்ட அவர், கூட்டுப் படைகளின் தளபதியாக நியமிக்கப்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

(த-ஐ-5)

# பள்ளிவாசல் விரிவாக்கத்துக்கு கல்கிசை மாநகர சபை தடை

கொழும்பு, ஜூன் 11

கொழும்பு, தெகிவளைப் பிரதேசத்திலுள்ள பள்ளிவாசல் விரிவாக்கத்துக்கு கல்கிசை மாநகரசபை தடை விதித்துள்ளது.

அந்தப் பகுதியிலுள்ள பௌத்த கடும்போக்காளர்களின் எதிர்ப்புகள் காரணமாகவே இந்தத் தடை விதிக்கப்பட்டுள்ளதாகக் கூறப்படுகின்றது.

ஏற்கனவே பள்ளிவாசல் நிர்வாகத்துக்குத் தெகிவளை-கல்கிசை மாநகர சபையினால் விரிவாக்கப் பணிக்கு அனுமதி வழங்கப்பட்டிருந்தது.

அந்த அனுமதியை நீக்கும் வகையிலான உத்தரவொன்றை மாநகர முதல்வர் அறிவித்துள்ளதோடு, அதன் பிரதியைப் பொலிஸாருக்கும் அனுப்பி வைத்துள்ளார் எனப் பள்ளிவாசல் நிர்வாகம் கூறுகின்றது.

இந்தத் தடை பற்றிப் பொலிஸாரால் தங்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளதாகவும் பள்ளிவாசல் நிர்வாகம் தெரிவிக்கின்றது.

புனித ரம்ழான் நோன்பு காலத்தில் பள்ளிவாசல் விரிவாக்கப் பணிகள் நடைபெற்றுக் கொண்டிருந்தபோது இந்தத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

இந்தத் தடை குறித்துப் பிரதமர் ரணில் விக்கிரசிங்க மற்றும் சட்டம், ஒழுங்கு அமைச்சர் சாகல ரத்நாயக்க உட்பட உரிய தரப்பினரின் கவனத்துக்கும் கொண்டுவரப்பட்டுள்ளதாக நாடாளுமன்ற உறுப்பினர் முஜீபுர் ரகுமான் தெரிவித்துள்ளார்.

ஏற்கெனவே வழங்கப்பட்டுள்ள அனுமதியை மாநகர முதல்வரால் நீக்க முடியாது என்றும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

கடந்த புதன்கிழமை இரவு, அமைச்சர்களான ரிசாத் பதியுதீன், ஹபீர் ஹாஸிம், எம்.எச் அப்துல் ஹாலீம் , நாடாளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான் உட்படப் பலரும் பள்ளிவாசலுக்கு நேரடியாகச் சென்று இந்தத் தடை குறித்தும் அடுத்தகட்டச் செயற்பாடுகள் குறித்தும் பள்ளிவாசல் நிர்வாகத்துடன் கலந்துரையாடியுள்ளனர்.

ஏற்கனவே கண்டியில் உள்ள பள்ளிவாசல் கோபுர நிர்மாணப் பணிகளுக்குப் பௌத்த கடும்போக்காளர்கள் எதிர்ப்பு வெளியிட்டதால், அந்தப் பணிகளுக்கு அதிகாரிகள் கடந்த வாரம் தடை விதித்திருப்பதும் குறிப்பிடத்தக்கது.

(த-ஐ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புதிய சாரதி அனுமதிப் பத்திரம் அனைவருக்கும் கட்டாயமானது

கொழும்பு, ஜூன் 11
பயணிகள் பொதுப்போக்குவரத்துச் சேவையில் ஈடுபடும் வாகனங்களின் சாரதிகள், மோட்டார் வாகனப் போக்குவரத்துத் திணைக்களத்தால் விநியோகிக்கப்படுகின்ற புதிய சாரதி அனுமதிப் பத்திரத்தைக் கட்டாயமாகப் பெற்றுக் கொள்ள வேண்டும் என்று மோட்டார் வாகனக் கட்டுப்பாடு மற்றும் வீதிப் பாதுகாப்பு சம்பந்தப்பட்ட மோட்டார் வாகனப் பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது.

இந்த மாதத்தின் நடுப்பகுதியில் இருந்து இந்த நடைமுறைகள் சம்பந்தமான சட்டம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

தற்போது இலங்கைப் போக்குவரத்துச் சபை இருநாள் பயிற்சி நெறியொன்றை நடத்துவதுடன், மேற்கூறப்பட்ட வாகன அனுமதிப் பத்திரத்தைப் பெற்றுக் கொடுப்பதற்கான செயற்பாடுகளை மேற்கொண்டு வருகிறது.

இந்த மாதத்தின் நடுப்பகுதியில் மேல் மாகாணத்தில் இந்தச் சட்ட நடைமுறை முதலில் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது என்றும், இது தொடர்பில் கவனமெடுத்து அனைத்து சாரதிகளும் புதிய அனுமதிப் பத்திரங்களைப் பெற்றுக்கொள்ள வேண்டும் என்றும் பொலிஸ் தலைமையகம் சாரதிகளுக்கு அறிவித்தல் விடுத்துள்ளது.

(த-ற-ஐ-ரி2-22)

## எனது பதவி நீடிப்பு ஜனாதிபதி கையில்

**கூறுகிறார் மத்திய வங்கி ஆளுநர்**

மத்திய வங்கியின் ஆளுநராக நான் தொடர்ந்தும் பதவியில் இருப்பதா, இல்லையா என்பதை ஜனாதிபதியே தீர்மானிக்க வேண்டும். இவ்வாறு மத்திய வங்கி ஆளுநர் அர்ஜுன மகேந்திரன் 'உதயனு'க்குத் தெரிவித்தார்.

என்னைப் பதவியில் வைத்திருப்பதா, இல்லையா என்பதை ஜனாதிபதி என்மீது கொண்டுள்ள நம்பிக்கையின் அடிப்படையிலேயே தீர்மானிக்கவேண்டும். நான் இது தொடர்பில் மேலதிக கருத்துக்கள் எதுவும் கூற விரும்பவில்லை எனவும் அவர் குறிப்பிட்டார்.

மத்திய வங்கி ஆளுநர் அர்ஜுன மகேந்திரனின் பதவிக் காலம் எதிர்வரும் 30ஆம் திகதியுடன் முடிவுக்கு வருகின்றது. இவரின் பதவிக் காலத்தில், பல்வேறு ஊழல் மோசடிகள் மத்திய வங்கியில் இடம்பெற்றன என்று குற்றஞ்சாட்டியுள்ள ஊழலுக்கு எதிரான முன்னணியினரும், மகிந்த அணியின் நாடாளுமன்ற உறுப்பினர்களும், இவருக்கு மீண்டும் ஒரு பதவிக் காலத்தை வழங்க வேண்டாம் என்றும் கோரிக்கை விடுத்து வருகின்றனர்.

இது தொடர்பில் அர்ஜுன மகேந்திரனிடம் வினவியபோதே, அவர் மேற்கண்டவாறு கூறினார். "நான் இலங்கையிலோ அல்லது வெளிநாட்டிலோ எங்கிருந்தாலும் என்னால் சிறப்பாகப் பணியாற்ற முடியும்" எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

(த-வ-5)

# தாஜுதீன் விசாரணையை மூடி மறைத்தமை உறுதி

## குற்றப் புலனாய்வுப் பிரிவு நீதிமன்றில் தெரிவிப்பு



கொழும்பு, ஜூன் 11
சுமித் சம்பிக்க பெரேரா, அனுர சேனநாயக்க இருவரும் தாஜுதீன் விசாரணையை மூடிமறைத்துள்ளமை உறுதி. மனிதப் படுகொலையை இவர்கள் ஏன் விபத்தாகக் காட்டவேண்டும். இதற்கான அவசியம் என்ன? இந்தக் கொலையில் இவர்கள் சதியில் ஈடுபட்ட குற்றச்சாட்டு உள்ளது. அந்தச் சதி தாஜுதீன் கொலை செய்யப்பட்ட பின்னரானதா? அல்லது கொலையின் முன்னரானதா? என்பதை வெளிப்படுத்த விசாரணைகள் நடந்துகொண்டிருக்கின்றன.

– இவ்வாறு குற்றப்புலனாய்வுப் பிரிவினர் நீதிமன்றத்துக்குத் தெரிவித்துள்ளனர்.

பிரபல ரக்பி வீரர் வஸீம் தாஜுதீன் வழக்கு கொழும்பு மேலதிக நீதிவான் நிசாந்த பீரிஸ் முன்னிலையில் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை எடுத்துக்கொள்ளப்பட்டது. இதன்போது குற்றப் புலனாய்வுப் பிரிவினர் நீதிவானுக்கு மேலதிக அறிக்கை சமர்ப்பித்தனர். இதிலேயே மேற்படி விடயங்கள் சுட்டிக்காட்டப்பட்டுள்ளன.

### சதியில் பங்கு

அந்த அறிக்கையில், கடந்த 14 நாள்களாக முன்னெடுக்கப்பட்ட விசாரணைகளில் பல்வேறு விடயங்கள் தெரியவந்துள்ளன. தாஜுதீன் விவகாரத்தில் முதலில் விசாரணைகளை முன்னெடுத்த அதிகாரிகளுக்கு, சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் அனுர சேனநாயக்க அழுத்தம் கொடுத்துள்ளமை உறுதியாகின்றது. வாக்குமூலம் பெறும்போதும் அதிலும் அவர் தலையிட்டு அழுத்தங்களைப் பிரயோகித்துள்ளார்.

முதலாவது சந்தேகநபரான நாரஹேன்பிட்டி பொலிஸ் நிலைய குற்றவியல் பொறுப்பதிகாரி சுமித் சம்பிக்க பெரேரா, தாஜுதீன் விவகாரம் தொடர்பில் எமக்கு வழங்கிய விளக்கம் அனைத்தும் பொய்யானவை. இது சாட்சியங்கள் ஊடாகத் தெரியவந்துள்ளது. எனவே இவர்கள் இருவரும் (சுமித் சம்பிக்க பெரேரா – அனுர சேனநாயக்க) விசாரணையை மூடி மறைத்துள்ளமை உறுதி.

மனிதப் படுகொலையை ஏன் இவர்கள் விபத்தாகக் காட்ட வேண்டும். இதற்கான அவசியம் என்ன? இந்தக் கொலையில் இவர்களும் சதியில் ஈடுபட்டுள்ளனர். அந்தச் சதி கொலையின் பின்னர் செய்யப்பட்டதா அல்லது கொலையின் முன்னர் பிரதான சந்தேக நபருடன் இணைந்து செய்யப்பட்டதா என்பதை வெளிப்படுத்த விசாரணைகள் தொடர்கின்றன.

இதற்காக மொபிட்டெல் நிறுவனத்தின் ஒத்துழைப்பு தற்போது கிடைக்க ஆரம்பித்துள்ளது.

### அனுர வந்தார்

2012 ஆம் ஆண்டு மே 16 ஆம் திகதி இரவு 11 மணியாகும்போது நாரஹேன்பிட்டி பொலிஸ் நிலையத்தில் கடமையில் இருந்த பொலிஸ் பரிசோதகர் குணசேகர பியசேன வாக்குமூலம் வழங்கியுள்ளார்.

அவர் தனது வாக்குமூலத்தில், சாலிகா மைதானப் பகுதியில் கார் ஒன்று எரிவது குறித்து கடமை நேரத்தில் கேள்விப்பட்டேன். 17ஆம் திகதி அதிகாலை ஒரு மணிக்கு நான் கழிவறைக்குச் சென்றேன். திரும்பி வரும்போது பொலிஸ் நிலையத்தின் வாசல் அருகே கறுப்பு நிறக் கார் நின்றிருந்தது. பிரதிப் பொலிஸ்மா அதிபர் அனுர சேனநாயக்க பொலிஸ் நிலையம் வந்துள்ளதைத் தெரிந்து கொண்டேன். பின்னர் அவர் காரில் ஏறி வெளியேறிச் சென்றார். இதனை நான் கண்டேன். என்று வாக்குமூலத்தில் குறிப்பிட்டுள்ளார் என்று அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

இந்த நிலையில், வசீமின் சடலம் மீது உடற்கூற்றுப் பரிசோதனை நடத்திய வைத்தியர் ஆனந்த சமரசேகரவுக்கு எதிராக இலங்கை மருத்துவச் சபை முன்னெடுத்துள்ள விசாரணைகள் தொடர்பில் நீதிவான் கேள்வி எழுப்பினார். இலங்கை மருத்துவச் சபை சார்பில் மன்றில் முன்னிலையான சட்டத்தரணி, கடந்த 4 ஆம் திகதி சமரசேகரவுக்கு எதிரான குற்றப் பத்திரிகை மருத்துவச் சபையின் விசாரணை மன்றினால் வழங்கப்பட்டுள்ளது. ஜூலை 23 ஆம் திகதி முதல் அவருக்கு எதிரான விசாரணைகள் இடம்பெறும் எனத் தெரிவித்தார். அத்துடன் ஆனந்த சமர சேகரவின் உதவியாளர்களான வைத்தியர் இராஜகுரு, வைத்தியர் அமரத்தன ஆகிய வைத்தியர்களுக்கு எதிராக எதிர்வரும் ஜூலை 7 ஆம் திகதி விசாரணை இடம்பெறும் என்றும் சுட்டிக்காட்டினார்.

### இரகசிய வாக்குமூலம் வழங்கத் தயார்

இதன் பின்னர் முதலாவது சந்தேகநபரான சுமித் சம்பிக்க பெரேரா சார்பில் மன்றில் முன்னிலையான சிரேஷ்ட சட்டத்தரணி அஜித் பத்திரன தமது தரப்பு வாதத்தை முன்வைத்தார். தனது சேவை பெறுநரான சுமித், குற்றவியல் சட்டத்தின் 127ஆவது பிரிவின் கீழ் நீதிவானுக்கு இரகசிய வாக்குமூலம் வழங்க தொடர்ந்தும் தயாராக உள்ளார். அதற்கான அனுமதியை வழங்குமாறு அவர் நீதிவானைக் கேட்டுக் கொண்டார்.

தொடர்ந்து இரண்டாவது சந்தேக நபரான அனுர சேனநாயக்கவின் சார்பில் மன்றில் முன்னிலையான ஜனாதிபதி சட்டத்தரணி அனில் சில்வா தமது தரப்பு வாதத்தை முன்வைத்தார். எனது சேவை பெறுநர் சார்பில் மீண்டும் பிணை கோருகின்றேன். கடந்த தவணை வாதங்களுக்கு மேலதிகமாக இன்று எனது சேவை பெறுநருக்கு ஏன் பிணை வழங்க வேண்டும் என்பது குறித்த மேலும் சில காரணங்களை முன்வைக்கின்றேன்.

### ஏன் பிணை வேண்டும் ?

எனது சேவை பெறுநருக்குப் பிணை மறுக்கப்பட்ட கடந்த தவணையில் இரு காரணிகளை நீதிவானாகிய நீங்கள் முன்வைத்தீர்கள். சாட்சிகளுக்கு அச்சுறுத்தல், மற்றையது அரசமைப்பில் உள்ள சந்தேகநபரின் உயிர் வாழும் உரிமையை உறுதி செய்தல்.

முதல் காரணியின் அடிப்படையில், இதுவரை இந்த வழக்கில் பதிவு செய்யப்பட்டுள்ள பெரும்பாலான சாட்சியங்கள் பொலிஸ் சாட்சியங்கள். அதில் அனைத்தும் எனது சேவை பெறுநருக்கு எதிராகவே வழங்கப்பட்டுள்ளன. அப்படி இருக்கையில் நாம் அவர்கள் வாக்குமூலம் வழங்கும் போது செய்யாத இடையூறையும் – அச்சுறுத்தலையும் இனிமேல் எப்படிச் செய்வது? இந்த விவகாரத்தில் அறிவியல் ரீதியிலான தடயங்கள் மிக முக்கியமானவை. வைத்திய சபையின் விசாரணையிலோ அல்லது மொபிட்டெல் நிறுவனம் வழங்கும் தகவல்களிலோ, கனடா நிறுவனத்தில் ஆய்வு செய்யப்பட இருக்கும் சி.சி.ரி.வி. காட்சிகள் தொடர்பிலான விவகாரத்திலோ எப்படி எனது சேவை பெறுநர் தாக்கம் செலுத்துவார். இது சாத்தியமற்றது.

சம்பவ இடத்தில் எனது சேவை பெறுநர் சிவில் உடையில் இருந்தார் எனக் குற்றப் புலனாய்வுப் பிரிவு முன்வைக்கும் குற்றச்சாட்டுத் தொடர்பில் உரிய விசாரணை மேற்கொள்வதற்கு எனது சேவை பெறுநரே, அவரது சாரதி, பாதுகாப்பு உத்தியோகத்தர் ஆகியோரைப் பொலிஸாரிடம் அனுப்பி வாக்குமூலம் வழங்கச் செய்து விசாரணைக்கு ஒத்துழைப்பு வழங்கினார். அப்படி இருக்கையில் அவர் எப்படி விசாரணைக்கு ஒத்துழைப்பு வழங்காது சாட்சிகளுக்கு அச்சுறுத்தல் விடுப்பார் என்று எப்படிக் கூற முடியும்.

அடுத்தது வாழும் உரிமை தொடர்பில் நாமே தீர்மானிக்க வேண்டும். சிறையில் எமக்கு எதிரிகள் பலர் உள்ளனர். இவ்வாறான நிலையில் எனது வீட்டிலேயே ஒரு மூலையில் இருப்பதே எனக்குப் பாதுகாப்பானதாகும். பாதுகாப்புக் காரணிகள் குறித்து நாம் பொறுப்பேற்கின்றோம். அப்படி இருக்கையில் இந்த விடயமும் பிணை மறுக்கப்பட ஏதுவான காரணி என்று கொள்ள முடியாது.

இந்த வழக்கைப் பொறுத்தவரையில் பிணைச் சட்டத்தின் கீழ் விசேட நிலமைகளை பிணை பெற முன்வைக்க வேண்டியதில்லை. ஆனாலும் நான் முன்வைக்கின்றேன். எனது சேவை பெறுநர் வைத்தியர் கூல பெரேராவிடம் சிகிச்சை பெற வேண்டியதை மன்றின் கவனத்துக்கு கொண்டு வருகின்றேன். இந்த வழக்கைப் பொறுத்தவரை பிணை வழங்க ஏதுவான அத்தனை விடயங்களும் உள்ளன. எனவே அவருக்குப் பிணை வழங்க வேண்டும் – என்றார்.

இதற்கு அரச சட்டத்தரணி டிலான் கடும் எதிர்ப்பு வெளியிட்டார். இந்த வழக்கின் பாரதூரம், குற்றச்சாட்டு மற்றும் சாட்சிப் பாதுகாப்புக் குறித்து அனைத்து விடயங்களையும் ஆராய்ந்தே எதிர்ப்பை முன்வைக்கின்றோம்.

### அரைக் காற்சட்டையுடன் வந்த அனுர

தாஜுதீன் படுகொலை செய்யப்பட்ட இடத்துக்கு சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் அனுர சேனநாயக்க அதிகாலை வேளை அரைக் காற்சட்டையுடன் வந்துள்ளார். இது குறித்து எம்மிடம் சாட்சியங்கள் உள்ளன. இந்த விடயத்தை விசாரணை செய்யும்போது நாம் அனுரவின் சாரதியாகக் கடமையாற்றிய பொலிஸ் உத்தியோகத்தரையும் விசாரணை செய்தோம். சாரதிக்கு, எந்த விடயத்தை எப்படி வாக்குமூலமாக வழங்கவேண்டும் என்பதை அனுர சொல்லிக்கொடுத்துள்ளதை எம்மால் அறிந்து கொள்ள முடிந்தது. சந்தேகநபரான முன்னாள் பிரதிப் பொலிஸ்மா அதிபர் பிணையில் விடுதலையானால் சாட்சிகளை இப்படிக் கலைத்துவிடுவார். எனவே அது விசாரணைக்குப் பாதிப்பாக அமையும்.

### பிணை மறுப்பு

முதல் சந்தேகநபர் சுமித் இரகசிய வாக்குமூலம் வழங்குவதில் எமக்கு எந்தச் சிக்கலும் இல்லை. அவரது வாக்குமூலத்துக்கு அமைய நாம் பிணை தொடர்பில் பின்னர் ஆலோசிக்கலாம் – என்றார்.

இதனையடுத்து நீதிவான் தனது உத்தரவுகளை வாசித்தார். முதலாவது சந்தேகநபர் இரகசிய வாக்குமூலம் வழங்கத் தயார் எனில் அதனை வழங்கலாம். அத்துடன் அரச தரப்பு மற்றும் சந்தேகநபர்களின் சார்பில் முன்வைக்கப்பட்ட இரு தரப்பு வாதங்களையும் நன்கு கருத்தில் எடுக்கின்றேன். அதனடிப்படையில் சந்தேகநபர்களுக்கு பிணை வழங்க மன்று மறுக்கின்றது.

சந்தேகநபர்கள் இருவரையும் எதிர்வரும் 23ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்க உத்தரவிடுகின்றேன் – என்றார்.

(த-ஜ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450
செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## இரணைமடுக் குளத்து நீரை செவ்வனே பயன்படுத்த...

இரணைமடுக் குளத்தில் இருந்து, யாழ்ப்பாணக் குடாநாட்டுக்குக் குடிதண்ணீரைக் கொண்டு வரும் உத்தேசத் திட்டம், கைவிடப்பட மாட்டாது. அந்த எண்ணம் அரசுக்குத் துளியும் இல்லை.

நகரத் திட்டமிடல், நீர்வழங்கல் துறையின் அமைச்சர் ரவூப் ஹக்கீம், மேற்போந்த தகவலை, கருத்தை நாடாளுமன்றில் வெளிப்படுத்தி உள்ளார்.

கடல் நீரைக் குடிதண்ணீர் ஆக்கும் திட்டம், இடைக்காலத் தீர்வாக மட்டுமே முன்னெடுக்கப்படும் என்றும் அவர் விரிவாக விளக்கம் அளித்துள்ளார்.

இரணைமடுக் குளத்திலிருந்து யாழ். குடாநாட்டுக்கு நீர் வழங்கும் திட்டத்துக்கு ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதி உதவி கிடைக்கவுள்ளது.

மொத்தத்தில், இரணைமடுக் குளத்தின் தண்ணீரை குடாநாட்டுக்கு எடுத்துச் செல்லும் திட்டத்துக்கு, கிளிநொச்சி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள், மற்றும் வடமாகாண சபை உறுப்பினர்கள், விவசாயிகள் என்று பல தரப்பினராலும் முன்னர் எதிர்ப்புத் தெரிவிக்கப்பட்டு வந்தமை சகலரும் அறிந்த ஒன்றே.

இதேவேளை, கடந்த (மே) மாதத்தில், வடக்கு மாகாணத்தில், நீர்த்தேக்கங்களை புதிதாக அமைப்பதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியமை குறிப்பிடத்தக்கது.

கல்லுண்டாய், புங்குடுதீவு மற்றும் பூநகரிப் பிரதேசங்களில் நீர்த்தேக்கங்களை அமைக்கவும், நல்லூர் மற்றும் மீசாலைப் பகுதிகளில் நிலக்கீழ் நீர்த்தாங்கிகளை அமைப்பதற்குமான ஒப்பந்தங்களை வழங்க அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியமை நினைவில் கொள்ளத்தக்கது.

அதேவேளை--

யாழ்ப்பாணத்துக்கு குடிதண்ணீர் வழங்கும் விடயத்தில், கிளிநொச்சி விவசாயிகளின் பயன்பாட்டுக்குப் பாதிப்பு ஏற்படாத வகையில், பொருத்தமான தொழில்நுட்ப முறைகள் மூலம், ஒரு லட்சத்து இருபதாயிரம் கனஅடி தண்ணீரைத் தேக்குவதன் ஊடாக, மேலதிக தண்ணீரை வழங்குவது குறித்து ஆலோசிக்கப்படுவதாக அமைச்சர் தகவல் வெளியிட்டிருந்தார்.


தாளையடியில் இருந்து குடிதண்ணீரைப் பெறுவதற்குப் பதிலாக, இரணைமடுக்குளத்துநீரை, யாழ்ப்பாணக் குடாநாட்டுக்குக் கொண்டு வருவதன் ஊடாக குடிதண்ணீர்த் தேவையைப் பூர்த்தி செய்ய இயலும் என்ற கருத்தும் அமைச்சரிடம் முன்வைக்கப்பட்டது.

இரணைமடுக் குளத்தின் தண்ணீரைக் கடலுக்குச் செல்லாது தடுத்து தேக்கும் நீரை, நான்கு, ஐந்து மாதங்களுக்கு யாழ்.குடாநாட்டு மக்களது பாவனைக்குப் பயன்படுத்த முடியும் என்ற கருத்தும் வெளியிடப்பட்டது.

மொத்தத்தில், கிளிநொச்சி மாவட்ட விவசாயிகளது விவசாய நடவடிக்கைகளுக்கு ஆதாரமாக விளங்கும் இரணைமடுக் குளத்து நீரை, யாழ்.குடாநாட்டு மக்களது தேவைக்குப் பயன்படுத்த மேற்கொள்ளப்படும் திட்டத்தால் தாம் பாதிக்கப்படக் கூடுமென கிளிநொச்சி மாவட்ட விவசாயிகள் அச்சமடைவது நியாயமானதே.

ஆயினும் அவர்களது விவசாய முயற்சிகளுக்கான நீரைத் தேக்கி வைத்துக் கொண்டு, மேலதிகமாக அவமே கடலில் கலக்கும் மேலதிக நீரை யாழ்.குடாநாட்டு மக்களது தேவைக்குப் பயன்படுத்தும் திட்டம் கூட நியாயமானதும், காலத்தின் தேவையைப் பூர்த்தி செய்யவல்லதுமாகும். இதனை நாம் கருத்திற் கொள்வது பயனுடைத்து.

# அமைச்சர் சத்தியலிங்கத்துக்கு அச்சுறுத்தல்;




ந.லோகதயாளன்

வட மாகாண சுகாதார அமைச்சர் ப.சத்தியலிங்கத்துக்கு கடந்த ஒரு மாதகாலமாக கொலை அச்சுறுத்தல் விடப்பட்ட தன் பின்னணியில் இருப்பவர்கள் யார் என்பதைத் தேடும்போது பல திடுக்கிடும் தகவல்கள் வெளிவந்துள்ளன.

சுகாதார அமைச்சர் சத்தியலிங்கத்தைக் கடந்த மாதம் 20ஆம் திகதி தொலைபேசி இலக்கம் ஒன்றின் மூலம் தொடர்பு கொண்ட ஓர் அடையாளம்தெரியாத நபர் பல வழிகளிலும் அச்சுறுத்தி வந்துள்ளார். இருப்பினும் இதனை ஒரு பொருட்டாகக் கருதாத வைத்தியர் தனது வழமையான பணிகளை மேற்கொண்டு வந்தார்.

இவ்வாறு தொடர்ந்த அச்சுறுத்தல் நேரடியாகவே கொலை மிரட்டலாக மாறியதோடு மிரட்டியவர் தன்னை ஒரு பிரபல கொலைகாரன் என்னும் வகையில் அறிமுகம் செய்யவும் விழைந்தார். இதன் பிற்பாடே வைத்தியரும் உசார் அடைந்தார். குறித்த தொலைபேசி இலக்கத்தின் அடிப்படையில் வவுனியா பொலிஸாரிடம் முறையிடப்பட்டது. இந்த முறைப்பாட்டின் அடிப்படையில் தேடுதல் இடம்பெறுகின்றது என அச்சுறுத்தல்காரன் உசார் அடையக்கூடாது என்பதன் அடிப்படையில் ஆரம்பத்தில் தகவல் இரகசியமாகவே வைக்கப்பட்டது. விசாரணைகளுக்குத் தொலைபேசி நிறுவனத்தின் உதவி நாடப்பட்டது. அதாவது அந்த இலக்கத்திற்குரியவர் யார்? எங்கிருக்கின்றார் போன்ற விவரங்களைத் தேட முனைந்தனர். இருப்பினும் பொலிஸாரின் முதல் முயற்சி தோல்வியில் முடிவடைந்தது.

உரிய தொலைபேசி இலக்கம் முகவரி வழங்கப்படாது நடமாடும் வியாபாரிகள் மூலம் வீதியோரம் விற்பனை செய்யப்பட்ட ஒரு தொலைபேசி இலக்க அட்டைக்குரியது என்பதுடன் அது பதுளையில்பெறப்பட்டிருந்ததும் தெரியவந்தது. இருப்பினும் பொலிஸாரின் விசாரணையைத் தொடர்ந்து தொலைபேசி நிறுவனத்தின் அனுசரணையுடன் உரிய இலக்கம் செயற்படும் பிரதேசம் தொடர்பில் விசாரணை ஆரம்பமானது. அதில் பொலிஸார் வெற்றி கண்டனர் . உரிய இலக்கம் கிளிநொச்சிப் பிரதேச எல்லைக்குள் செயற்படுவது உறுதியானது.

பொலிஸாரின் விசாரணைகள் தீவிரம் பெற்றன. குறித்த தொலைபேசி இலக்கம் தற்போது கிளிநொச்சியில் இருந்து மாறி வவுனியாவில் செயற்பட ஆரம்பித்தது. தகவலை அமைச்சருக்கும் வழங்கிய பொலிஸார் சுறுசுறுப்படைந்தனர். தன்னைப் பொலிஸார் எவ்வகையிலும் நெருங்கிவிடக்கூடாது என்பதால் அச்சுறுத்தல்காரனும் தனது சுய கவனத்தைப் பேணியே வந்தான். இருப்பினும் பொலிஸார் தன்னை நெருங்கி விட்டனர் என்பதை உணரவில்லை.

இந்த நிலையில் சுகாதார அமைச்சர், வட மாகாண முதலமைச்சர் மற்றும் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் , தமிழரசுக்கட்சியின் தலைவர் மாவை.சேனாதிராசா , வட மாகாணபேரவையின் தலைவர் சி.வி.கே.சிவஞானம் போன்றோருக்கும் தகவல்களை வழங்கினார். உடனடியாகவே செயற்பட்ட கட்சித் தலைமை இது தொடர்பில் இரகசிய ஆய்வுகளை மேற்கொண்ட பின்னர் மாவை. சேனாதிராசா, சி.வி.கே.சிவஞானம் ஆகியோருக்கு ஒரு தகவலை வழங்கியது. அதன்பிரகாரம் மாவை சேனாதிராசா, சி.வி.கே.சிவஞானம் ஆகியோருடன் கூட்டமைப்பின் மற்றுமோர் முக்கியஸ்தரும் வவுனியாவுக்கு நேரில் சென்று பொலிஸ் அதிகாரியைச் சந்தித்து நிலைமையைக் கூறியதோடு சுகாதார அமைச்சரிடமும் இறுதி நிலவரத்தைக் கேட்டறிந்து கொண்டனர்.

உரிய தகவல்கள் மற்றும் அனுமதிகளைப் பெற்ற பொலிஸார் அதிரடியாகச் செயற்பட முடிவாகியது. இதன்பிரகாரம் கடந்த மூன்றாம் திகதி இரவு கிளிநொச்சி முதல் வவுனியா வரையான இடத்தில் பல இடங்களில் பொலிஸார் களமிறங்கினர். ஏ.9 வீதியில் நொச்சிமோட்டைக்கு அண்மையில் அதிகாலை மூன்று மணியளவில் சந்தேக நபரை மடக்கினர். இவரின் ஆரம்ப வாக்கு மூலம் மற்றும் தகவலின் பிரகாரம் இவர் ஆரம்பகாலத்தில் ஓர் ஆயுத இயக்கத்தின் உறுப்பினராக இருந்து அந்த இயக்கத்தை விடுதலைப் புலிகள் தாக்கியதன் காரணமாக ஒதுங்கி வாழ்ந்துள்ளார். இவ்வாறான நிலையில் கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஒருவேட்பாளருக்குச் சாரதியாகவும் பணி புரிந்துள்ளார். இருப்பினும் இவருக்கான சொந்த இருப்பிடம் புத்தளம் எனத் தெரிகின்றது.

வவுனியாவில் போதிய காரணம் இன்றி சுகாதார அமைச்சர் சத்தியலிங்கத்தின் உடன் பிறந்த சகோதரனின் இல்லத்திற்கு அருகில் ஒரு வீட்டை வாடகைக்குப் பெற்று அங்கு தங்கியுள்ளார். இவ்வாறான நிலையில் கைது செய்யப்பட்டவர் தனித்துச் செயற்படவில்லை எனவும்மேலும்சிலருடன் இணைந்தே செயற்பட்டமையும் தற்போது தெரியவருகின்றது. இவர்களை இயக்கியவர்கள் தொடர்பிலும் பொலிஸார் தீவிர விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். இவ்வாறு இடம்பெறும் தீவிர விசாரணைகளில் பல திடுக்கிடும் உண்மைகள்வெளிவரக்கூடிய நிலைமையே தென்படுவதால் பல பிரபலங்கள் தற்போதுஅச்சத்தில்உள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிங்கள மொழிமூலம்: மவ்பிம
தமிழில்: வீ.எஸ்.ரீ

# படையினரை அவமதித்தவர்கள் மகிந்த தரப்பினரே

கிழக்கு மாகாணம் சம்பூர் மகா வித்தியாலயத்தில் அண்மையில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கிழக்கு மாகாண முதலமைச்சர் நடந்து கொண்ட விதம் குறித்து பலதரப்புகளில் இருந்தும் பலதரப்பட்ட விமர்சனங்கள் எழுப்பப்பட்டன. குறித்த சம்பவம் தொடர்பாக சம்பந்தப்பட்ட கடற்படை அதிகாரியிடம் முதலமைச்சர் மன்னிப்புக் கோர வேண்டும் என்ற கருத்தும் உச்சம் பெற்றிருந்தது. ஆயினும் தற்போது குறித்த விடயம் தொடர்பான பரபரப்பு பெருமளவில் தணிந்து போய்விட்டது.

நாட்டுக்காக உயிரையும் தியாகம் செய்யும் படையினர், அரசியல்வாதிகள் முன்னிலையில் அவமானப்படுத்தப்படக் கூடாதென்பது நாட்டு மக்கள் மத்தியில் நிலவும் பொதுக்கருத்து.

அவ்விதம் அந்தத் தரப்பினர் அவமதிக்கப்பட்டமை தொடர்பில் அண்மைய சம்பூர் சம்பவம்தான் முதலாவதாகும் என்று கொள்ளவும் இயலாது.

மகிந்தவின் ஆட்சிக்காலத்தில் அவரது மகன்மாரில் ஒருவரான யோசித ராஜபக்ச, கடற்படையில் இணைந்தது மட்டுமல்லாமல் மூத்த கடற்படை வீரர்களுக்கே கிட்ட வேண்டிய வெளிநாட்டுப் பயிற்சி வாய்ப்பை, சேவையில் புதிதாக இணைந்து கொண்ட தாம் கைப்பற்றியமை அந்தவேளையில் மகிந்த அரசு கடற்படை வீரர்களுக்குச் செய்த துரோகம். கடற்படையில் இணைந்து ஒரு நாள் கூட போர் நடவடிக்கைகளில் பங்குகொள்ளாத யோசித ராஜபக்சவுக்கு அந்த வாய்ப்பு வழங்கப்பட்டமை அந்தவேளையில் விமர்சனத்துக்கு உள்ளானது.

2006 ஆம் ஆண்டில் யோசிதவை கடற்படையில் இணைய வைத்ததன் மூலம், நாட்டுக்காகச் சேவையாற்றத் தமது மகனையே ஈந்திருப்பதாகக் காட்டிக்கொள்ள ஜனாதிபதி மகிந்த தீவிர அக்கறை காட்டினார். தமது மகனையே போர்க்களத்துக்கு அனுப்பி வைத்த வீர புருஷராக மகிந்தவை அந்த வேளையில் ஊடகங்கள்தலையில்தூக்கிவைத்துக்கொண்டாடின. கடற்படையில் இணைந்து இரு வார காலம் கழிந்த நிலையில், 2007 ஜனவரியில் இளம் படை வீரர்களுக்கான பயிற்சி நெறியில் இணைந்து பயிற்சி பெற யோசித பிரிட்டனுக்கு அனுப்பி வைக்கப்பட்டார். அது குறித்து கடற்படை வீரர்கள் மத்தியில் விமர்சனம் எழுந்த போது யோசிதவுக்கென விசேட வாய்ப்பாக அது பிரிட்டன் அரசால் வழங்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. ஆயினும் 2015 – ஜனவரி ஜனாதிபதித் தேர்தலில் மகிந்த தோல்வி கண்ட பின்னர் யோசிதவின் கடற்படை நியமனம் குறித்து விசாரணை செய்யவென கடற்படைத் தளபதியால் நியமிக்கப்பட்ட விசாரணைக் குழுவின் அறிக்கையின்படி, யோசித விசேட கடற்படைப் பயிற்சி பெறுவதற்காக இலங்கைக் கடற்படைத்தரப்பு 62 லட்சத்து 84 ஆயிரம் ரூபாவைச் செலவிட்டதாக வெளிப்படுத்தப்பட்டுள்ளது.



குறித்த பயிற்சி நெறியைப் பூர்த்தி செய்து 2007 டிசெம்பரில் யோசித நாடு திரும்பிய வேளை, நாட்டில் விடுதலைப் புலிகளுடனான மோதல்களில் முப்படையினரும் தீவிரமாக ஈடுபட்டிருந்தனர். வடபகுதி மோதல்களில் உயிரிழந்த பாதுகாப்புப்படையினரது உடல்கள் அடிக்கடி கொழும்புக்கு அனுப்பி வைக்கப்பட்ட கடும் பரபரப்பான சூழல் அது. நாடு திரும்பி ஐந்து மாத காலம் கழிந்த நிலையில் 2008 மே மாதத்தில் யோசித மீண்டுமொரு கடற்படைப் பயிற்சி நெறியில் இணைந்து பயிற்சி பெற வெளிநாடொன்றுக்கு அனுப்பப்பட்டார். அது குறித்தும் கடற்படை வீரர்கள் மத்தியில் விமர்சனங்கள் எழுந்த வேளையிலும், அது அவருக்கு வழங்கப்பட்ட விசேட வாய்ப்பெனக் காரணம் கற்பிக்கப்பட்டது. ஆயினும் யோசிதவின் குறித்த பயிற்சி நெறிக்காக கடற்படைத்தரப்பால் 53 லட்சத்து 37 ஆயிரம் ரூபாவரை செலவிடப்பட்டதாக நல்லாட்சி அரசால் நியமிக்கப்பட்ட விசாரணைக்குழுவின் அறிக்கைத் தகவல் தந்திருக்கிறது.

2008 ஒக்ரோபரில் தமது வெளிநாட்டுப் பயிற்சியை முடித்து நாடு திரும்பிய யோசித, ஒரு நாளாவது வடக்கு-கிழக்குப் போரில் விடுதலைப் புலிகளுக்கு எதிரான நடவடிக்கைகளில் ஈடுபட்டதில்லை.

2009இல் போர் முடிவடைந்ததையடுத்து யோசித மீண்டும் விசேட கட்டளையிடும் அதிகாரி பயிற்சி நெறியொன்றை மேற்கொள்வதற்காக 2009 நவம்பரில் உக்ரேன் நாட்டுக்கு அனுப்பிவைக்கப்பட்டார். குறித்த பயிற்சி நெறிக்காக 37 லட்சத்து 73 ஆயிரம் ரூபா அரசால் செலவிடப்பட்டதாக விசாரணைக் குழுவின் அறிக்கை மூலம் தகவல் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

இவற்றுக்கு மத்தியில் 2009 மார்ச் மாதம் 7ஆம் திகதி, திருகோணமலை கடற்படை முகாமில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் வைத்து நாட்டைக் காப்பாற்ற யோசித ஆற்றிய பணிக்கான கௌரவமாக வருடத்தின் சிறந்த 'மிட்சிப்மன் மனிதர்' மற்றும் 'ஸ்வார்ட் ஒவ்ஹொனர்' (Midshipman Man) (Sword of honour) ஆகிய விருதுகள் யோசித ராஜபக்சவுக்கு ஜனாதிபதி மகிந்தவால் வழங்கப்பட்டமை அந்த வேளையில் பெரும் விமர்சனங்களுக்கு உள்ளானது.

ஜனாதிபதி மகிந்த மற்றும் பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ஆகியோரின் பரிந்துரையின் பேரில் யோசிதவுக்கு வழங்கப்பட்ட அந்தக் கௌரவம், போரின் போது உயிரிழந்த, அங்கங்களை இழந்த முப்படைகளையும் சேர்ந்த பாதுகாப்புப் படையினரை அவமதிக்கும் ஒன்றென அந்தவேளையில் பல தரப்பினர் மத்தியிலிருந்தும் கடும் விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டன.

அர்ப்பணிப்புடன் நாட்டுக்காக வீரதீரச் செயல்களைப் புரிந்த படையினருக்குக் கிட்ட வேண்டிய கௌரவத்தை யோசித பறித்தெடுத்தமை குறித்து அந்த வேளையில் இந்த நாட்டின் எந்தவொரு ஊடகமோ நாட்டுப் பற்றாளர் தரப்பினரோ கேள்வி எழுப்பியதில்லை.

அதேபோன்று போரை வெற்றி கொண்டவராகப் புகழப்பட்ட முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகாவை, நாயை இழுத்துச் சென்று கூண்டில் அடைத்தமை போன்று சிறைச்சாலையில் அடைத்த வேளையில் நாட்டுப் பற்றாளர் எனத் தம்மைப் பீற்றிக் கொள்ளும் தரப்பினர்கள் மகிந்த ராஜபக்ஷவின் வீட்டுச் சாப்பாட்டு மேசையில் இருந்து, விழும் எலும்புத் துண்டுகளை ருசி பார்த்துக் கொண்டிருந்தனர்.

மகிந்தவும் அவரது ஆதரவாளர்களும் படையினரை அவமானப்படுத்தும் போது அது வீர தீரச் செயலெனவும், நாட்டுப் பற்று உணர்வு எனவும் அவர்களால் விமர்சிக்கப்படுகிறது. அந்த வகையில் இவையெல்லாம் நாட்டுப் பற்றுணர்வால் மேற்கொள்ளப்படுபவையோ அல்லது படை வீரர்கள் மீதான மதிப்புணர்வால்மேற்கொள்ளப்படுபவையோ அல்ல. உண்மையில் இவை யாவும் அதிகாரத்தை அடைய முடியாத மன வெப்பியாரம் மற்றும் நிதி வளத்தைத் தேடிக் கொள்ள இயலாதுள்ள மனச் சோகத்தின் காரணமாக முன்னெடுக்கப்படும் கோசங்கள், எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களே.

# அராலியூடாக சித்தன்கேணி வரை 789 பஸ் சேவை

அராலி மக்கள் ஒவ்வொரு நாளும் தமது நேரத்தில் பெரும்பகுதியை பஸ்சுக்காகக் காத்திருப்பதிலேயே வீணாகக் கழிக்கின்றனர். போக்குவரத்தும் அடிப்படைத் தேவையாக மாறியுள்ள நிலையில் ஒழுங்கான சீரான இடைவெளியிலான, இதுதான் நேரம் என்று இல்லாத பயணிகள் போக்குவரத்துச் சேவையால் தினம் தினம் பெரும் அசௌகரியத்துக்குள்ளாகின்றனர். இந்த அவல நிலைக்குக் காரணம் பிரதேச மக்களே என்றால் தவறேதும் இல்லை.

கீரைக்கடைக்கும் எதிர்க்கடை வேண்டும். ஆனால் அராலி மார்க்கத்தில் தனியார் சிற்றூர்திகளுக்குச் சவால் விடும் அளவுக்கு இ.போ.ச. பஸ்கள் சேவையில் ஈடுபடுவதில்லை. இதனால் தனியார் சிற்றூர்திகள் தமக்கு விரும்பியவாறு, தாம் விரும்பிய நேரத்திலும் ஒழுங்கின்றிச் செயற்படுவதால் மக்கள் பலமணி நேரம் காத்திருக்கின்றனர். திருமண நிகழ்வு போன்ற விசேட தினங்கள் மற்றும் தேவைகளுக்காக சிற்றூர்திகள் பயன்படுத்தப்பட்டால் பஸ்ஸுக்காகக் காத்திருப்பதை விட நடந்தே வந்துவிடலாம் என்ற நிலையே காணப்படுகின்றது. சிறிய பஸ்கள் சிலமணி நேரத்துக்கு ஒரு தடவை ஓடுவதால் சன நெருக்கம் ஏற்பட்டு விடுகிறது. சிறிய இடைவெளி உள்ள பஸ்ஸில் மக்கள் நெருக்கி ஏற்றப்படுகின்றனர். இதனால் சிலர் நெருக்கத்தைப் பயன்படுத்திப் பெண்கள் மீது அங்க சேட்டைகளிலும் ஈடுபடுகின்றனர்.

பாடசாலை மாணவர்கள் வைத்தியசாலை செல்வோர், தொழில் நிமித்தம் மற்றும் ஏனைய தேவைக்காகச் செல்வோர் என அனைத்துத் தரப்பினரும் முன்னர் 'எங்கட பொடியள் உழைக்கட்டும்' என்று இ.போ.சவில் ஏறாது புறக்கணித்து தனியார் சிற்றூர்தியில் ஏறியதன் விளைவால் இ.போ.ச. நட்டமடைந்து சேவையை மட்டுப்படுத்தியதால் தான் இந்த அவல நிலையென உணர்ந்து பலதடவை இ.போ.சவிடம் மீண்டும் முன்போல் சேவைகளை நடத்துமாறு கோரிக்கை விடுத்தனர். இருப்பினும் கோரிக்கைக்கான பதிலை கேள்விகளாலேயே கேட்டனர் இ.போ.சவினர். ஏன் இ.போ.சவில் ஏற நீங்கள் விரும்புவதில்லை? ஏன் எம்மைக் கண்டவுடன் திரும்பி நின்று தனியார் சிற்றூர்திகளில் ஏறுகிறீர்கள்? பிறகு இ.போ.சவை நீங்கள் விரும்பக் காரணம் என்ன? பயணிகள் இல்லாமல் வாகனம் ஓட முடியுமா? போன்ற பல நியாயமான கேள்விகளையே பதிலாக வழங்கினர்.

இருப்பினும் பல கோரிக்கைகளின் பின்பு அரச அதிபர், இ.போ.சவினரின் மக்கள் மீதான அக்கறையின் வெளிப்பாடாக சேவையில் ஈடுபடுத்த பஸ்கள் இல்லாத போதும், மாணவர்கள் மற்றும் மக்கள் நலன் கருதி காலை 7 மணிக்கு யாழ்ப்பாணம் சித்தன்கேணி வரை நெடுந்தூர பயணத்தில் ஈடுபடும் பஸ்ஸை சேவையில் ஈடுபடுத்தி உள்ளார். மாணவர்களின் நலனை மையமாகக் கொண்டு காலையில் சேவையில் ஈடுபடுத்தினாலும் போதுமான அளவு மக்களோ மாணவர்களோ அதில் ஏறுவதில்லை. தனியார் மினி பஸ்களில் காத்திருந்து நெருக்குப்பட்டுப் போவதிலும் பார்க்க இ.போ.ச சேவையில் தாம் அதிகம் விருப்பம் கொண்டாலும் பஸ் நேரத்துக்கு வராததால் குறித்த நேரத்துக்கு வரமுடியவில்லை என்று கூறுகின்றனர். சீசன் எடுத்து செலவைக் குறைப்பதற்கும் பாடசாலை விடும் வேளையில் இ.போ.ச ஓடுவதில்லை என்று கூறுகின்றனர்.

ஆகவே மாணவர்கள் தாம் சீசன் எடுக்கக்கூடிய விதத்தில் காலையிலும் பாடசாலை விடும் வேளையிலும் பஸ்கள் சேவையில் ஈடுபட வேண்டும் என்றும் காலை நேரத்தில் சற்று நேரத்தை மாற்ற வேண்டும் என்றும் கூறுகின்றனர்.

தாம் மீண்டும் முழுநேர சேவையில் ஈடுபட முயற்சிகளை மேற்கொள்வதாகக் கூறிய இ.போ.சவினர், மக்கள் தமக்குப் முழு ஆதரவு வழங்க வேண்டும். அவ்வாறு வழங்காத பட்சத்தில் தாம் தொடர்ந்து சேவையை வழங்கமுடியாது என்று கூறியுள்ளனர். இதற்கு இ.போ.ச தொடர்ச்சியாக சேவை வழங்க வேண்டும், தொடர்ச்சியான சேவை வழங்கினால் தாம் ஆதரவு அளிப்போம் என்று தினம் தினம் அவலப்படும் மக்கள் கூறியுள்ளனர். மக்கள் நலன் கருதி இ.போ.ச மற்றும் தனியார் மினி பஸ்கள் இணைந்து, இணைந்த நேர அட்டவணையில் பயணிகள் சேவையில் ஈடுபட்டு மக்களின் பயணத்தில் காலதாமதத்தை ஏற்படுத்தாது சிறப்பான சேவையை வழங்க வேண்டும் என்பதே ஒட்டு மொத்த அராலி மக்களின் விருப்பமும் எதிர்பார்ப்புமாகும்.

அனந்தன்

வாசகர் திருமுகம் பகுதிக்கு எழுதுபவர்கள் தமது பெயர், முகவரி, தொடர்பு எண் என்பவற்றை நிச்சயம் குறிப்பிட்டு அனுப்ப வேண்டும். சொந்தப் பெயரை வெளியிட விரும்பாதவர்கள் அது பற்றிக் குறிப்பிட்டு, புனை பெயரையும் எழுதி அனுப்பலாம். ஆனால் உண்மையான விவரங்கள் குறிப்பிடப்படாத வாசகர் திருமுகங்கள் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படமாட்டா. எழுதியவர்களின் விவரங்கள் குறித்த இரகசியங்கள் தேவைப்படும் பட்சத்தில் காக்கப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 2 மில்லியன் டொலர்கள் செலவில் நடத்தப்பட்ட ஆடம்பரத் திருமணம்



மொஸ்கோ, ஜூன் 11
ரஷ்யர் ஒருவர் தனது மகனின் திருமணத்தை 2 மில்லியன் டொலருக்கும் அதிகமான செலவில் நடத்தியுள்ளார்.
ரஷ்யத் தலைநகர் மொஸ்கோவில் வசிக்கும் 25 வயதான சலோம் கின்ஸ்ருராஷிவ், 23 வயதான ஜோர்ஜியாவைச் சேர்ந்த சர்கிஸ் கரப்ரைன்க்கம் ஆகியோருக்கு அண்மையில் திருமணம் நடைபெற்றது. மொஸ்கோவில் வசிக்கும் சலோம் 33 வணிக மையங்கள், 4 அலுவலகக் கட்டடங்கள், 8 ஹோட்டல்களை ரஷ்யாவில் கொண்டுள்ளார். இவரது சொத்து மதிப்பு 4 பில்லியன் டொலர்களாகும். திருமணத்தில் இசை நிகழ்ச்சிக்கெனச் செலவு 5 இலிருந்து 8 லட்சம் பொலர்களாகும். உலகப் புகழ் பெற்ற பாடகர்கள், நடனக் கலைஞர்களும் இதில் பங்கு கொண்டனர்.
முழுவதும் இயற்கைப் பூக்களால் அலங்கரிக்கப்பட்ட ஹோட்டலில் திருமணம் நடைபெற்றது. மணப்பெண் அணிந்திருந்த ஆடைக்கும், ஆபரணங்களுக்கும், சுமார் 2 லட்சம் பொலருக்கும் அதிகமான பணம் செலவு செய்யப்பட்டுள்ளது.
உலக அளவில் இருந்து 500 விருந்தினர்கள் அழைக்கப்பட்டிருந்தனர். பாரம்பரிய நடனம், பெண் அழைப்பு என பாரம்பரிய முறைப்படி இந்தத் திருமணம் நடைபெற்றது.
(த-ஐ-ரி4)

## நீச்சலுடையின்றி குளிக்க தடை

பெர்லின், ஜூன் 11
ஜேர்மனில் உள்ள நீச்சல் குளத்தில் குளிக்கும்போது உடல் மூடிய ஆடையைஅணியக் கூடாது எனத் தடை விதிக்கப்பட்டுள்ளது. நியுற்றபிலிங் என்ற இடத்தில் உள்ள குளத்தில் பெண்கள் மட்டும் குளிப்பதற்கு ஏதுவாக வசதிகள் செய்து கொடுக்கப்பட்டுள்ளன.
இந்த நிலையில் இங்கு வரும் இஸ்லாமியப் பெண்கள், உடல் மூடிய ஆடையை அணிந்து குளிக்கின்றனர், இந்த ஆடை நீச்சல் ஆடை போன்று இருக்காமல் உடல் முழுவதும் மூடப்பட்டபடி, சற்று நாகரிகமாக இருக்கும். மற்றைய பெண்கள் நீச்சல் ஆடையில் குளிக்கையில், இஸ்லாம் பெண்கள் மட்டும் உடல் மூடிய ஆடை அணிந்து குளித்துள்ளமை சக பெண்களுக்கு வெறுப்பை ஏற்படுத்தியுள்ளது. இதன் காரணமாக, ஏனைய பெண்கள் நகராட்சியைத் தொடர்புகொண்டு முறைப்பாடு அளித்துள்ளனர்.
இது குறித்து கிறிஸ்தவ கட்சியின் ஆளுநர் ஹென்ஸ்ஹெய்க்கிள் கூறியதாவது: இந்தக் குளம் பொதுமக்கள் பயன்பாட்டுக்காக வைக்கப்பட்டுள்ளது, இதில், இஸ்லாம், கிறிஸ்தவர்கள் என எவ்வித பாகுபாடும் காட்ட இயலாது. எனவே இதுபோன்ற ஆடையை இனிப் பயன்படுத்தக் கூடாது எனத் தடை விதிக்கப்பட்டுள்ளது - என்றார். தற்போது இந்த தடைக்கு எதிர்ப்புத் தெரிவிக்கப்படுகிறது.
(த-ஐ-ரி4)




கனடாவின் தலைநகர் ஒட்டாவாவின் சாலை ஒன்றில் நில
கட்டங்கள் உள்ள பகுதியில் இந்தச் சம்பவம் இடம்பெற்ற

## படகுப் போட்டியில் விபத்து 10 பேர் சாவு! 8 பேர் மாயம்!!



பீஜிங், ஜூன் 11
சீனாவில் நடைபெற்ற படகுப் போட்டி ஒன்றில் படகு கவிழ்ந்ததில் 10 பேர் உயிரிழந்தனர்; 8 பேர் காணாமற்போயுள்ளனர் என அதிகாரிகள் தெரிவித்தனர்.
பியூஜியன் மாகாணத்தில் மின்ஜியாங் ஆற்றில் பாரம்பரிய டிராகன் படகுப் போட்டி ஒன்று நேற்று முன்தினம் நடைபெற்றது. இதன்போது ஒரு படகில் 36 பேர் என்ற வகையில், 8 படகுகளில் 160 பேருக்கும் மேல் போட்டியில் கலந்துகொண்டனர். இதன்போது படகு ஒன்று கவிழ்ந்ததில் 10 பேர் உயிரிழந்ததுடன், 5 பேர் காணாமற்போயுள்ளனர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.
(த-ஐ-ரி4)

## முட்டைக் கருவை வெளியே வைத்து குஞ்சு பொரித்து புதியதொரு சாதனை

ஜப்பான் தலைநகர் டோக்கியோவில் சிபாவில் அமைந்துள்ள ஒய்காமா பாடசாலையின் உயிரியல் பிரிவு மாணவர்கள் புதிய சாதனை ஒன்றைப் படைத்துள்ளார்.
கோழி முட்டையின் கோது இன்றி, முட்டைக் கருவை வெளியில் வைத்து குஞ்சு பொரித்துச் சாதனை படைத்துள்ளனர். ஒரு சாதாரண பிளாஸ்ரிக் உறையை எடுக்கும் ஒரு மாணவி, அதை ஒரு கூம்பு வடிவிலான பொருளின் மீது வைத்து உறையின் அடர்த்தியைக் குறைக்கும் வகையில் அதை இழுத்து பெரிதாக்குகிறார்.
அந்த உறையை ஒரு பிளாஸ்ரிக் கோப்பையின் மீது போர்த்தி, முட்டையை உடைத்து கோப்பைக்குள் ஊற்றுகிறார். பின்னர், திறந்த நிலையில் அந்தக் கோப்பையை முட்டை பொரிப்பானில் வைத்த பின்னர், முட்டையின் மஞ்சள் கருவின் சிறு துணுக்காகத் தோன்றும் உயிரணு மூன்றே நாள்களில் இதயமாகவும், அடுத்த 21 நாள்களில் முழு உடல் வளர்ச்சியுடன் முடி, இறக்கை போன்றவையும் வளரப்பெற்ற கோழிக் குஞ்சாகவும் நடைபோடுகிறது. இதன்மூலம், முட்டையின் ஓட்டுக்குள் தான் குஞ்சுகள் பொரிக்கும் என்னும் பழைய சித்தாந்தம் தவறாகியுள்ளது. இந்த வீடியோவை 5 கோடிக்கும் அதிகமானோர் பார்வையிட்டுள்ளனர்.
(த-ஐ-ரி4)

# உலகளவில் 8,0
# குறிவைத்துள்ள

லண்டன், ஜூன் 11
ஐ.எஸ். இணைய ஊடுருவல் அமைப்பு உலக அளவில் 8 ஆயிரத்துக்கும் மேற்பட்டோரைக் குறிவைத்துப் பெயர் பட்டியல் தயாரித்திருப்பதாக பிரிட்டன் செய்தி நிறுவனம் ஒன்று நேற்று அறிவித்துள்ளது.
ஐ.எஸ். இணைய ஊடுருவல் அமைப்பு, 8 ஆயிரத்து 318 பேரின் பெயர், வதிவிட முகவரி, மின்னஞ்சல் போன்ற விவரங்களைச் சேகரித்துள்ளதாக அந்தச் செய்தி நிறுவனம் மேலும் தெரிவித்துள்ளது.
கனடா, ஆஸ்திரேலியா, ஐரோப்பா மற்றும் அமெரிக்காவைச் சேர்ந்தோரின் பெயர்களே இந்தப் பட்டியலில் உள்ளடங்கியுள்ளன.
அவர்களைப் பின்தொடர்ந்து அவதானித்து, இஸ்லாமியர்களுக்கான பழிவாங்கும் செயற்பாட்டை மேற்கொள்ளுமாறு, ஐ.எஸ். தனது ஆதரவாளர்களை அறிவுறுத்தியுள்ளதாக குறித்த செய்தி நிறுவனம் அறிவித்துள்ளது. அத்துடன் வெளியிடப்பட்ட பட்டியலில், 7 ஆயிரத்து 848 அமெரிக்கர்களும், 312 கனேடியர்களும், 39 பிரித்தானியர்



## போராளிகளுக்குச் சம்பளம் வழங்கத் திண்ட

வொசிங்டன், ஜூன் 11
ஐ.எஸ். அமைப்பால் போராளிகளுக்கு ஊதியம் வழங்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. தலைமைக்குள் ஏற்பட்ட ஊழல் காரணமாகவே இந்த நிலை ஏற்பட்டுள்ளது என அமெரிக்க அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.
தீவிரவாதிகளின் நிதி நிலைகளை ஆராயும் செயலக அதிகாரியான டனியல் கிளேசர் இது குறித்துத் தெரிவித்ததாவது,
ஐ.எஸ். அமைப்பின் பணக் கிடங்குகள், எண்ணெய்க் கிணறுகள் மற்றும் வங்கிகள் முடக்கப்பட்டுள்ளன. இதனால்ஐ.எஸ். அமைப்புப் பொருளாதார நெருக்கடிக்கு முகம் கொடுத்துள்ளது. இதன் விளைவாகச் சம்பளம் வழங்குவது, சலுகைகள் என்பன நிறுத்தப்பட்டுள்ளன.
மேலும், தற்போதுள்ள அவர்களது நிலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




நிலக்கீழ் வாயுக் குழாய் கசிந்ததில் பெரிய நிலத் துளை உருவானது. நகரின் பிரதான வணிக வளாகம், அரசுக்
ற்றது. இந்தத் துளை உருவான காரணம் குறித்து அதிகாரிகள் ஆராய்ந்து வருகின்றனர். (து-ஐ-ரி4)

# 5 போராளிகள் சுட்டுக்கொலை

## பங்களாதேஷ் பொலிஸார் அதிரடி




டாக்கா, ஜூன் 11

பங்களாதேஷில் தடைசெய்யப்பட்ட போராளிக் குழுக்களில் இருந்தார்கள் எனச் சந்தேகிக்கப்படும், 5 போராளிகளைப் பொலிஸார் சுட்டுக் கொன்றுள்ளனர்.

கடந்த மூன்று தினங்களாக இடம்பெற்ற அதிரடித் தேடுதலின்போதே இந்தத் தாக்குதல் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன.

பங்களாதேஷில் அண்மைக்காலமாகச் சிறுபான்மையினரைத் தாக்கியமை, கொலை செய்தமை போன்ற சம்பவங்களுடன் தொடர்புடைய போராளிகளைக் கைது செய்ய, தகுந்த நடவடிக்கை எடுக்குமாறு பொலிஸாருக்கு விசேட அனுமதி வழங்கப்பட்டது.

இந்த விசேட நடவடிக்கையில் தாக்குதல்களுடன் தொடர்புடையவர்கள் எனச் சந்தேகிக்கப்பட்டவர்கள், சுட்டுக் கொல்லப்பட்டனர் எனப் பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

தடை செய்யப்பட்ட இஸ்லாமியப் போராளிக் குழுக்களால் இந்து மதகுரு, கிறிஸ்தவ மதகுரு உட்படச் சிறுபான்மையினர் கடந்த பெப்ரவரி மாதத்தில் இருந்து, இந்த மாதம்வரை 30 இற்கும் மேற்பட்டோர் கொல்லப்பட்டனர்.

இந்தக்கொலைச்சம்பவங்களுக்கு, ஐ.எஸ். அமைப்பு, அல்-குவைதா அமைப்புகள் பொறுப்புக் கூறி வந்த வேளை, இவ்வாறான அமைப்புக்கள் எமது நாட்டில் இல்லை என பங்ளாதேஷ் அரசு வலியுறுத்தி வருகின்றது.

இந்த நிலையில் அன்சறுல்லா பங்லா மற்றும் ஜமாட்-உல்-முஜாதீன் ஆகிய இரு குழுக்கள் இவ்வாறான கொலைகளில் ஈடுபட்டு வருகின்றனர் எனப் பொலிஸார் தெரிவித்தனர். (து-ஐ-ரி4)

# ...000 பேரை ...து ஐ.எஸ்.



களும், 69 ஆஸ்திரேலியர்களும் உள்ளடங்குவர். மேலும், பெல்ஜியம், பிரேசில், சீனா, எஸ்டோனியா, பிரான்ஸ், ஜேர்மனி, கிரீஸ், கௌத்தமாலா, இந்தோனேசியா, அயர்லாந்து, இத்தாலி, ஜமெய்க்கா, நியூசிலாந்து, டிரினிடாட், தென்கொரியா மற்றும் சுவீடன் ஆகிய நாடுகளைச் சேர்ந்த ஒரு சில அதிகாரிகளின் பெயர்களும் இதில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

இந்தப் பட்டியலில் இருப்பவர்கள் முக்கிய பிரமுகர்கள், இராணுவ அதிகாரிகள், அரச ஊழியர்கள் ஆவர். இவர்களின் பெயர்கள் ஆங்கிலம் மற்றும் அரபு மொழியில் இணையத்தில் வெளியிடப்பட்டுள்ளன.

வெளியிடப்பட்ட இணையம் தொடர்பாக விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. 2015 ஆம் ஆண்டு ஐக்கிய சைபர் கலிபா எனும் இணைய ஊடுருவல் அமைப்பு ஆரம்பிக்கப்பட்டது. இது உதிரியாகச் செயற்படும் பல ஊடுருவல் அமைப்புக்களின் இஸ்லாமியப் போராளிகளின் ஒன்றிய அமைப்பாகச் செயற்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (ஐ-ரி4)

## ...டாடுகின்றது ஐ.எஸ். அமைப்பு



மையில் போராளிகளுக்குச் சம்பளம் வழங்குவது இயலாத விடயமாகியுள்ளது என நம்பத்தகுந்த தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஐ.எஸ். அமைப்புத் தொடர்ந்து இயங்க வேண்டுமாக இருந்தால் அவர்களுக்கு மேலதிக பணம் தேவை. பணவருமான வழிகளில் அமெரிக்கக் கூட்டுப்படை மேற்கொண்ட தாக்குதல்களால் குறிப்பிடத்தக்க வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது – என்றார். (து-ஐ-ரி4)



# உணவு வழங்குவதில் முரண்பா... குடியிருப்புக்கு தீயிட்ட அகதிக...



பெர்லின், ஜூன் 11

ஜேர்மனியில் டசல்டோர்ப் பகுதியில் உள்ள அகதிகள் குடியிருப்பு தீயிடப்பட்டது. ரம்ழான் நோன்பு அனுமதிக்கப்படும் காலப் பகுதியில், அவர்களுக்கான காலை உணவு வழங்கப்படாததை அடுத்து கோபமடைந்த அகதிகள் தமது குடியிருப்புக்களுக்குத் தீவைத்து எதிர்ப்பை வெளிப்படுத்தினர்.

சுமார் 280 அகதிகள் வசிக்கும் பகுதியில் கடந்த செவ்வாய்க்கிழமை இந்தச் சம்பவம் இடம்பெற்றது. கட்டடத்தில் தீ மிகவும் கொளுந்து விட்டு எரிந்தது.

சம்பவ இடத்துக்கு உடனடியாக விரைந்த தீயணைப்புத் துறையினர், புகைப் பாதிப்பில் இருந்த 25 பேரை மீட்டனர். இங்கு வேறுபட்ட இரு மதப் பிரிவினர் வசிப்பதால் உணவு வழங்குவதில் சிக்கல் நிலை ஏற்பட்டுள்ளது.

ஒரு சாரார் நோன்பைக் கடைப்பிடிக்கும் இதேவேளை, ஒரு சாரார் சாதாரண நேர அட்டவணைக்கமைய உணவுகளைப் பெற்றுக் கொள்கின்றனர் என அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இதற்கிடையில் குடியிருப்புக்குத் தீ வைத்ததாக இரு ஆபிரிக்க... மீது குற்றம் சாட்டப்பட்டுள்ள... அதிகாரிகள் தெரிவித்தனர். உ... பரிமாறுவது தொடர்பாக ... களால் அதிகாரிகளுக்கு மு... பாடு வழங்கப்பட்டிருந்தமை ... பிடத்தக்கது. (து-ஐ...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# பிறப்பு முதல் இறப்பு வரை பிறந்த எண்ணின் பலன்கள்



(பிறந்த எண்ணின் பலன்கள் என்ற தொடரில் பிறந்த எண் 5 குறித்த விவரங்கள் கீழே பிரசுரமாகின்றன.)

இந்த எண் அனைவராலும் மிகவும் விரும்பப்படும் எண்ணாகும். அனைத்து எண்களுக்கும் இந்த எண் பொதுவாக உள்ளது. மிகநன்மையும், அதிர்ஷ்டமும் தருவது இந்த எண்ணாகும். புதனின் ஆதிக்கம் வலுத்து இருப்பவர்களுக்குப் பெருத்த யோகங்களைக் கொடுக்கும். புதனின் ஆதிக்கம் இல்லாதவர்களுக்கும்கூட இந்த எண், நல்ல பலன்களைத் தர வல்லது! இதனாலேயே பெரும்பாலான எண் சோதிடர்கள், பெயர் எண் 5 ஆக வரும்படி அமைத்துக் கொடுக்கிறார்கள்.

மற்ற அதிர்ஷ்ட எண்களான 1, 3, 6, 9 ஆகியவைகள் (அந்தக் குறிப்பிட்ட எண்ணானது) நல்ல அமைப்புடனும், வலுவுடனும் அன்பர்களுக்கு இருந்தால்தான் நன்மைபுரியும். இல்லையெனில் தீய பலன்களைக் கண்டிப்பாகக் கொடுத்துவிடும். உதாரணமாக 3 ஆம் எண்ணில் பிறந்தவர்களுக்கு 24, 33, 42, 51 ஆகிய 6 எண் வரக்கூடிய எண்கள் எந்த ஒரு பலனையும் கொடுக்காது. அதுமட்டுமன்றி, அவர்களை நிச்சயம் பல தோல்விகளிலும் வேதனைகளிலும் ஆழ்த்தி விடும்.

ஆனால்5எண்மட்டும் எவருக்கும் தீமை புரியாது! சோதிட சாத்திரத்தில் நவக்கிரகங்களில் சந்திரனுக்கு மட்டும் எல்லா இராசி வீடுகளிலும் சமமாகவும், நட்பாகவும் (விருச்சிகம் தவிர) சொல்லப்பட்டுள்ளது! அதனால்தான் சந்திரனின் ஆதிக்கம் சாதகத்தில் பொதுவாக எல்லா இராசிகளுக்கும் நன்மையான பலன்களையே கொடுக்கும். கோசார பலன்களும் சந்திரனின் நிலையையே அடிப்படையாகக் கொண்டுள்ளன.

ஆனால் எண் கணிதத்தில் 5ஆம் எண்ணே அத்தகைய ஒரு சிறப்பான இடத்தைப் பெற்றுள்ளது. 1, 2, 3, 4, 5, 6, 7, 8, 9 ஆகிய எண் வரிசையில் 5 ஆம் எண்ணே மற்ற எண்களுக்கும் நடுவில் அமைந்துள்ளது என்பதே இதன்சிறப்புக்கும், நற்பலன்களுக்கும் காரணம். மற்ற எண்காரர்கள் தங்களது துன்பங்களையும், துயரங்களையும் கண்டு கலங்கும் போது இவர்கள் மட்டும், அவைகளைச் சவாலாக எடுத்துக் கொள்வார்கள். 5 ஆம் எண்காரர்களின் புத்தி அதாவது அறிவு மிகவும் அற்புதமானது!

ஒவ்வொரு நிமிடமும் புதுப்புது யோசனைகள் பிரஞ்சத்திலிருந்து இவர்களுக்குத் தொடர்ந்து வந்து கொண்டே இருக்கும். தேவர்களில் அறிவுக்கும், புத்திக்கும், செயற்றிறனுக்கும் பெயர் பெற்றவர் விஷ்ணுபகவான்தான்! அவரின் முழுக்கடாட்சமும் பொருந்திய எண் இதுதான் (5 எண்).

மற்ற எண்காரர்களைக் காப்பதற்காகவே (விஷ்ணுவின் தொழில் மக்களைக் காத்தல் அல்லவா), 5ஆம் எண்ணின் பலம் உதவுகிறது! 9 எண்கள் வரிசையில் எந்த ஒரு கிரகத்தினருக்கும் இல்லாத ஒரு கவர்ச்சி (காந்த சக்தி) இந்த 5ஆம் எண் நபர்களுக்கு உண்டு! எனவேதான் இந்த எண்ணைக் காந்த எண் அல்லது ஜனவசியம் நிறைந்த எண் என்று கூறுவார்கள்.

காந்தமானது, எந்த இரும்பையும் எளிதாக இழுத்து விடும் தன்மை உடையது. அதேபோன்றே, மக்களைக் கவர்வதில் இவர்களுக்கு நிகர் எவரும் இலர். இவர்களுக்கு அடுத்த நிலையில்தான் 6ஆம் எண்காரர்கள் உள்ளனர். ஏனெனில் அவர்களுக்கும் ஜனவசியம் இயற்கையாக உண்டு!

பேச்சில் கேலியும் (அடுத்தவரைப் புண்படுத்தாமல்) கிண்டலும், சிரிப்பும் கலந்திருக்கும். எத்தகைய நபர்களைச் சந்தித்தாலும், தங்களது தனித்தன்மையை அவர்களுக்குச் சீக்கிரம் உணர்த்தி விடுவார்கள். பல வருடகாலம் நண்பர்களாக நீடித்துத் தொடர்புகொள்ளும் தன்மையும், கவர்ச்சியும், நட்புப் பலமும் இந்த 5 எண்காரர்களுக்கு உண்டு. மேலும் இவர்களுக்கு காரில், ரயிலில், விமானத்தில், அடுத்த ஊரில், அடுத்த நாட்டில் எதிர்பாராத நண்பர்களும், அவர்களின் மூலம் நட்பு மற்றும் பரஸ்பர உதவியும் எளிதில் கிடைத்து விடும்.

எப்போதும் எடுப்பாகவும், அழகாகவும், ஆடைகளையும், அழகுசாதனங்களையும் அணிந்து கொள்ளும் விருப்பம் கொண்டவர்கள். இவர்கள் தாங்கள் எடுத்துக் கொண்ட எந்தத் துறையிலும், தங்களது திறமையின் மூலம் விரைந்து உச்சியை அடைந்து விட வேண்டும் என்று துடிப்பார்கள். இவர்கள் சாப்பிடுவதில் வேகமாக இருப்பார்கள். பேச்சிலும் நடையிலும் வேகம் உண்டு! பார்வைக்கு எளிமையாக இருந்தாலும் அரசர்களையும் கவர்ந்து விடுவார்கள்.

பிறர் முறையாகக் கணக்குகள் எழுதி வைத்துக் கொள்ள நினைக்கும் விபரங்களையும்கூட இவர்கள் மனதிலேயே நிலையாக வைத்துக்கொள்ளவும். விரும்பியபோது அவைகளைச் சரியாக எடுத்துக் காட்டியும் சொல்லுவார்கள்.

எப்போதுமே பெரியமனிதர்களின் ஆதரவு இவர்களுக்கு உண்டு. தங்களது சொந்தப் படைப்புக்களைவிட அடுத்தவர்களின் கருத்துக்களையும், விடயங்களையும் தொகுத்து அவைகளை ஆராய்ந்து முடிவுக்கு வரும் அறிவுத் துறைகளில் இவர்கள் சிறப்பாக விளங்குவார்கள்.

(தொடரும்)

# வாசிப்பில் பல வகை

மருதன்


புத்தக வாசிப்புக்கும் அகமண முறைக்கும் ஓர் ஒற்றுமை இருக்கிறது. என்ன சாதி, என்ன குலம் என்றெல்லாம் பார்த்துத் தங்களுடன் பொருந்திவந்தால் மட்டுமே திருமண உறவை ஏற்படுத்திக்கொள்வார்கள். மாற்றுப் பிரிவுகளைச் சேர்ந்தவர்களைப் பொருட்படுத்தக்கூட மாட்டார்கள். வாசிப்பிலும் கூடப் பலர் இதே முறையைத்தான் கையாண்டுவருகிறார்கள்.

ஒருவர் இடதுசாரி என்றால் மார்க்ஸ், எங்கெல்ஸ், லெனின், மாவோ என்று தொடங்கி ஒரு கறாரான வரிசையை ஏற்படுத்திக்கொள்வார். இந்த மூலஆசான்களின் கோட்பாடுகளை முன்வைத்து விவாதிக்கும் சிந்தனையாளர்களுடையவற்றை மட்டுமே அவர் வாசிப்பார். மற்றவர்களை எட்டிக்கூடப் பார்க்க மாட்டார். வலது சாரியும் இவ்வாறே ஒரு கோட்டைக்கிழித்துக்கொண்டு அதை மிகக் கவனமாகப் பின்பற்றுவார்.

### பொன்விதி

சற்றே நெருங்கி வந்து விவாதிப்போம். ராஜாஜி, திலகர், லஜபதி ராய், ராஜேந்திரபிரசாத் போன்றவர்களை ஓர் இடதுசாரி மனம் திறந்து வாசிப்பார் என்றா நினைக்கிறீர்கள்? மூலதனம் வரை போக வேண்டாம்; இருப்பதிலேயே எளிமையான கம்யூனிஸ்ட் கட்சி அறிக்கையை ஒரு வலதுசாரி பிரித்தாவது பார்ப்பாரா? காந்தியைப் படித்துப் பார்த்திருக்கிறேன்.. அவருடைய இன்னின்ன கருத்துகளோடு என்னால் உடன்பட முடியவில்லை என்றோ மார்க்ஸியத்தை நிராகரிப்பதற்கு என்னிடம் வலுவான காரணங்கள் உள்ளன என்றோ ஒருவர் தரவுகளை அடுக்கிக்காட்டி வாதிடலாம். ஆனால், இங்கு பலர் இப்படித் தர்க்கரீதியாக ஒரு சித்தாந்தத்தை ஏற்பதோ நிராகரிப்பதோ இல்லை.

நான் ஏன் ராஜாஜி அல்லது விவேகானந்தருடையதைப் படிக்க வேண்டும் என்றும் நான் ஏன் பெரியாரை அல்லது ஸ்டாலினைப் பற்றித் தெரிந்துகொள்ள வேண்டும் என்றும்தான் வாதிடுகிறார்கள். அதாவது, ஒருவர் இடதுசாரியாக அல்லது வலதுசாரியாக இருப்பதாலேயே அவர் சில வியங்களைப் படிக்கலாம் அல்லது படிக்க வேண்டாம் என்பதாக ஆகிவிடுகிறது. ஒருவர் எதையெல்லாம் ஏற்க வேண்டும், எதையெல்லாம் மறுக்க வேண்டும் என்பது முன்கூட்டியே முடிவு செய்யப்பட்டுவிடுகிறது. இந்த முடிவைச் சம்பந்தப்பட்டவர் என்றென்றைக்குமான ஒரு பொன்விதியாக ஏற்றுக்கொள்ளும்போது, அவர் தன் கதவுகளைச் சிலருக்குத் திறந்துவிடுகிறார், சிலருக்கு மூடியே வைக்கிறார். அகமண முறையோடு வாசிப்பை முடிச்சுப்போட வேண்டிய அவசியம் ஏற்படுவது இந்த இறுக்கமான மன நிலையால்தான்.



இந்த மனநிலையுடன்கூடிய வாசிப்பு ஒருபோதும் முழுமையான பார்வையைத் தந்துவிடாது. நாம் கொண்டாடும் சிந்தனையாளர்கள் எவரும் இப்படி இருந்ததில்லை. அம்பேத்கர் இடது அரசியலை நிராகரித்தவர் என்றபோதும் இறுதிவரை அவர் கார்ல் மார்க்ஸுடன் உரையாடிக்கொண்டிருந்தார். வலதுசாரிப் பொருளாதார அறிஞர்களையும் கற்பனா வாதத் தத்துவவியலாளர்களையும் மார்க்ஸ் ஆழமாகக் கற்றிருந்ததோடு கிறிஸ்தவத்தையும் பண்டைய மதங்களையும் அவர் தொடர்ச்சியாக ஆய்வுக்கு உட்படுத்தினார். நல்ல இலக்கியப் பரிச்சயமும் அவருக்கு இருந்தது. தன்னுடைய விரிவான, ஆழமான வாசிப்பின் முடிவில்தான் மார்க்ஸிச கம்யூனிஸத்தைக் கண்டடைந்தார். இந்த முடிவுக்கு வந்து சேர்ந்த பிறகும், அவர் முதலாளித்துவச் சிந்தனையாளர்களின் படைப்புக்களை ஊன்றி வாசித்துக் கொண்டுதான் இருந்தார்.

நாம் நமது கூடுகளை உடைத்துக் கொண்டு, திறந்த மனத்துடன் வாசிப்பை விரிவாக்க வேண்டியது அவசியம். அப்படிச் செய்யும்போது இரண்டு விடயங்கள் நிகழ்கின்றன. எம்முடைய கருத்து தவறானதாக இருந்தால் உதறித் தள்ளிவிட்டு எம்மை மாற்றிக்கொள்ளலாம். சரியாக இருந்து விட்டால் மேலதிக உறுதியுடனும் நேர்மையுடனும் அதனைப் பற்றிக்கொள்ளலாம்.

கட்டுரையாளர்: தமிழகத்தின் முன்னணி எழுத்தாளர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்வி உலகின் கலங்கரை விளக்கு



## மாமேதை துணைவேந்தர் துரைராஜா

சாமுவேல் டேவிட்ராஜ்

அழகையா – செல்லம்மா தம்பதியருக்கு 1934ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 10ஆம் திகதி மாமேதை துரைராஜா மகனாகப் பிறந்தார். தமது பிள்ளை மாமேதையாக மண்ணுலகில் உதித்த இரகசியத்தை அழகையா – செல்லம்மா தம்பதியர் அறியாதிருந்தனர்.
செல்வன் துரைராஜா தனது ஆரம்பக் கல்வியை உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் பாடசாலையிலும் பின்னர் பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியிலும் தொடர்ந்தார். பல்கலைக்கழக அனுமதிப் பரீட்சையில் 1953ஆம் ஆண்டு அதியுயர் புள்ளிகளைப் பெற்றுக் கொழும்புப் பல்கலைக்கழக பொறியியல் பீடத்துக்குத் தெரிவானார். இறுதிப் பரீட்சையில் முதலாம் தரத்தில் சிறப்புத் தேர்ச்சி பெற்று பேராதனைப் பல்கலைக்கழகத்தில் விரிவுரையாளராக நியமிக்கப்பட்டார். தொடர்ந்து இலங்கைப் பல்கலைக்கழகத்தின் புலமைப் பரிசில் பெற்று கேம்பிறிச் பல்கலைக்கழகத்தில் மண் பொறியியல் துறையின் பேராசிரியர் கே.எச்.றொஸ்கோவினால் மாமேதையின் மேன்மையான திறமை இனங்காணப்பட்டு ஆராய்ச்சி மாணவனாக அனுமதிக்கப்பட்டார். அதன் முடிவில் கேம்பிறிச் பல்கலைக் கழகத்தால் கலாநிதிப் பட்டம் வழங்கப்பட்டது.

**இல்லறம்**

சுப்பிரமணியம்– பத்தினிப்பிள்ளை தம்பதியின் புதல்வியான வதிரியைப் பிறப்பிடமாகக் கொண்ட செல்வி ராஜேஸ்வரியை (BSC பட்டதாரி ஆசிரியை) 1967ஆம் ஆண்டு ஏப்ரல் 20ஆம் திகதி தனது மனைவியாக ஏற்றுக் கொண்டார். இவர்களது சிரேஷ்ட புதல்வன் சிவகுமார் ஏழு வயதில் இறந்த நிகழ்வு அவர்களது வாழ்வில் மனவடுவானது. அகிலா, கவிதா, புனிதா, அரவிந்தன், அழகேஸ்வரன் ஆகியோர் ஏனைய பிள்ளைச் செல்வங்கள் ஆகினர். மாமேதையின் விருப்பத்துக்கு இணங்க திருமதி துரைராஜா தனது ஆசிரியர் தொழிலை விட்டுத் தனது உறவுகளை மேம்படுத்தும் பணியில் ஈடுபடத் தொடங்கினார். எங்கு சென்றாலும் தமது மனைவியை அழைத்துக் கௌரவப்படுத்துவார்.
மாமேதை துரைராஜா சமய பக்தி அதிகமுடையவர். செல்வச் சந்நிதி முருகன் மீது அதிக பக்தியுடையவர். செல்வச் சந்நிதி கோயிலில் அங்கப் பிரதட்சணை செய்வார். ஞாயிறு தோறும் வல்லிபுரக் கோயிலுக்கு விரும்பிச் சென்று வழிபடுவார். வீட்டிலுள்ள அனைவரும் மாலை நேரத்தில் ஒன்றாக இணைந்து இறைவழிபாடு செய்வார்கள். தனக்கேயான குல தெய்வத்தை வீட்டில் வைத்து ஆதரித்தார். தனது பிள்ளைகளுடன் இணைந்து பாரம்பரிய கூத்துப்பாட்டு பாடுவதும் பக்தியைப் பரவசப்படுத்தி மகிழ்ந்து திருப்தியடைவதும் அவரது பழக்கமாகக் காணப்பட்டது.

**தன்னலமற்ற அர்ப்பணிப்பு**

1985 ஆம் ஆண்டு இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தில் சிவில் பொறியியல் துறைப் பேராசிரியராக நியமிக்கப்பட்டார். அதே பல்கலைக்கழகத்தின் பொறியியல் பீடத்தின் பீடாதிபதியாகவும் நியமனம் பெற்றார். அந்தக் காலப்பகுதியில் யாழ்ப்பாணச் சூழலும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகமும் மிக ஆபத்தான சூழ்நிலைக்குள் உள்ளடக்கப்பட்டு மூடப்படும் அளவுக்கு அபாயநிலையில் காணப்பட்டது. அதனை மீட்பதற்குரிய மைந்தனாக துணைவேந்தர் பணியின் பொறுப்பை ஏற்றுக்கொண்டார். அவருக் குப் பல தொல்லைகள், இரகசிய கொலை மிரட்டல்கள், பல சவால்கள் விடுக் கப்பட்டன. இவற்றையெல்லாம் துணி வோடும் புத்தி சாதுரியத்தோடும் அர்ப்பணிப்புடனும் கடவுளின் கருணையுடனும் சமாளித்து வெற்றி கண்டார்.
மாமேதை சமூக நலன்களுக்காக தன்னை அர்ப்பணம் செய்தவர். 1983 ஆம் ஆண்டு இடம்பெற்ற கறுப்பு ஜூலை இனக்கலவர காலமது. தேசமெங்கிலுமுள்ள தமிழ் அறிவு ஜீவிகள், புத்திமான்கள், செல்வந்தர்கள், அரசியல்வாதிகள் போன்றவர்கள் ஐரோப்பிய நாடுகளை நோக்கிச் சென்றனர். பலர் பாதுகாப்புக்காகவும் சுயநலத்துக்காகவும் இடம் பெயர்ந்து வாழ்ந்தனர். மாமேதை இந்தச் சம்பவங்களை எல்லாம் இலகுவாகவே உணர்ந்தார். ஏற்பட்ட சவால்களையெல்லாம் துணிவோடும் புத்தி சாதுரியமாகவும் வெற்றி கொண்டார். அதாவது யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் வட பிராந்தியத் தமிழர்களது கல்விச் சொத்து. அதனை எவரும் மூடிவிட முடியாது என எதிர்த்து பல சவால்களையும் அழுத்தங்களையும் எதிர்கொண்டார்.
தன்னலமற்ற அர்ப்பணிப்புடன் செயற்பட்டமையால் பல்லாயிரக்கணக்கான கல்விமான்களின் தற்கால வாழ்வும் வளமும் பாதுகாக்கப்பட்டு அடுத்த சந்ததிக்கு கையளிக்கும் அளவுக்கு தமிழ் மக்களது மண்ணிலே கல்வியறிவு வழங்கப்படுவதற்கு ஒரு கல்வித்தளம் அசையா உறுதியோடு செயற்பட்டு வருகின்றதென்றால் அது மாமேதையின் கனவேயாகும் என்பதில் சந்தேகம் எதுவுமில்லை.
மாமேதை, மாணவர்களது நலன்களுக்காக அதிக அர்ப்பணிப்புடனும் அக்கறையுடனும் செயற்பட்டவர். மாணவர்களுக்கு ஏற்பட்ட அரசியல், நிர்வாகப் பிரச்சினைகளுக்கு உறுதியோடும் துணிவோடும் உற்சாகமாகவும் முகம் கொடுத்தார்.
அமைதி காக்க வந்த படையினரால் இரு மாணவர்கள் பல்கலைக்கழக நுழைவாயிலில் வைத்துச் சுட்டுக் கொலை செய்யப்பட்டனர். அவர்களுக்காக மனங்கசிந்து அழுதார். அந்தச் சூழ்நிலையிலும் அதற்காக எதிர்த்துக் குரல் கொடுத்தார். இதனால் அவருக்கு கொலைமிரட்டல் வந்தது. தன் உயிரையும் துச்சமாக எண்ணி செயற்பட்டார். 1983 ஆம் ஆண்டு தடை செய்யப்பட்ட பல்கலைக் கழக மாணவர் அமைப்பை 1988ஆம் ஆண்டில் ஜனாதிபதியின் அனுமதி பெற்று உருவாக்கினார். பல்கலைக் கழகப் பீடங்களுக்கான மாணவர் அமைப்பையும், பல்கலைக்கழக பொது மாணவர் அமைப்பையும் உருவாக்கினார். 1988 ஆம் ஆண்டில் மாமேதை துணைவேந்தர் நலன்புரி நிதியத்தை ஆரம்பித்து வைத்தார். இதனால் போரினால் பாதிக்கப்பட்ட வறிய மாணவர்களுக்கும் கல்வி வாய்ப்பை மேம்படுத்தினார். இன்று அந்த நிதியத்தால் கல்விச் சமூகம் பயன் பெறுகின்றது. வெளிநாடுகளில் வசிக்கும் நலன்விரும்பிகளிடம் இருந்து பெற்ற நன்கொடையைக் கொண்டு வருடாந்தம் ஏறக்குறைய 15 மாணவர்கள் பயன் பெற்று வருகின்றனர்.

> யாழ்.பல்கலைக்கழகத்தின் முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் அ.துரைராசா அவர்களது 22 ஆவது நினைவு தினம் இன்றாகும்.

**கண்ணியம் தவறா கடமை உணர்வாளன்**

மாமேதையின் குணாதிசயங்களில் மிகவும் முதன்மையானது அன்பு, இரக்கம், கடவுள் நம்பிக்கை. இதனைவிட நேரம் தவறாமை, எப்போதும் நேரத்தை ஒழுங்காகப் பேணுவார். 1990களில் போர்க்காலச் சூழ்நிலைகளிலும் நேரம் தவறாது சைக்கிளில் வடமராட்சியில் இருந்து பல்கலைக்கழகத்துக்குச் சென்று கடமைகளைப் பொறுப்பேற்றுக் கொள்வார். அந்தக் காலப் பகுதியில் போக்குவரத்து வசதியீனம், தொடர்பாடல், பாதுகாப்பற்ற நிலை காணப்பட்டது. அதற்காகவும் குரல் கொடுத்தார். விழிப்புணர்வுகளையும், ஒன்றுகூடல்களையும், சந்திப்புக்களையும், ஏற்படுத்தி நேரம் முதன்மையானது என்பதை வலியுறுத்துவார். தன்னால் உறுதியளிக்கப்பட்ட விடயத்தைத் திருப்திகரமாக நிறைவேற்றுவார். விரிவுரையாளர்களுக்கும் சிற்றூழியர்களுக்கும் மாணவர்களுக்கும் கடமை உணர்வை அடிக்கடி ஞாபகப்படுத்தி அன்பாக நடத்துவார். மாமேதை அடிக்கடி கூறும் வார்த்தை சம்பளம் வாங்கும் நிறுவனத்துக்கு 100 வீத சேவை செய்ய வேண்டும் என்பதாகும்.
ஒரு வறிய சிங்கள மாணவனைத் தன் கவனத்தில் எடுத்து ஒரு பொறியியலாளர் ஆக்கினார். அவர் பிரயாண வசதி வாய்ப்புக்களைத் தேடவில்லை. எதிர்பார்க்கவும் இல்லை. மக்களுடன் தானும் ஒரு சாதாரண குடிமகனாக சைக்கிளில் எங்கும் பயணித்தார். அவரோடு பல வாழைக்குலை வியாபாரிகள் நண்பர்களாகினர்.

**கல்வியின் உண்மைச் சொரூபம்**

மாமேதை இறையருள் அறிவின் வரம் பெற்ற ஒரு கல்விமான் என்பதை அவரது வாழ்வில் காட்டிச் சென்றவர். கல்வித்துறையில் அவர் காட்டிய ஆர்வம் இன்று எமக்கு பெருமை சேர்க்கின்றது. மாமேதையும் அவரது கோட்பாடும் உலகெங்கும் அறியப்பட்டது. துரையின் கோட்பாடு என அறிவியல் உலகம் அங்கீகரிக்கின்றது. உலக அடிப்படையில் சிறந்த கல்வியறிவு சார்ந்த தொடர்புகளைப் பேணியிருந்தார். இதனால் தனித்தும், மேலைத்தேய நாட்டறிஞர்களுடனும், உள்நாட்டு, தமிழ், சிங்கள அறிஞர்களுடனும் புத்தி ஜீவிகளுடனும் இணைந்து ஏறத்தாழ 44 ஆராய்ச்சிக் கட்டுரைகளை நூல் வடிவில் வெளியிட்டு விஞ்ஞான பொறியியல்துறை வளர்ச்சிக்குப் பெரும் பங்காற்றியுள்ளார்.

**தொண்டூழியம் செய்த உழைப்பாளி**

தொழிலைத் தொண்டெனக் கொண்டு உழைத்த மாமேதை கடமையைச் செய், பயனை எதிர்பாராதே என்ற தொனியில் எப்போதும் பேசுவார். இந்தக் காலப்பகுதியைத் தொடர்ந்து யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் பணியாற்றி தனது துணைவேந்தருக்கான இரண்டாவது தவணைக்காலம் முடிவடைவதற்கு முன் உடல்நலக் குறைவின் காரணமாக 1994 ஆம் ஆண்டு அந்தப் பணியிலிருந்து ஓய்வுபெற்றார். பின் திறந்த பல்கலைக்கழகத்தில் சிவில் பொறியியல் பீடத்தின் பேராசிரியரானார். இதுவே அவரது இறுதிப் பணியாகவும் சேவையாகவும் அமைந்தது.

**நேர்பட வாழ்ந்த நாட்டுப்பற்றாளன்**

மாமேதை மாமனிதராகவும், நாட்டையும், மக்களையும் நேசிப்பவராயும் கல்வியுலகுக்கு ஒளியேற்றி சர்வதேச அளவில் தனது அறிவைப் பயன்படுத்திப் பல கல்விமான்களை உருவாக்கி சாதனை படைத்து மானிட சமூகத்துக்குப் பல நன்னெறி முறைகளைத் தமது சாதனை மூலமாகக் கற்றுக் கொடுத்தவராகவும் விளங்கினார். பல இன மக்கள் மத்தியில் புகழைக் கொண்டவர் மாமேதை துரைராஜா. தமிழினத்தின் மாமனிதனாக தேர்ந்தெடுக்கப்பட்டு மதிப்பளிக்கப்பட்டு வருகின்றார். தனது இனத்திலும், மொழியிலும் தனது தேசத்திலும் உறுதியான காதல் கொண்டிருந்தார்.

*கட்டுரையாளர் :*
*வரலாற்றுத்துறை ஆசிரியர்*
*யாழ்ப்பாணக் கல்லூரி*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## வரலாற்றில் இன்றைய தினம்

1805 - மிச்சிகன் பிரதேசத்திலுள்ள டெற்றொயிற் நகரின் பெரும் பகுதி தீக்கிரையாகியது.

1825 - நியூயோர்க் நகரில் ஹமில்டன் கோட்டைக்கான அத்தி பாரக்கல் நடப்பட்டது.

1892 - ஆஸ்திரேலியாவில் உலகின் முதலாவது திரைப்பட ஸ்ரூடியோ தொடங்கப்பட்டது.

1898 - அமெரிக்காவிலிருந்து கியூபாவை நோக்கி போர்க் கப்பல்கள் புறப்பட்டன.

1901 - குக் தீவுகளை உள்ளடக்கியதாக நியூசிலாந்தின் குடியேற்ற எல்லைகள் ஐக்கியராச்சியத்தால் விஸ்தரிக்கப்பட்டன.

1903 - சேர்பிய அதிகாரிகள் குழு ஒன்று அரச மாளிகையுள் புகுந்து அரசர் மற்றும் அவரது மனைவி ட்றகா ஆகியோரைப் படுகாலை செய்தது.

1936 - லண்டன் சர்வதேச சர்றியலிஸ்ட் கண்காட்சி தொடக்கி வைக்கப்பட்டது.

1937 - சோவியத் யூனியனில் எட்டு இராணுவத் தலைவர்கள் தூக்கிலிடப்பட்டனர்.

1942 - இரண்டாம் உலக மகாபோர்; அமெரிக்கா சோவியத் யூனியனுக்கு கடன் மற்றும் குத்தகை அடிப்படையில் உதவிகளை அனுப்பச் சம்மதித்தது.

1955 - மோட்டார் பந்தயப் போட்டியில் மிக மோசமான விபத்தொன்றில் ஒஸ்ரின் ஹூலேயும் மேர்சிடஸ் பென்ஸ் வாகனமும் ஒன்றுடன் ஒன்று மோதிக் கொண்டதில் 83 பார்வையாளர்கள் கொல்லப்பட்டனர்; 100 பேர் வரை காயம் அடைந்தனர்.

1956 - கல் ஓயா கலவரம்: தமிழ் சிறுபான்மையினரை இலக்காகக் கொண்ட முதலாவது பதியப்பட்ட இனக் கலவரம் இலங்கையின் கிழக்கு மாகாணத்தில் தொடங்கியது. 150 பேர் வரை சாவடைந்தனர் என்று அறியப்படுகின்றது.

1963 - அலபாமா கவர்னர் ஜோர்ஜ் வல்லஸ், அலபாமா பல்கலைக்கழக பொஸ்டர் நுழைவாயிலில், விவியின் மலோன் மற்றும் ஜேம்ஸ் ஹீட் ஆகிய இரண்டு கறுப்பின மாணவர்கள் பல்கலைக்கழகத்தில் கற்பதைத் தடுக்க அடாத்தாக மறித்து நின்றார். பின்னர் அன்றைய தினம் சமஷ்டி தேசிய பாதுகாப்பு துருப்பினரின் துணையுடன் அவர்கள் இருவரும் பதிவை மேற்கொண்டனர்.

1963 - தென் வியட்னாமில் மத சுதந்திரம் போதாமையைக் கண்டித்து எதிர்ப்பு தெரிவுக்குமுகமாக சுறுசுறுப்பான சைகோன் பகுதியில் புத்தமதகுருவான ரிச் கிவாங்டக் தனக்குத்தானே மண்ணெண்ணெய் ஊற்றி எரித்துக் கொண்டார்.


1990 - கியூபெக் மாநிலத்துக்கு விசேட மதிப்பு வழங்கப்பட்டதன் மூலம் கனடா பிளவுபடுவது தவிர்க்கப்பட்டது.
- பாடசாலைகளில் மாணவரைச் சேர்க்க போலி ஆவணங்களைச் சமர்ப்பித்தால் 7ஆண்டுகள் சிறை வழங்கத் தக்க விதத்தில் 1984 ஆம் ஆண்டின் 4ஆம் இலக்க விதி திருத்தப்படும் என கல்வியமைச்சின் மூத்த அதிகாரி தெரிவிப்பு.

1992 - நாயாறுப் பகுதியில் எரிகுண்டு வீச்சில் காடுகள் அழிந்து நாசம்.

2004 - மட்டக்களப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் களுத்துறைச் சிறைச்சாலைக்குச் சென்று 39 தடுப்புக் கைதிகளைப் பார்வையிட்டு சுகம் விசாரித்தனர்.



## வர்ணம் தீட்டுவோம் வாங்க....



## இரக்கமில்லாத இலட்சாதிபதியே உண்மையான ஏழை

ஒரு பிரம்மாண்டமான மாளிகையின் முன்னால் அந்தப் பிச்சைக்காரன் போய் நின்றான்.


"வீட்டுக்காரன் பெரிய இலட்சாதிபதியாக இருப்பான் போலிருக்கிறதே, இன்று நமக்கு வேட்டைதான். வயிறார உணவும், பகட்டான உடுப்புகளும், கைநிறையப் பணமும் இந்த மாளிகைக்குச் சொந்தமானவனிடமிருந்து கிடைக்காமல் போகாது" எனப் பிச்சைக்காரன் கற்பனை செய்து கொண்டான்.

ஒரு கொழுத்த நாய் மாளிகையின் உள்ளிருந்து ஓடி வந்து பிச்சைக்காரன் மீது பாய்வது போல பயங்கரமாகக் குரைத்தது.

நாயின் பின்னால் மாளிகையின் சொந்தக்காரானான செல்வந்தன் வந்தான்.

"என்ன வேண்டும் உனக்கு?" என்று எரிச்சலோடு கேட்டான் செல்வந்தன்.

நாயின் குரைப்பு மாதிரியே இருந்தது அவன் குரல்!



"ஐயா! பசியாக இருக்கிறது. வயிறாரச் சோறு போட்டால் உங்களுக்குப் புண்ணியம் வந்து சேரும்" என்று கூறினான் பிச்சைக்காரன்.

"சோறுமில்லை ஒன்றுமில்லை போ" எனச் செல்வந்தன் சீறினான்.

"சாப்பிட்டு மிச்சமிருக்கும் பழைய சோறாக இருந்தால்கூடப் பரவாயில்லை. ஒரு கை போடுங்கள்" என்றான் பிச்சைக்காரன்.

"பழைய சோறுகூடக் கிடையாது"

"போகட்டும் சோறு வடித்த கஞ்சியைக் கீழே கொட்டிவிட வைத்திருப்பீர்களே! அதைக் கொடுத்தால்கூடப் போதும்"

"வடித்த கஞ்சியும் இல்லை"

"சாப்பிட்டு மிச்சம் கிடக்கும் உணவையாவது நான் பொறுக்கிக் கொள்கிறேன்"

"அதுகூடக் கிடையாது"

"போகட்டும், ஒரு குவளைத் தண்ணீராவது கொடுங்களேன்"

"தண்ணீரும் இல்லை"

"சமையலுக்காக அரிசி நிறைய வைத்திருப்பீர்களே, ஒரு கைப்பிடி அரிசி கொடுத்தால் சமைத்துச் சாப்பிடுகிறேன்"

"அரிசியும் இல்லை"

"ஏதாவது சில்லறைக்காசு இருந்தாலாவது போடுங்களேன்"

"சில்லறைக்காசு இல்லை. ஒன்றுமில்லை"

"பழைய கந்தல் துணியாவது கொடுங்கள். குளிருக்குப் போர்த்திக் கொள்ளுகிறேன்"

"கந்தலும் இல்லை"

"ஐயா, உங்களிடம் என்னதான் இருக்கிறது? அதையாவது சொல்லுங்கள்"

"ஒன்றுமே இல்லை போ, போ!"

பிச்சைக்காரன் கலகலவென உரத்த குரலில் சிரித்தான்.

"ஐயா! என் வாழ்நாளில் பார்த்தவரையில் உம்மைவிடப் பரம ஏழை உலகத்திலேயே கிடையாது. மிகக் கேவலமான ஏழையிடங்கூட ஏதாவது ஒரு பொருள் இருக்குமே. உம்மிடமோ ஒன்றுமேயில்லை. இந்த நேரச் சூழலில் உம்மைவிட நான் பெரிய பணக்காரன். என்னிடம் நாலு வீடுகளில் இரந்து வாங்கிய கொஞ்சம் பழைய சோறும் இரண்டொரு காசுகளும் உள்ளன. உம்மிடமோ ஒன்றுமேயில்லை. என்னுடைய பிச்சையாக இவற்றை ஏற்றுக் கொள்ளும்" என்று கூறியவாறு பிச்சைக்காரன் உடைந்த சட்டியில் இருந்த சோற்றையும் கந்தல் துணியில் முடிந்திருந்த இரண்டொரு காசுகளையும் செல்வன் வீட்டு வாசற்படியில் வைத்துவிட்டு அடுத்த வீட்டை நோக்கி நடந்தான்.

## அன்னை தெரேசா

அன்னை தெரேசாவுக்கு இந்திய அரசு வழங்கிய தூதுச்சார்பு பயண அனுமதி ஆவணத்தில் உள்ள விவரத்தின்படி மேரி தெரேசா போஜாக்ஸ் ஹியு. யூகோஸ்லாவியாவிலுள்ள ஸ்கோப்ஜி என்ற நகரில் 1910 ஆம் ஆண்டு ஓகஸ்ட் திங்கள் 26 ஆம் நாள் பிறந்தார். 1910 ஆம் ஆண்டில் ஸ்கோப்ஜி என்ற நகரம் 25,000 மக்கள் தொகையைக் கொண்ட ஒரு சிறிய நகரமாக இருந்தது. இப்போது மசதோனியாவிலுள்ள இந்த நகரம் அவ்வப்போது அல்பேனியா அரசைச் சார்ந்திருந்தது. அல்பேனியாவும் ஒட்டமான் அரசின் ஒரு பகுதியாக இருந்தது. பல நூற்றாண்டுகளாக, துருக்கியர்களின் ஆதிக்கத்தால் இஸ்லாமிய ஆட்சியின் கொடுமையை அனுபவித்து வந்துள்ளது. கத்தோலிக்கர்கள் முழு மக்கள் தொகையில் மிகச் சிறுபான்மையினராவர். பல்வேறு பண்பாட்டு, சமய சக்திகளுக்குட்பட்ட அல்பேனியா அப்போது திருப்பு முனையில் இருந்தது.



தெரேசாவின் குடும்பம் வியாபாரத்தில் ஈடுபட்ட நகரவாசிகள் குடும்பத்தைச் சார்ந்தது. சில நேரங்களில் சொல்லப்படுவது போல விவசாயிகள் குடும்பத்தைச் சார்ந்ததல்ல. இவருடைய தந்தை நிக்கோலாஸ் போஜாக்ஸ் ஹியு, கட்டட ஒப்பந்தக்காரர். இவர் பணியாற்றிய நிறுவனம் பெயர்பெற்றது. ஸ்கோப்ஜில் முதல் திரையரங்கம் இவர்களின் கைவேலைப்பாடுதான். நகர மன்றத்தின் உறுப்பினர்களுள் இவரும் ஒருவர். இவர் பல மொழி பேசும் திறமையுடையவர். தன் தாய் மொழி நீங்கலாக, செர்போ, குரோவாசியா, துருக்கி ஆகிய மொழிகளில் நன்கு பரிச்சயமானவர். அன்னை தெரேசாவின் ஆன்ம குரு அருட்தந்தை செலஸ்த்வான் எக்செம். தன் தந்தையைப் பற்றி அன்னை தெரேசா கொடுத்த வாக்குமூலத்தை என்னிடம் தெரிவித்தார். "என் தந்தை பிறருக்கு உதவி செய்யும் நற்குணமுடையவர். ஏழைகளுக்கு ஒரு போதும் இல்லை என்று சொன்னதில்லை. அவர்கள் கேட்டதை மறுத்ததுமில்லை" இவருடைய தாய் த்ரானிபில் பெர்னாய். அருகிலுள்ள வெனிசைச் சார்ந்தவர். இவர்களின் வீடு விசாலமானது. பழமரங்கள் கொண்ட பரந்த தோட்டத்திலே அமையப் பெற்ற வீடு இது. இந்தக் குடும்பத்தில் மேலும் இரண்டு பிள்ளைகள் இருந்தனர். 1904 ஆம் ஆண்டு பிறந்த அக்கா அகே, 1907 ஆம் ஆண்டு பிறந்த அண்ணன் லாசர் ஆகியோரே அவர்கள். (தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனப்பூர்வமாக எவரும் கடமையைச் செய்கிறார்களா....? உயர்வுக்கான வழி அதுவே...!

பொறுப்பேற்றுக் கொண்ட கடமைகளைச் செய்வதுதான் நாம் உயர்வு பெறுவதற்குரிய ஒரேயொரு வழியாகும். அவ்விதம் எமது கடமைகளைச் செய்வதன் ஊடாகவே எம்மிடம் இருக்கும் வலிமையைப் பெருக்கிக் கொள்ள முடியும். உயர்ந்த நிலையை அடைய முடியும். ஆனால் தமிழர் தலைமைத்துவங்களான நாம் மக்கள் கொடுத்த ஆணைக்கான கடமைகளை சரிவரச் செய்கிறோமா..? இல்லை...! மாறாக அடுத்த பதவிக் காலம் எப்போது..? அதில் அமர்ந்து கொள்வது எப்படி...?, சந்தர்ப்பங்களைத் தக்கவைத்துக் கதிரையில் குந்துவதற்கான மூலோபயம் என்ன...? என்பதாக அலைந்து திரிகிறோம். அந்தச் செயல் முனைப்பின் வழி நகர்கிறோம்.

இளம் துறவி ஒருவர் காட்டுக்குச் சென்றார். நீண்ட காலம் தியானம், வழிபாடு, யோகப்பயிற்சி போன்றவற்றில் ஈடுபட்டார். வழக்கம் போல மரத்தடியில் தியானத்தில் அமர்ந்திருந்தார். அந்தச் சந்தர்ப்பத்தில் தலைமீது, உலர்ந்த சருகுகள் சில வீழ்ந்தன. தியானத்திலிருந்து மீண்ட அவர் அண்ணார்ந்து பார்த்தார். மரக்கிளையில் காகமும் கொக்கும் சண்டையிட்டுக்கொண்டிருந்ததை அவதானித்தார். கோபம் வந்தது. யோகி அல்லவா அவர். கண்களிலிருந்து ஒரு பொறி, மின்னல்போல் மேலெழுந்து சென்றது. அது, அந்தப் பறவைகளை எரித்துச் சாம்பலாக்கிவிட்டது. பார்வையாலேயே பறவைகளை எரிக்கும் தமது ஆற்றலைக் கண்டு மகிழ்வுற்றார்.

சிறிது நேரம் செல்லத் துறவி, உணவுக்காக அருகில் இருக்கும் ஊருக்குச் செல்கின்றார். அங்கிருந்த ஒரு வீட்டின் முன்நின்று கொள்கிறார். "அம்மா..! பிச்சை இடுங்கள்..!" என்று கேட்டார். "மகனே..! கொஞ்சம் இரு" என்று குரல் வந்தது. நீண்ட நேரம் காத்திருக்கின்றார். எவரும் வெளிவரவில்லை. என்னைக் காக்க வைக்கிறாயே உனக்கு எவ்வளவு தைரியம் என்று நினைத்துக் கொள்கின்றார். இப்படி நினைத் ததும் "மகனே, உன்னைப்பற்றி அவ்வளவு பெரிதாக நினைத்துக் கொள்ளாதே. இங்கே இருப்பது காக்கையும் அல்ல கொக்கும் அல்ல" என்ற குரல் வீட்டின் உள்ளிருந்து வந்தது. துறவி திகைத்து விட்டார். எப்படியானாலும் அவர் காத்திருக்கத்தான் வேண்டியிருந்தது. கடைசியாக அந்தப் பெண் வெளியில் வந்தாள். துறவி, அவள் கால் களில் வீழ்ந்து வணங்கி, அம்மா, நான் மனதில் நினைத்ததை எப்படி நீங்கள் அறிந்தீர்கள் என்று வினவினார். அதற்கு அவள் இவ்வாறு பதிலுரைத்தாள். "மகனே..! உன்னைப்போல் எனக்கு யோகமும் தெரியாது, தவமும் தெரியாது. அன்றாடக் கடமைகளைச் செய்யும் ஒரு சாதாரண பெண் நான். என் கணவர் நோயால் அவஸ்தைப்படுகின்றார்.

நானும் அவருக்கான கடமைகளை வாழ்நாள் முழுவதும் மனபூர்வமாகச் செய்துவருகிறேன். திருமணத்துக்கு முன்பு பெற்றோருக்கு என் கடமையைச் செய்தேன். இப்போது என் கணவருக்குச் செய்து வருகிறேன். என் கடமைகளைச் சரிவரச் செய்த காரணத்தால் என் ஞானக்கண் திறந்துவிட்டது. அதன் மூலமே உன் எண்ணங்களைப் புரிந்து கொள்ளமுடிந்தது, காட்டில் உனக்கு நடந்ததையும் தெரிந்துகொண்டேன். இதற்கு மேலும் நீ ஏதாவது தெரிந்துகொள்ள விரும்பினால் ஊர் எல்லையிலுள்ள நகரத்தின் கடைத்தெருவுக்குச் செல். அங்கே ஒரு இறைச்சி வியாபாரியை நீ சந்திப்பாய். அவன் உனக்கு ஏனையவற்றைப் போதிப்பான்" என்று கூறினாள். முதலில் எப்படி அவனிடம் செல்வது என்று தயங்கிய அந்தத் துறவி நகரத்திற்குச் சென்றார். அவனைச் சந்தித்தார். பெரிய கத்தி கொண்டு இறைச்சியை வெட்டியபடியே விலை பேசுவதும் விற்பதுமாக அவன் இருந்தான்.




அடக் கடவுளே..! இந்த மனிதனிடமிருந்தா நான் உயர்ந்த கருத்துக்களைக் கற்றுக்கொள்ளப் போகிறேன். இவனைப் பார்த்தால் அசுரனின் அவதாரம்போல் தோன்றுகிறதே என்று நினைத்தார். என்ன நடக்கப் போகிறதோ என்ற சிந்தனையுடன் அங்கு உட்கார்ந்திருந்தார். நீண்ட நேரம் கழிந்தது. அவனின் வேலையும் முடிந்தது. துறவியை அழைத்துக் கொண்டு தன் வீட்டிற்குப் போனான். துறவி அமர்வதற்கு இருக்கை ஒன்றை அளித்து, "இங்கேயே இருங்கள்" என்றவன் உள்ளே சென்றான். தனது வயது முதிர்ந்த தந்தையையும் தாயையும் குளிப்பாட்டினான். உணவூட்டினான். அவர்கள் மனம் மகிழும்படி பலவகையான சேவைகளைச் செய்தான். பின்னர் துறவியிடம் வந்தான்.

துறவியும் அவனிடம் ஆன்மாவைப் பற்றியும் இறைவனைப் பற்றியும் சில கேள்விகளைக் கேட்டார். (இறைச்சி வியாபாரி (வியாதன்) அதற்குத் தந்த விளக்கம் என்பது வியாத கீதை என்ற பெயரில் மகாபாரதத்தில் இடம் பெற்றிருக்கிறது). பின்னர் வியாபாரியைப் பார்த்து நீர் செய்யும் தொழில் இழிவான தொழில் ஆயிற்றே என்று வினவுகிறார். வியாதனும் "மகனே..! கடமைகளில் எதுவும் இழிந்ததும் இல்லை, கேவலமானதும் இல்லை. என்னுடைய பிறப்பு இந்தச் சூழ்நிலையில் என்னை வைத்திருக்கிறது. எனக்குப் பற்று என்று எதுவும் இல்லை. என் பெற்றோரை மகிழ்விப்பதற்கான சேவைகள் எல்லாவற்றையும் நான் செய்து வருகிறேன். உங்களைப் போன்று யோகம் எனக்குத் தெரியாது. நான் வீட்டைத் துறந்து காட்டுக்கும் போகவில்லை" என்றான். இதேபோல தமிழர்கள் நிமிர்ந்து நடக்க வேண்டிய பயணப் பாதைகளில் தங்கள் நிலைக்குரிய கடமைகளைச் சரிவர ஆற்ற முன்வர வேண்டும் தலைமைத்துவங்கள். காலத்தின் கட்டாயம் அது. புரிந்து நடந்து கொள்ள வேண்டும்..!

தெல்லியூர்த் தேவி

எத்தனையோ எண்ணிலடங்கா துன்பதுயரங்களைப் பல ஆண்டுகளாக அனுபவித்தும், அனுபவித்துக் கொண்டும் இருக்கிறோம். இந்த அனுபவங்களில் இருந்து இனிமேலும் துன்ப துயரங்களுக்கு இடம் கொடுக்காமல், ஏன் இவை எங்களை ஆட்டிப்படைக்கின்றன என்று சற்று சிந்திப்போமானால் அதற்கான விடை பிறக்கும். அந்த விடையை மையமாகக் கொண்டு எங்களை நாங்கள் ஆட்சி செய்யக் கற்றுக் கொண்டு அதன்படி ஒழுக்க சீலர்களாக பண்பாட்டு விழுமியங்களைப் பேணிக் காத்துக்கொள்ளமுடியும். கல்வியினூடாக மனதைப் பண்படுத்தி நல்லதோர் குடும்ப, சமூக, நாட்டைக் கட்டி எழுப்புவோமாகில் எங்களுக்காகச் சிந்தப்பட்ட குருதி, உயிர்கள், உடைமைகள் ஆகியவற்றின் ஆசீர்வாதம் எங்களுக்குக் கட்டாயம் கிடைக்கும்.

குருதி சிந்தினோம், உயிர்களை இழந்தோம் ஏன்? நாங்கள் பண்பாட்டு விழுமியங்களுடன் சிறந்த மனிதர்களாக வாழ்வதற்காக. அதை மறந்து இளம் சமுதாயத்தினர் என்றும் இல்லாத வகையில் போதைப்பொருளுக்கு ஆளாகித் தங்களைச் சீரழிப்பதுடன் மட்டுமல்லாமல் அவர்களுடன் இணைந்தவர்களையுமல்லவா சீரழிக்கின்றனர்.

இளம் சமுதாயத்தினரின் குறிக்கோள் பாடசாலைக் கல்வியைச் சிறந்த முறையில் கற்றுத் தகுந்த தொழில் மூலம் வாழ்க்கையைக் கொண்டு செல்வதே ஆகும்.

தகுந்த கல்வியினூடாகச் சமுதாயத்தில் ஒரு மனிதனாக உயர்ந்து நின்று தன்னோடு சேர்ந்தவர்களையும் உயரச் செய்து வீட்டுக்கும் நாட்டுக்கும் உதவியவர்களாக வாழ்ந்த பெருமையை அடையலாம்.

எங்களை நாங்களே ஆட்சி செய்யக் கற்றுக் கொண்டால்தான் எம்மோடு சேர்ந்தவர்கள் தவறுவிடும்போது அவர்களையும் தடுத்து நற்பிரசைகளாக ஆக்கி சமுதாயத்தை நல்ல சமுதாயமாகக் கட்டியெழுப்ப முடியும். பருவக் கோளாறு என்று சொல்லி நல்லன அல்லாதவை எங்களை ஆட்சி செய்ய இடம் கொடுப்போமானால், அவை நாளடைவில் எங்களின் பங்காளிகளாக எங்களுடன் ஒட்டிக் கொண்டு விடும்.

எனவே எங்கள் இளமைப்பருவமானது மிகவும் ரம்மியமானது. அதனை ரசித்து அனுபவிக்க வேண்டும். ஆகவே செய்யக் கூடாதவற்றை எண்ணாமல் இளமையிற் கல்வி சிலையில் எழுத்து என்னும் தாரக மந்திரத்தை நன்குணர்ந்து 24 மணி நேரத்தையும் வீணாக்காது கல்விக்கு முக்கியத்துவம் கொடுத்து வாழ்க்கையில் வெற்றி பெறுவீர்களாக!

ஒரு சில புள்ளிகளால் உயர்தரத்தில் தவறும் பட்சத்தில் இறுதியில் கவலைப்பட்டு எந்தவித பிரயோசனமும் இல்லை. இன்னும் கொஞ்சம் நன்றாகப் படித்திருந்தால் இந்த இழப்பை ஈடு செய்திருக்கலாம் என்று வருந்துவதாலும் பயனில்லை. கிடைத்த நேரத்தை நித்திரையிலும், வீண் பேச்சுக்களிலும் வீணடித்ததால் அடுத்தவருடம் வரை ஒருவருட காலத்தை வீணாக்கப் போகிறோமே என்று வருந்தும் நிலைக்கு ஆளாகாது உங்களை நீங்களே ஆட்சி செய்யும் திறனை வளர்த்துக்கொள்ள முடியும்.

இன்று போதைவஸ்து, மது, பாலியல் துன்புறுத்தல் என்பன தாண்டவமாட நாமே காரணமாக உள்ளோம். சிறிது கண்டிப்பானவர்களாக இருந்து எங்களை நல்லொழுக்கங்களாலும் நற்சிந்தனைகளாலும் இறுகக் கட்டிக் கொண்டு பருவத்தே பயிர்செய்யக் கற்றுக்கொண்டோமானால் எதிர்காலம் சிறப்பாக அமையும். எங்களுக்கும் அம்மா, அப்பா, அண்ணா, அக்கா, தம்பி, தங்கை, மனைவி, பிள்ளைகள் என்று குடும்ப உறவு ஒன்று உள்ளது. நாங்கள் செய்யும் ஒழுக்கவீனங்களால் எங்களது குடும்ப அங்கத்தவர்களும் பாதிக்கப்படுகின்றனர். இறுதியாக எங்களால் சிந்தப்பட்ட குருதி, இழக்கப்பட்ட உயிர்கள் எல்லாம் எதற்காக என்று ஒருகணம் சிந்தித்து அந்த நோக்கங்களை அடைய, எங்களை எவரும் பயன்படுத்தி தங்கள் கொள்கைகளைப் எங்கள் மேல் திணிக்கவோ எங்களைச் சீரழிக்கவோ இடம் கொடுக்காமல் நடந்து கொள்ள வேண்டும்.

# வேதனைகளின் உச்சியில் நின்று சாதனை படைப்போம்



தகுந்த கல்வியினூடாகச் சமுதாயத்தில் ஒரு மனிதனாக உயர்ந்து நின்று தன்னோடு சேர்ந்தவர்களையும் உயரச் செய்து வீட்டுக்கும் நாட்டுக்கும் உதவியவர்களாக வாழ்ந்த பெருமையை அடையலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**மேடம்:** மனக் குழப்பம் உருவாகி மறையும். தொழில், வியாபாரத்தில், கடின உழைப்புத் தேவைப்படும். பணவரவு, எதிர்பார்த்ததை விடக் குறைவாக இருக்கும். உடல் நலனில் அக்கறை தேவை.



**இடபம்:** நற்செயலால், பலரும் அன்பு பாராட்டுவர். தொழில், வியாபாரத்தில் இருந்த போட்டி, குறையும். பணவரவும், நன்மையும் அதிகரிக்கும். குடும்பப் பிரச்சினைக்குச் சுமுகமான தீர்வு கிடைக்கும்.



**மிதுனம்:** எவரிடமும் அதிக நெருக்கம் வேண்டாம். தொழில், வியாபாரத்தில், குறுக்கீட்டை உடனடியாகச் சரி செய்வது நல்லது. புத்திரரின் நற்செயல்கள் பெருமை தேடித் தரும்.




**கடகம்:** சிறு செயலையும் நேர்த்தியுடன் செய்வீர்கள். தொழில், வியாபாரத்தில், அபரிமிதமான வளர்ச்சி ஏற்படும். இயன்ற அளவில் தான தர்மம் செய்வீர்கள். பெண்களுக்கு பொன், பொருள் சேரும்.



**சிங்கம்:** மனதில் வீண் கவலை உருவாகலாம். தொழில், வியாபாரத்தில் வளர்ச்சி நிலை சீராக இருக்கும். எதிர்பார்த்த பணவரவு கிடைக்கும். பெண்கள் ஆடம்பர எண்ணத்துடன் செயற்படுவர்.

இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?





**கன்னி:** எதிர்பார்ப்பு நிறைவேறுவதில் தாமதமாகலாம். தொழில், வியாபாரம் செழிக்க, கடின உழைப்புத் தேவைப்படும். இலாபம் சுமாராக இருக்கும். பண விடயத்தில் கவனம் தேவை. ஒவ்வாத உணவைத் தவிர்க்கவும்.



**துலாம்:** பொது விடயத்தில் கருத்துச் சொல்ல வேண்டாம். தொழில், வியாபாரத்தில் இலாபம் மிதமாக இருக்கும். பெண்கள் தாய் வீட்டாரிடம் உதவி கேட்டுப் பெறுவர். அரசியல்வாதிகள் புதிய முயற்சியில் ஈடுபடுவர்.



**விருச்சிகம்:** சொந்த நலனில் அக்கறை கொள்வீர்கள். தொழில், வியாபாரத்தில் புதிய உத்தி மூலம் வருமானம் காண்பீர்கள். பணியாளர்கள் விண்ணப்பித்த கடனுதவி கிடைக்கும். பெண்கள் குடும்ப நலனுக்காகப் பாடுபடுவர்.



**தனுசு:** குடும்ப விடயம் பற்றிப் பிறரிடம் பேச வேண்டாம். தொழில், வியாபாரத்தில் அளவான மூலதனம் போதும். வருமானம் சுமாராக இருக்கும். மாணவர்களுக்குப் படிப்பில் கூடுதல் கவனம் தேவை.



**மகரம்:** சாதனை நிகழ்த்த உரிய வாய்ப்புத் தேடி வரும். தொழில், வியாபார வளர்ச்சியால் வருமானம் அதிகரிக்கும். பணியாளர்கள் சலுகை கிடைக்கப் பெறுவர். பெண்கள், வீட்டு உபயோகப் பொருள் வாங்குவர்.



**கும்பம்:** செயலில் உற்சாகம் நிறைந்திருக்கும். தொழில், வியாபாரத்தில் இருந்த சிரமம் குறையும். ஆதாயம் பன்மடங்கு உயரும். குடும்பத்தினருடன் விருந்து விழாவில் பங்கேற்பீர்கள். பெண்கள், ஆடை, ஆபரணம் வாங்குவர்.



**மீனம்:** சுயமாகச் சிந்தித்துச் செயற்படுவது நல் லது. தொழில், வியாபாரத்தில், சுமாரான ஆதாயம் கிடைக்கும். பணியாளர்கள் பணிச் சுமைக்கு ஆளாவர். ஒவ்வாத உணவைத் தவிர்ப்பது நல்லது.

# சுடோக்கு

## எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 8 | | | | | 5 | | | |
| 5 | 9 | | | | 4 | | | 3 |
| | | | 2 | 3 | | | | |
| | 8 | | | | | 5 | | |
| 4 | | 1 | 7 | 6 | 3 | 2 | | 8 |
| | | 9 | | | | | 7 | |
| | | | | 1 | 2 | | | |
| 7 | | | 9 | | | | 4 | 6 |
| | | | 6 | | | | | 2 |

நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 5 | 1 | 6 | 7 | 2 | 4 | 9 | 3 | 8 |
| 9 | 7 | 8 | 3 | 1 | 5 | 2 | 4 | 6 |
| 4 | 2 | 3 | 6 | 8 | 9 | 5 | 7 | 1 |
| 6 | 9 | 2 | 1 | 5 | 3 | 7 | 8 | 4 |
| 7 | 4 | 1 | 8 | 6 | 2 | 3 | 5 | 9 |
| 3 | 8 | 5 | 4 | 9 | 7 | 1 | 6 | 2 |
| 2 | 6 | 7 | 5 | 4 | 1 | 8 | 9 | 3 |
| 1 | 5 | 4 | 9 | 3 | 8 | 6 | 2 | 7 |
| 8 | 3 | 9 | 2 | 7 | 6 | 4 | 1 | 5 |

சுடோக்கு ஒரு எண் விளை யாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப் படை. 1–9 வரையான எண்களை ஒழுங்கு படுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரை களையும் கொண்டிருக் கிறது. (உள்ளே இருப்ப வற்றை பெட்டிகள், கட்டங் கள், பகுதிகள், உப சதுரங் கள் என்றும் அழைக் கிறார்கள்).

இந்த ஒவ்வொரு நிரை யிலும், நிரலிலும் 1–9 வரையான எண்கள், இரண்டு தட வைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகை யில் உள் பெட்டிகளுக் குள்ளும் அவ்வாறே 1–9 இலக் கங்கள் இரட்டைப் படாமல் வர வேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டி ருக்கும். தர்க்கரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986 இல் ஜப் பானிய நிறுவன மான நிகோலி இதனைஅறிமுகப்படுத்தி வெற்றிகரமாகப் பரவலாக்கியது. 2005 இல் இது உலக அளவில் பிரபல்ய மானது.



கல்யாண ஆசை வரும் போது எல்லாம் இந்த புகைப்படத்தை பாருங்கள்

**மனைவி:** இந்த வாரம் முழுவதும் படம் பார்த்தோம்... அடுத்த வாரம் முழுவதும் சொப்பிங் போவோமாங்க

**கணவன்:** சரி! அதுக்கு அடுத்த வாரம் முழுவதும் கோயிலுக்குப்போவோம்...

**மனைவி:** எதுக்குங்க...

**கணவன்:** பிச்சை எடுக்கத்தான்...



இனி மாறும் ;-)



வித்தியாச மானவர்கள் தங்களை நிரூபித்துக் கொள்ள விரும்புவதே இல்லை... அரை குறைகளே நாளொரு மேனியும் பொழுதொரு வண்ண மென...




அப்பா அழுது கொண்டிருக்கும் மகனிடம் கேட்கிறார்..

அப்பா: ஏன்டா அழுதுட்டு இருக்கே?

மகன்: அம்மா அடிசிட்டாங்கப்பா...

அப்பா: அதுக்கு போய் என்ரா அழுகிறா..

மகன்: போய்யா, உன்னை மாதிரியெல்லாம் என்னால வலி தாங்க முடியாது..

அப்பா: ...!

குறைந்தளவு படங்களையே ஒப்புக்கொண்டு நடித்து வந்த மீரா ஜாஸ்மின் தற்போது தனது குறிக்கோளை மாற்றியுள்ளார். மலையாளத்தில் 'பத்து கல்பனாக்கள்' கிரைம் திரில்லர் படத்தில் நடிக்கிறார். இதில் ஏனைய நடிகர்களும் முக்கிய வேடம் ஏற்றுள்ளனர். "சர்ச்சைகள் என்னை எப் போதும் பாதித்ததில்லை. எனக்கென்று ஒரு தனி உலகம் வகுத்துக் கொண்டிருக்கிறேன். அதில் நானும் எனது குடும்பமும் சந்தோசமும் தான் இருக்கிறோம்.

"வருடத்துக்கு இத்தனை படம் நடித்தால் போதும் என்று நான் கணக்கு வைத்திருக்கவில்லை. ஒரு கட்டத்தில் நல்ல படங்களில் நடிப்பதற்காகத் தெரிவு செய்தே படங்களை ஒப்புக் கொண்டேன். பிறகு குறிக்கோளை மாற்றம் செய்து கொண்டு எனது கதாபாத்திரம் திருப்தி தந்தால் அதை ஏற்பது என்று முடிவு செய்தேன். அதற்காக நிறையப் படங்கள் பார்த்தேன். அது எனக்குப் படங்களைத் தெரிவு செய்வதில் நம்பிக்கை தந்தது. திருமணத்துக்குப் பிறகு சில நடிகைகள் நடிக்காமலிருப்பதற்கு சமுதாயமும், அவரது குடும்பத்தினரின் ஆதரவு இல்லாததும் காரணமாக இருக்கலாம். நான் நடிப்பதற்கு எனது குடும்பம் எனக்கு ஆதரவாக உள்ளது" என்கிறார் –மீரா.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**நாளை வைகாசி-30**
ஞாயிற்றுக்கிழமை - 12.06.2016
திதி: அட்டமி பி.இ.05.35 வரை
நட்சத்திரம்: பூரம் பி.ப.03.02 வரை
ராகுகாலம்: 04.22-05.52 வரை
சுபநேரம்: 08.52-10.22 வரை

# வெங்காயத் தீயல்



## தேவையானவை

வெங்காயம் – 500 கிராம்
தேங்காய் – 2
தேங்காய் எண்ணெய் – 100 மி.லி.
பச்சை மிளகாய் – 20 கிராம்
இஞ்சி – 10 கிராம்
எலுமிச்சை – 2
மிளகுத்தூள் – 10 கிராம்
வெல்லம்– 100 கிராம்
கறிவேப்பிலை – 10 கிராம்
உப்பு – தேவையான அளவு.

## செய்முறை

சட்டியில் எண்ணெய் ஊற்றிச் சூடாக்கவும், அதில் துருவிய தேங்காயைப் பொன்னிறமாகும் வரை வதக்கி அரைத்துக் கொள்ளவும்.
சிறிதளவு தண்ணீரில் வெல்லத்தை நன்கு கரைத்து, கொதிக்க வைத்து வடிகட்டி எடுத்துக் கொள்ளவும்.
வெங்காயத்தின் தோலை உரித்தெடுத்து சிறிய துண்டுகளாக நறுக்கிக் கொள்ளவும்.
சட்டியில் தேங்காய் எண்ணெய்யை ஊற்றிச் சூடாக்கவும். அதில் பச்சை மிளகாய், இஞ்சி, கறிவேப்பிலை, நறுக்கிய வெங்காயத்தைச் சேர்த்து ஒரு நிமிடம் வதக்கவும்.
வெங்காயத்தை நன்கு வதக்கிய பிறகு அத்துடன் மிளகுத் தூள், கொதித்து கரைத்து வடிகட்டிய வெல்லப்பாகு, எலுமிச்சைச் சாறு மற்றும் உப்பு சேர்த்து நன்கு அரைக்கவும்.

# நேற்றைய மரக்கறி விலை நிலவரம்

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| முள்ளங்கி | 150 | – | 160 | 160 | 100 | – | 140 | 80 |
| கத்தரி | 400 | 100 | 180 | 200 | 220 | 200 | 150 | 180 |
| கரட் | 200 | 160 | 220–300 | 220 | 240 | 250 | 200 | 140 |
| மரவள்ளி | 70 | 60 | 70 | 60 | 60 | 80 | 50 | 50 |
| பயிற்றை | 300 | 240 | 180 | 160 | 180 | 240 | 170 | 160 |
| பாகல் | 250 | 240 | 320 | 280 | 200 | 120 | 300 | 160 |
| கருணைக்கிழங்கு | 120 | 100 | 120 | 160 | 120 | – | 120 | 80 |
| பெ.வெங்காயம் | 90 | 80 | 80 | 100 | 80 | 100 | 75 | 80 |
| சி.வெங்காயம் | 100 | 140 | 160 | 180 | 160 | 200 | 190 | 140 |
| பூசணி | 40 | 50 | 80 | 80 | 80 | 60 | 70 | 80 |
| தக்காளி | 200 | 170 | 250 | 250 | 180 | 240 | 230 | 160 |
| வாழைக்காய் | 60 | 50 | 60 | 60 | 60 | 80 | 75 | 40 |
| கீரை | 40 | 50 | 50 | 20 | 50 | 40 | 20 | 50 |
| பொன்னாங்காணி | 40 | 40 | 30 | 40 | 40 | – | 35 | 12 |
| பச்சை மிளகாய் | 600 | 450 | 650 | 700 | 400 | 600 | 450 | 550 |
| புடோல் | 120 | 80 | 80 | 120 | 100 | 120 | 90 | 100 |
| கோவா | 180 | 160 | 180 | 200 | 180 | 240 | 110 | 140 |
| வெண்டி | 150 | 120 | 100 | 120 | 180 | 160 | 130 | 60 |
| போஞ்சி | 300 | 280 | 200 | 200 | 200 | 300 | 150 | 240 |
| லீக்ஸ் | 250 | 100 | 260 | 220 | 240 | 240 | 130 | 180 |
| தேங்காய் | 40 | 20 | 40 | 30 | 20 | 40 | 15–30 | 30 |
| உருளைக்கிழங்கு | 120 | 120 | 110 | 110 | 120 | 100 | 90 | 120 |
| தேசிக்காய் | 300 | 250 | 300 | 300 | 200 | 200 | 300 | 200 |
| வல்லாரை | 15 | 20 | 10 | 20 | 15 | 20 | 10 | 15 |
| கறிமிளகாய் | 200 | 240 | 280 | 280 | 300 | 240 | – | 200 |
| இராசவள்ளி | 160 | 170 | – | 160 | – | – | 100 | 120 |
| முருங்கைக்காய் | 200 | 130 | 400 | 300 | 350 | 200 | 120 | 200 |

# நேற்றைய கடலுணவு விலை நிலவரம்



| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| இறால் | 600 | 600 | 600 | 700 | 800 | 1000 | – |
| நண்டு | 250 | 400 | 300 | 350 | 400 | 300 | – |
| கணவாய் | 600 | 600 | 500 | 550 | 700 | 800 | – |
| பாரை | 550 | 600 | 500 | 400 | 600 | 600 | 400 |
| சுறா | 500 | 700 | 600 | 900 | 1000 | – | – |
| சீலா | 300 | 500 | 400 | 450 | 400 | 300 | 400 |
| விளை | 650 | 600 | 400 | 300 | 450 | 700 | 450 |
| முரல் | 300 | 400 | 350 | 250 | 350 | 300 | – |
| கும்பிளா | 400 | 400 | 300 | 400 | 400 | 500 | – |
| கிளாக்கன் | 800 | 1000 | – | 700 | 600 | 600 | – |
| ஓரா | 400 | 400 | – | 400 | 450 | – | 400 |
| திரளி | 300 | 300 | 200 | 260 | 250 | 200 | 350 |
| நகரை | 250 | 300 | – | 280 | 400 | 250 | 300 |
| சூடை | 150 | 200 | 100 | 100 | 140 | 150 | – |
| ஒட்டி | 300 | 300 | 150 | 350 | 250 | 250 | – |
| திருக்கை | 150 | 400 | 200 | 470 | 300 | 300 | 150 |
| மதனம் | 150 | 300 | 180 | 300 | 280 | – | 250 |
| கொய் | 100 | 200 | 60 | 80 | 80 | 100 | – |
| பாலை | 400 | 300 | 250 | 300 | 500 | 300 | – |
| வாழை | 100 | 200 | 200 | 180 | 400 | – | – |

# ஆடைக்கேற்ற காலணிகள்

தங்களது ஆடைகளுக்கும், சென்று வரும் இடங்களுக்கும் ஏற்ற வகை வகையான காலணிகளை தேர்ந்தெடுத்து அணிந்து கொள்ளும் நாகரிகக் காலம் இது. ஆடையின் நிறத்துக்கு ஏற்ப காலணி, அதிக உயரம் கொண்ட குதிக்கால் காலணி, துணியால் அலங்கரிக்கப்பட்ட காலணிகள் என பற்பல வகைகளில் காலணிகள் சந்தைகளில் குவிகின்றன.

ஒவ்வொன்றும் தரத்துக்கும், அழகுக்கும் ஏற்ற விலைகளில் கிடைக்கின்றன. குறைந்த விலையிலும் அழகான காலணிகளை வாங்கிச் செல்ல முடியும். பாதங்களின் அழகைக் கூட்டும் விதத்திலும் காலணிகள் கிடைக்கின்றன.

திருமண ஆடையின் நிறத்தில், அதில் உள்ள வடிவமைப்புக்கு ஏற்ற வகையில், மணப்பெண் அணியும் நகைக்கு ஏற்ற வகையில் என்று காலணிகள் தயாரிக்கப்படுகின்றன. விருந்து நிகழ்ச்சி, திருமண நிகழ்ச்சிக்குச் செல்வதென்றால்ஆடம்பர மான காலணிகளை அணிந்து கொண்டு அனைவரையும் அசத்தலாம். ஆனால் தினமும் அலுவலகத்துக்கு அணிந்து செல்வதற்கு இவை எல்லாம் சரிப்பட்டு வராது.

மிகவும் நளினமாக, ஆனால் பார்ப்பதற்கே கொஞ்சம் விலை கூடுதல் என்று நினைக்க வைக்கும் வகையில் காலணிகள் வந்துள்ளன. சாதாரண தோற்றத்தில் நல்ல தரத்துடன் அணிவதற்கு சுகமானதாகவும் அலுவலக பயன் பாட்டுக்குப் பல வகைகளில் காலணிகள் இடம்பிடித்துள்ளன.

குடைகளில் பல வகைகளில் காலணிகள் வந்தாலும் நமக்கென்று ஒரு தெரிவு உள்ளது. உங்களுக்குப் பிடித்தவற்றைத் தெரிவு செய்து அணியுங்கள். காலுக்கும், காசுக்கும் எந்தப் பாதிப்பும் இல்லாத வகையில் உங்களது தெரிவு இருக்கட்டும்.

# திரைச் சீலைகள்




புதிய திரைச் சீலைகள் அறிமுகமாகியுள்ளன. 9 அடி உயரத்தில் இடையில் நெற் வேலைப்பாடுகள் செய்யப்பட்டு, கரை வேலைப்பாடுகளுடன், இவை விற்பனை செய்யப் படுகின்றன. 1 மீற்றர் துணியின் விலை 500 தொடக்கம் 700 ரூபா ஆகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ரயர் உற்பத்தி ஆற்றலை அதிகரிப்பதற்கு சியட் திட்டம்

இலங்கையில் ரயர்களுக்கு அதிகரித்து வரும் உள்ளூர் மற்றும் வெளிநாட்டு தேவைகளைச் சமாளிப்பதற்கு றேடியல் ரயர் உற்பத்தி ஆற்றலை கணிசமான அளவு அதிகரிக்க சியட் சிறிலங்கா அடுத்த 12 மாதங்களில் 800 மில்லியன் ரூபாவை முதலீடு செய்யப் போவதாக அறிவித்துள்ளது.

றேடியல் சந்தையில் தற்போது 30 சதவீத பங்குகளைக் கொண்டிருப்பதுடன் இலங்கையின் காற்றடைத்த ரயர் தேவையில் சுமார் அரைவாசியை நிறைவேற்றி வரும் இந்த நிறுவனம் தற்போதைய முதலீட்டின் பயனாக றேடியல் ரயர் உற்பத்தியை 75 சதவீதத்தினால் அதிகரித்து 40,000 த்திலிருந்து 70,000 ரயர்கள் வரையிலான உற்பத்தியைப் பெறமுடியுமென தெரிவித்துள்ளது.

சியட் சிறிலங்கா அதன் களனி தொழிற்சாலை தொகுதியில் கார்களுக்கும் விளையாட்டு பயன்பாட்டு வாகனங்களுக்குமான உயர் திறனைக் கொண்ட ரயர்களை உற்பத்தி செய்வதற்கு 600 மில்லியன் ரூபா செலவிலான நவீன ஆலை ஒன்றை ஆரம்பித்து 2 வருடங்களின் பின்னர் உற்பத்தி ஆற்றலை மேலும் அதிகரிப்பதற்கான இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.



எங்கள் புதிய முதலீட்டுத் திட்டமும் நாம் 2014ஆம் ஆண்டு ஜூலை மாதம் உயர் தொழில்நுட்ப இயந்திரங்களுடன் ஆரம்பித்த ஆலைக்கு ஒத்ததாகவே இருக்கும் என்று சியட் சிறிலங்கா முகாமைப் பணிப்பாளர் விஜய் கம்பிரே தெரிவித்தார். பெரும்பாலும் உற்பத்தியை இரண்டு மடங்காக அதிகரிக்கும் இந்தத் துணிகரமான தீர்மானம், நம் நாட்டுக்கான எமது அர்ப்பணிப்பான செயற்பாட்டையும் உள்ளூர் மற்றும் வெளிநாட்டு சந்தைகளில் உலக உற்பத்திகளுடன் போட்டி இடுவதற்கு எமது ரயர்களுக்கு உள்ள ஆற்றலில் எமக்குள்ள நம்பிக்கையையும் எடுத்துக் காட்டுவதாக அமைந்துள்ளது என்றும் கம்பிரே தெரிவித்தார். இந்த முதலீட்டுடன் சியட் சிறிலங்காவின் மொத்த முதலீடு 3.8 பில்லியனாக அதிகரிக்கும் என்றும் அவர் கூறினார்.

நிறுவப்பட இருக்கும் புதிய இயந்திரங்கள் 13 புதிய வகை றேடியல் ரயர்களை உற்பத்தி செய்யும்.

இவை தற்போது உற்பத்தி செய்யப்படும் 33 அளவுகளான கார் 20, வேன் 8 மற்றும் விளையாட்டு மற்றும் பயன்பாட்டு வகை 5 ற்கும் மேலதிகமாக இருக்கும்.

உற்பத்தி ஆற்றலில் அதிகரிப்பும் புதிய அளவுகளின் அறிமுகமும் உள்ளூர் சந்தையில் றேடியல் ரயர்களின் விற்பனையை மிகவும் அதிகரிப்பதுடன் இந்தத் துறையில் எமது சந்தைப் பங்கினையும் இரண்டு மடங்காக உயர்த்தும் என்று சியட் சிறிலங்கா விற்பனைப் பிரிவினதும் சந்தைப்படுத்தல், ஏற்றுமதிப் பிரிவினதும் உதவித் தலைவர் ரவிடட்லானி குறிப்பிட்டார்.


இரண்டு வருடங்களுக்கு முன்னர் அறிமுகம் செய்யப்பட்ட Bead Apexing இயந்திரங்கள், கப் ஸ்ரிப் இயந்திரங்கள் மற்றும் முன்னேற்றமான ரயர் தயாரிக்கும் இயந்திரங்கள் ஆகியவை தற்போது விஸ்தரிக்கப்படும் ஆலையிலும் பொருத்தப்பட இருக்கின்றன என்றும் டட்லானி தெரிவித்தார்.

இதேபோன்று, உயர்தர விளையாட்டு பயன்பாட்டு வாகனங்களையும் வீதி அற்ற இடங்களில் ஓடும் வாகனங்களையும் தயாரிப்பதற்கு அதிக செலவானதும் உயர் தரத்திலானதுமான றேடியல் ரயர்களை உற்பத்தி செய்வதற்கு இரு துண்டுவார்ப்பட அச்சுகளுக்குப் பதிலாக கூறுபடுத்தப்பட்ட வார்ப்பட அச்சுகளின் பிரயோகமும் விஸ்தரிப்புத் திட்டத்தில் அடங்கும்.

சியட் சிறிலங்காவின் தற்போதைய ரயர் உற்பத்தியில் சுமார் மூன்றில் ஒரு பங்கு தெற்காசியா, மத்திய கிழக்கு, ஆபிரிக்கா, தூர கிழக்கு பிராந்தியங்களில் உள்ள 15 நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகின்றன.

**வணிகம்**

சியட் சிறிலங்காவின் உற்பத்தி நடவடிக்கைகளில் றேடியல், வர்த்தக, மோட்டார் சைக்கிள், முச்சக்கரவண்டி, விவசாய இயந்திர சாதன பிரிவுகள் ஆகியவை அடங்குகின்றன. றேடியல் பிரிவில் 30 சதவீதம், ட்ரக், இலகுட்ரக் வகையில் 51 சதவீதம், முச்சக்கர வண்டி பிரிவில் 54 சதவீதம், மோட்டார் சைக்கிள் பிரிவில் 17 சதவீதம், விவசாய ரயர் வகையில் 72 சதவீதம் நிறுவனம் பொறுப்பாகும். (த)




## ருவிட்டர் பயனர்களுக்கு அதிர்ச்சி தரும் செய்தி

முகநூல் வலைத்தளத்துக்கு அடுத்ததாக அதிகம் பயன்படுத்தப்படும் சமூகவலைத்தளமாக ருவிட்டர் காணப்படுகின்றது.

இந்தத் தளத்தில் உள்ள பயனர்களின் கணக்குகள் அண்மைக் காலமாக ஊடுருவிகளால் திருடப்படுவது அதிகரித்து வருகின்றது.

இந்தத் திருட்டில் ருவிட்டர் மற்றும் முகநூல் நிறுவுனர்களின் கணக்குகளும் அடங்கும்.

சுமார் 32 மில்லியன் கணக்குகள் திருடப்பட்டுள்ளதாகத் தற்போது இசற் டி நெற் தளம் அதிர்ச்சித் தகவலை வெளியிட்டுள்ளது.

இவ்வாறு திருடப்பட்ட கணக்குகள் கறுப்பு இணையத்தில் விற்கப்பட்டுள்ளன.

அதாவது சுமார் 5,820 அமெரிக்க டொலர்கள் பெறுமதி உடைய 10 பிட்காயின்ஸ்களுக்கு விற்பனை செய்யப்பட்டுள்ளது.

ஆனால் ருவிட்டர் நிறுவனமோ இந்தக் கணக்குகள் திருடப்பட்டிருக்க முடியாது எனவும், அவற்றைத் தம்மால் பாதுகாக்க முடியும் என்ற நம்பிக்கை இருப்பதாகவும் தகவல் வெளியிட்டுள்ளது.

எனினும் ருவிட்டர் திருடப்பட்ட கணக்குகளை மீளப்பெறுவதற்கு முனைந்து வருகின்ற அதே வேளை இந்தக் கணக்குகளை மீண்டும் பயன்படுத்தும்போது மல்வேர் தாக்கங்கள் ஏற்படலாம் எனவும் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (த)

**நுட்பம்**

## ரைம்ஸ் சஞ்சிகையில் இடம்பிடித்த தமிழர்

தங்களது புதிய படைப்புகள் மூலம் உலகை மாற்றியவர்கள் என்ற தலைப்பில் ரைம்ஸ் சஞ்சிகை வெளியிட்டுள்ள பட்டியலில் தமிழர் ஒருவர் இடம் பிடித்துள்ளார்.

இந்த ஆண்டு ரைம்ஸ் சஞ்சிகை வெளியிட்டுள்ள பட்டியலில், தொலைபேசியில் ஒரு முனையில் பேசுபவர் எந்த மொழியில் பேசினாலும், அதனை மறுமுனையில் கேட்பவர் புரிந்துகொள்ளும் வகையில் மாற்றும் மென்பொருளைக் கண்டு பிடித்த சென்னையைச் சேர்ந்த உமேஷ் சச்தேவ் இடம்பெற்றுள்ளார்.



அவசரகால உதவி மையங்களுக்குத் தொடர்பு கொள்ளும் மக்கள், தங்களது உள்ளூர் மொழியில் பேசுவதை, தொலைபேசியின் மறுமுனையில் கேட்பவர் புரிந்து கொள்ளும் வகையில் மாற்றும் மென்பொருளை அறிமுகம் செய்த சாதனைக்காக ரைம்ஸ் சஞ்சிகை உமேஷ் சச்தேவை தெரிவு செய்துள்ளது.

இவரது இந்த மென்பொருள் உலக அளவில் 25 மொழிகளையும் 150 பேச்சு வழக்குகளையும் இனம்கண்டு உதவும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது.

பெருவாரியான இந்தியர்கள் உள்ளிட்ட 50 லட்சம் பேர் சச்தேவ் வடிவமைத்துள்ள இந்த மென்பொருளைப் பயன்படுத்தி வருகின்றனர்.

30 வயதான உமேஷ் சச்தேவ் அவரது நண்பருடன் இணைந்து சென்னையில் ஒரு மென்பொருள் நிறுவனத்தை நடத்தி வருகிறார், இதே போல விவசாயிகள், தட்பவெப்ப நிலை குறித்து அறிந்து கொள்ளவும் மென்பொருளை உருவாக்கியுள்ளார் சச்தேவ். (தி)

## இந்தியாவின் பொறியியல் ஏற்றுமதிகள் கடும் வீழ்ச்சி

இலங்கைக்கான இந்தியாவின் பொறியியல் ஏற்றுமதிகள் கடுமையாக வீழ்ச்சியடைந்திருப்பதாக தெரிவிக்கப் பட்டுள்ளது.

இந்திய ஊடகம் ஒன்று இதனைத் தெரிவித்துள்ளது. வெளிநாடுகளுக்கான பொறியியல் ஏற்றுமதியில் இந்தியா இந்த ஆண்டு கடுமையான வீழ்ச்சியைச் சந்தித்திருக்கிறது.

இதில் இலங்கை முதல் இடம்பெற்றுள்ளது. இதன்படி இலங்கைக்கான இந்தியாவின் பொறியியல் ஏற்றுமதிகள் 90 சதவீதத்தால் வீழ்ச்சி கண்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (த)

## சிங்கர்-உயர்கல்வி அமைச்சு இணைந்து பல்கலை மாணவர்களுக்கு மடிக் கணினி

நாட்டில் நீடித்து உழைக்கின்ற நுகர்வோர் சாதனங்களின் விற்பனையில் முன்னணியில் திகழ்ந்து வருகின்ற சிங்கர் சிறிலங்கா பீ.எல்.சி. இலங்கை அரசானது பல்கலைக்கழக மாணவர்களுக்கு மடிக் கணினிகளை வாங்க வட்டியற்ற கடன்



களை வழங்கும் திட்டத்தின் கீழ் நாடெங்கிலுமுள்ள பல்கலைக்கழக மாணவர்களுக்கு மடிக்கணினிகளை வழங்குவதற்கு கல்வியமைச்சுடன் கைகோர்த்துள்ளது. அரசு முன்வைத்த 2016 ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டத்துக்கு அமைவாக, உயர் கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு, நிதி அ[illegible] கலைக்கழக மானியங்கள் ஆ[illegible] மற்றும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவுக்கு கீழ்ப்பட்ட பல்கலைக் கழகங்கள் ஆகியவற்றுடன் இணைந்து இந்தச் செயற்றிட்டம் அமுலாக்கம் செய்யப்படுகின்றது.

இந்த பங்குடமையினூடாக உயர் கல்வி அமைச்சின் ஏற்பாட்டின் கீழ் மக்கள் வங்கி மற்றும் இலங்கை வங்கி ஆகிய இரு பெரும் வங்கிகளின் மூலமாக வட்டியற்ற விசேட கடன் திட்டத்தின் கீழ் பல்கலைக்கழக மாணவர்களுக்கு டெல் மற்றும் சிங்கர் எக்ஸ் சீரிஸ் மடிக் கணினிகளை சிங்கர் சிறிலங்கா நிறுவனம் வழங்கவுள்ளது. நவீன இன்ரெல் 6 ஜெனறேசன் ஐ 3 மற்றும் ஐ 5 புறொசஸ்சர் கொண்ட உயர் தொழிற்படு திறனுடனான மடிக்கணினிகள் உட்பட பல்வேறு வகையான மடிக்கணினிகளைத் தெரிவுசெய்யும் வாய்ப்பை மாணவர்கள் கொண்டுள்ளதுடன், இந்த மடிக் கணினிகள் அனைத்தும் நவீன தொழில்நுட்ப அம்சங்கள் மற்றும் அசல்விண்டோஸ் 10 ஆகியவற்றையும் கொண்டுள்ளன.

சிங்கர் நிறுவனத்திடமிருந்து மடிக்கணினி ஒன்றை வாங்க விரும்புகின்ற எந்தவொரு மாணவரும் நாடளாவியரீதியில் உள்ள எந்தவொரு பல்கலைக்கழகத்துக்கும் அ[illegible]களில் அவற்றைச் சௌகரியமாகப் பெற்றுக் கொள்ளும் வசதி உள்ளது. (த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசு

வருடம் முழுமையான அறிக்கையும் முன்வைக்கப்பட உள்ளன. இதற்கு முன்னர் வடக்கு – கிழக்கின் நிலமைகள் தொடர்பில் அரசு முன்னேற்றத்தைக் காண்பிக்கவேண்டும். வடக்கு – கிழக்கை மீளக்கட்டியெழுப்புவதற்கு வெளிநாட்டு நிதி உதவிகள் கிடைக்கின்றன. அவை குறித்து தமிழ் தேசியக் கூட்டமைப்புடன் அரசு இதுவரை கலந்துரையாட வில்லை" என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

வடக்கு – கிழக்கில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பில் நேற்று வெள்ளிக்கிழமை சபை ஒத்திவைப்புவேளை பிரேரணையைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனின் முன்வைத்தார். அதன் மீது உரையாற்றிய அவர் தெரிவித்ததாவது:

**முக்கிய தருணம்**

போர் முடிந்து 7 ஆண்டுகள் கடந்து விட்டன. வடக்கு – கிழக்கைச் சேர்ந்த மக்கள் இன்றும் தமது சொந்த இடங்களில் மீளக்குடியமர்த்தப்படவில்லை. இராணுவத்தினர் தொடர்ச்சியாக மக்களின் காணிகளில் தங்கியுள்ளனர். இதனால் மீள்குடியமர்வு தடைப்பட்டுள்ளது. சில காணிகள் இணுவத்தினரால் பயன்படுத்தப்படவில்லை. அவையும்கூட பொது மக்களிடம் கையளிக்கப்படவில்லை.

நாட்டின் வரலாற்றில் இன்று நாம் மிக முக்கிய தருணத்தில் இருக்கின்றோம். தமிழ் மக்களின் நல்லிணக்கம் தற்போது நாட்டின் மிக முக்கிய தேவையாக உள்ளது. 2015ஆம் ஆண்டு ஜனவரியில் ஏற்பட்ட ஆட்சி மாற்றத்திற்கு எமது மக்களே காரணமாக உள்ளனர்.

**திருப்தியில்லை**

நீதி, சமத்துவத்தை எதிர்பார்த்திருந்த எமது மக்கள், புதிய அரசினூடாக தமது வாழ்வு மீள்கட்டியெழுப்பப்படும் – திருப்திப்படக் கூடிய நிலை ஏற்படும் என்று எதிர்பார்த்திருந்தனர். ஆனால், ஜனாதிபதி ஆட்சிக்கு வந்து 17 மாதங்கள் கடந்துள்ளன. புதிய அரசு ஆட்சிக்கு வந்த 9 மாதங்கள் நிறைவுற்றுள்ளன. அரசின் செயற்பாடுகள் குறித்து தமிழ் மக்கள் திருப்தியடையக்கூடிய நிலமை இல்லை. நல்லிணக்கம் உரிய முறையில் தென்படவில்லை. அரசு எதுவும் செய்யவில்லை என்பது இதன் பொருள் அல்ல. இன்னும் பல விடயங்களை மேற்கொண்டிருக்கலாம் என்று நாம் நினைக்கின்றோம்.

தமிழ் மக்களின் பிரச்சினைகள் குறித்து புதிய அரசு வித்தியாசமான அணுகு முறைகளைப் கடைப்பிடிக்கின்றது. இருப்பினும், திட்டமிட்ட செயற்பாடுகளைக் காணமுடியவில்லை. காணிகளை விடுவிக்கும் விடயத்தில் ஜனாதிபதி, பிரதமருடன் நாம் கலந்துரையாடியுள்ளோம். சில நாள்களில் ஜனாதிபதி யாழ்ப்பாணம் செல்லவுள்ளார் என்று ஊடகங்கள் வாயிலாக நாம் அறிந்தோம். இதன்போது காணி விடுவிப்பு தொடர்பில் இராணுவத்தினர், பொதுமக்களுடன் இடம்பெறும் கூட்டத்தில் ஜனாதிபதி பங்கேற்பார் என்றும் நாம் அறிகின்றோம்.

காணி விடுவிப்பு விடயத்தில் சரியான முடிவுகள் மேற்கொள்ளப்படவேண்டும். முழுமையாக இல்லாவிட்டாலும் பெருந்தொகையான காணிகள் விடுவிக்கப்படவேண்டியுள்ளன. இதற்காக முடிவுகள் எடுக்கப்படவேண்டிய நேரம் வந்து விட்டது. எனவே, உரிய முறையில் முடிவுகள் மேற்கொள்ளப்படவேண்டும்.

**தொழில்வாய்ப்பு புறக்கணிப்பு**

வடக்கு – கிழக்கைச் சேர்ந்த விவசாயிகள், மீனவர்கள், கைத்தொழிலாளர்கள் தமது தொழிலை முன்னெடுக்கத் தேவையான உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளதா? எமது மக்கள் தமது வாழ்வாதாரத்தை முன்னெடுக்க உதவிகள் வழங்க அரசிடம் முறையான திட்டம் இல்லை. அத்துடன், அரசின் தொழில் வாய்ப்புகளில் வடக்கு – கிழக்கு இளைஞர்கள் தொடர்ந்தும் புறக்கணிக்கப்படுகின்றனர். வடக்கு – கிழக்கில் உள்ள அரச பதவிகளிலும் நீண்ட காலமாக பாரபட்சம் காட்டப்படுகின்றது.

கொழும்பிலுள்ள அமைச்சர்கள் தமது அரசியல் தேவைக்கேற்றவாறு தொழில் வாய்ப்புக்களை வழங்குகின்றனர். தமிழ், முஸ்லிம், சிங்கள அமைச்சர்கள் தமக்குத் தேவையானவர்களுக்கு அரச வேலை வாய்ப்புக்களை வழங்குகின்றனர். கூலித் தொழில் வாய்ப்புக்களை வழங்குவதிலும் இப்படியான நிலமையே காணப்படுகிறது. இதனால் படித்த தகுதியான இளைஞர்கள் புறக்கணிக்கப்படுகின்றனர். உங்களது ஆட்சியில் இதுவரை காலமும் வழங்கப்பட்ட வேலை வாய்ப்புக்கள் தொடர்பான தகவல்களை எடுத்துப் பார்த்தால் உண்மை நிலை புரியும்.

**வடக்கு - கிழக்குக்கு தொழில் வழங்குங்கள்**

வடக்கு – கிழக்கைப் பிரதிநிதித்துவப்படுத்தி 18 நாடாளுமன்ற உறுப்பினர்கள் உள்ளனர். இதில் 16 பேர் இலங்கைத் தமிழரசுக் கட்சியைச் சேர்ந்தவர்கள். அதாவது, தமிழ்ப் பிரதிநிதித்துவத்தில் 85 சதவீத பங்கை நாம் வகிக்கின்றோம். இவ்வாறான நிலையில் இடம்பெறும் செயற்பாடுகள் சமத்துவமானதா? ஜனநாயகமானதா? ஜனநாயகம், சமத்துவத்தின் அடிப்படையில் அரசமைப்பில் கூறப்பட்டுள்ளதற்கமைய, இந்த நாட்டின் ஆளுகையில் எமக்கும் பங்குண்டு. இந்த ஜனநாயகத்தையும், சமத்துவத்தையும் உறுதிப்படுத்துவது அரசின் கடமையாகும். எனவே, இந்த நிலமை குறித்து உரிய முறையில் அவதானம் செலுத்தவேண்டும் என்று அரசிடம் கோரிக்கை விடுக்கின்றோம். வடக்கு – கிழக்கைச் சேர்ந்த தமிழ், முஸ்லிம் இளைஞர்களுக்கு வேலை வாய்ப்புக்கள் வழங்கப்படவேண்டும்.

**அரசு எம்முடன் பேச வேண்டும்**

வடக்கு – கிழக்கு அபிவிருத்திக்கும் அந்த மாகாணங்களை மீளக் கட்டியெழுப்புவதற்கும் மூலதனங்கள் தேவைப்படுகின்றன. இதற்காக வெளிநாட்டு முகவராண்மைகள், நன்கொடையாளர்களினால் பாதிக்கப்பட்டவர்களின் வாழ்வை மீளக்கட்டியெழுப்ப நிதி வழங்கப்படுகிறது. ஆனால், இவற்றைக் கையாள்வது தொடர்பில் அந்த மக்களின் பிரதிநிதிகளாகிய எம்முடன் அரசு கலந்துரையாடுவதில்லை. இந்த நிலமை தொடர்ந்தும் நீடிக்குமா என்று தெரியவில்லை. இந்த விடயத்தில் அரசு எம்முடன் கலந்துரையாட வேண்டும்.

**அரசியல் கைதிகள் விடுதலை**

பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகள் 50 பேர் விடுதலை செய்யப்பட்டுள்ளனர். இருப்பினும், அந்தச் சட்டத்தின் கீழ் இன்றும் பலர் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். இவர்களை விடுவிக்க ஜனாதிபதி, பிரதமருடன் நாம் கலந்துரையாடவுள்ளோம்.

எமது தரப்பிலும் பெரிய முயற்சிகளை நாம் மேற் கொண்டுள்ளோம். இன்னும் 150 பேர் விடுதலை செய்யப்படாமல் சிறையில் உள்ளனர். இவர்களின் விடுதலை தொடர்பில் சிலர் தேசிய பாதுகாப்புடன் தொடர்புபடுத்திக் கூறுகின்றனர். சமத்துவம், நீதி, மக்களைச் சமமாக நடத்தப்படுதல் என்பவற்றினூடாகவே தேசிய பாதுகாப்பை உறுதிப்படுத்த வேண்டும். சிலர் சோடிக்கப்பட்டவாறு கதைக்கின்றனர். எனவே, இந்த விடயங்கள் குறித்து அரசு திட்டமிட்டவாறு செயற்பாடுகளை முன்னெடுக்க வேண்டும்.

**யதார்த்தமான நல்லிணக்கம்**

ஐ.நா. மனித உரிமைகள் சபையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் தொடர்பில் உங்களுக்கு நன்கு தெரியும். ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளரால் எதிர்வரும் 29ஆம் திகதி வாய்மூல அறிக்கை வெளியிடப்படவுள்ளது. அடுத்த வருட முற்பகுதியில் முழுமையான அறிக்கை முன்வைக்கப்படவுள்ளது. இவ்வாறான நிலையில் வடக்கு – கிழக்கின் நிலமை தொடர்பில் அரசு முன்னேற்றத்தைக் காட்டவேண்டும். யதார்த்தமான நல்லிணக்கத்தை உருவாக்கி, நாட்டில் ஒற்றுமையைக் கட்டியெழுப்பும் வகையில் அரசு செயற்பட வேண்டும். இதற்காக நன்கு திட்டமிடப்பட்ட செயற்பாடுகளை அரசு முன்னெடுக்கவேண்டும். இந்த நிலமைகளை மாற்றுவதற்கு ஒன்றிணைந்து செயற்பட நாம் ஆர்வமாக உள்ளோம் – என்றார். (உ-வ-5)


## மரண அறிவித்தல்

**திருமதி மகேஸ்வரி இரத்தினசபாபதி**

நேற்றைய (10.06.2016) உதயனில்25ஆம் பக்கத்தில் பிரசுரமாகிய மகேஸ்வரி இரத்தினசபாபதியின் மரண அறிவித்தலில் ஸ்காந்தரட்ணா (சிவா - கணக்காளர் - கனடா) மகன் எனும் பெயர் தவறிவிட்டது. சேர்த்து வாசிக்கவும்.

(C 21856),(14,17,18) குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### - நாகலிங்கம் நமசிவாயம்



வீமன்காமம் வடக்கு, வெங்காய சங்கத்தைப் பிறப்பிடமாகவும் சுதுமலை தெற்கு மானிப்பாயை வசிப்பிடமாகவும் கொண்ட நாகலிங்கம் நமசிவாயம் 08.06.2016 புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நாகலிங்கம் - அன்னம்மா தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை - பொன்னு தம்பதிகளின் மருமகனும், நல்லம்மாவின் அன்புக் கணவரும், சூரியபாலாவின் தந்தையும், முருகையா, காசிநாதன், நாகேஸ்வரி, பரமேஸ்வரி (பிரான்ஸ்), திருச்சிற்றம்பலம் (பிரான்ஸ்) ஆகியோரின் சகோதரரும், விமலேஸ்வரி (ஆசிரியை)யின் மாமனாரும், துவாரகனின் தாத்தாவும், காலஞ்சென்ற பூமணி மற்றும் செல்லம்மா, காலஞ்சென்ற கதிர்காமநாதன் மற்றும் அப்புத்துரை (பிரான்ஸ்), பாலா (பிரான்ஸ்) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 09.06.2016 வியாழக்கிழமை பிற்பகல் 3மணியளவில் சுதுமலை தெற்கு, மானிப்பாயில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று கரையம்பிட்டி இந்து மயானத்தில் பூதவுடல் தகனம் செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சுதுமலை தெற்கு,
மானிப்பாய்.
(j/2039)
(11,17,18)
தகவல்:
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 13 | 07 |
| 07 | 06 |
| 1935 | 2016 |

## முருகேசு நடராஜா

(ஓய்வு பெற்ற கணக்காளர் - J / st. John's College)

யாழ்ப்பாணம் அரியாலையை பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணம் இல: 55, சங்கிலியன் வீதி, நல்லூரை வதிவிடமாகவும் கொண்டிருந்த முருகேசு நடராஜா (ஓய்வு பெற்ற கணக்காளர் **J/ st.John's College**) அவர்கள் 07.06.2016 செவ்வாய்க் கிழமையன்று கொழும்பில் காலமானார். அன்னார் காலஞ்சென்ற லீலாவதி நடராஜாவின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான முருகேசு - செல்லம்மா தம்பதியினரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான முத்தையா - கனகம்மா தம்பதியினரின் அன்பு மருமகனும்,நந்தரூபன் ( நோர்வே ), வசந்தரூபன் ( நோர்வே ), ராஜரூபன் ( நோர்வே ), சியாமளா ( லண்டன் ), தனிஸ்ரூபன் ( அவுஸ்திரேலியா), ஆகியோரின் பாசமிகு தந்தையும், ரேணுகா, சுகிர்தா, கிரிஜா, ஜெயராஜ், தர்சினி ஆகியோரின் அன்பு மாமனாரும், நிவேதா, சுவேதா, ஜீனா, ரீனா, நிவீன், கெவீன்,ஷிவோன்,ஷியானு, நித்தோஷ், லிசானா ஆகியோரின் அன்பு பேரனும் காலஞ்சென்ற வீ. பரமேஸ்வரி அவர்களின் அன்புத் தம்பியும், காலஞ்சென்ற வீரசிங்கம்,செல்லத்தம்பி, இராஜதுரை, சுந்தரம்பிள்ளை ஆகியோரின் மைத்துனரும், செ.பவளம், இ.மகேஸ்வரி, சு. கருணாவதி ஆகியோரின் உடன் பிறவா சகோதரனும் ஆவார். அன்னாரின் பூதவுடல் இன்று (11.06.2016)சனிக்கிழமை காலை 9 மணிமுதல் மாலை 6 மணி வரை கல்கிஸ்சை மகிந்த மலர்சாலையில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு நாளை (12.06.2016) ஞாயிற்றுக் கிழமை அவரது இல்லத்தில் (55 சங்கிலியன் வீதி, நல்லூர்) காலை 11 மணியளவில் இறுதிக்கிரியைகள் நடைபெற்று பிற்பகல் 1.30 மணியளவில் செம்மணி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள்,நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

T.P. No :- 011 2714 319 , 077 6053 791 , 076 7472 860 , 077 0233 322

தகவல்: பிள்ளைகள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மரண அறிவித்தல்கள்

### திருமதி சறோஜினிதேவி செல்வரத்தினம்



இலக்கம் 31, கொண்டலடி வீதி நல்லூரைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சறோஜினிதேவி செல்வரத்தினம் நேற்று (10.06.2016) வெள்ளிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நடராஜா-செல்லம்மா தம்பதியரின் மகளும் சங்கரப்பிள்ளை செல்வரத்தினத்தின் அன்பு மனைவியும் கோபிநாத் (இந்தோனேசியா), கோபிநந்தா (ஆஸ்திரேலியா) ஆகியோரின் பாசமிகு தாயாரும் Dr.சிவஞானம், அனித்தா ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

31, கொண்டலடி லேன்,
நல்லூர், யாழ்ப்பாணம்.

தகவல்: குடும்பத்தினர்.
021 222 1551

### இராஜரட்ணம் சிவஞானம்
(ஓய்வு பெற்ற தபால் அதிபர்)




மலேசியாவைப் பிறப்பிடமாகவும் யாழ் மல்லாகத்தை வசிப்பிடமாகவும் இங்கிலாந்தை வசிப்பிடமாகவும் கொண்ட இராஜரட்ணம் சிவஞானம் கடந்த (06.06.2016) திங்கட்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராஜரட்ணம்-நாகம்மா தம்பதியரின் செல்வப் புதல்வனும் காலஞ்சென்றவர்களான அண்ணாமலை - சரஸ்வதி தம்பதிகளின் மருமகனும் தனலக்சுமியின் அன்புக் கணவரும் சிவகௌரி காலஞ்சென்ற நடனகாந்தன் மற் றும் அமுதலோஜினி ஆகியோரின் பாசமிகு தந்தையும் நாகபூசணி காலஞ்சென்ற மகேஸ்வரி மற்றும் செகராஜசிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரரும் சந்திரநாதன், ரஞ்சினி, தவபாலன் ஆகி யோரின் அன்பு மாமனாரும் மகாலிங்கம், பரமேஸ்வரி காலஞ்சென்ற தங்கரத்தினம், காலஞ்சென்ற நாகேஸ் வரி மற்றும் பவளராணி, பாலப்பிரமணியம், தனபாலசிங்கம் (பிரான்ஸ்) ஆகியோ ரின் அன்பு மைத்துனரும் சிவஞானசுந்தரம், சின்னத்துரை, தவராசா ஆகியோரின் சகலரும் ஜெனனி, ஜெனார்த்தன், ஜெதூசன், தரணி, சுஜானி, உஷானி ஆகியோரின் ஆசைப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 13.06.2016 திங்கட்கிழமை லண்டனில் மு.ப 10.00மணி அளவில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
அ.பாலசுப்பிரமணியம் (மைத்துனர்)

### சபாரத்தினம் அருட்செல்வன்
(ஆய்வு கூட உதவியாளர், யா/வேலணை மத்திய கல்லூரி)



அராலி தெற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சபாரத்தினம் அருட்செல்வன் கடந்த (09.06.2016) வியாழக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் சபாரத்தினம் (ஓய்வுபெற்ற ஆசிரியர்) காலஞ்சென்ற இராசபூபதி தம்பதியரின் அன்புப் புதல்வனும் காலஞ்சென்ற இராமலிங்கம் மற்றும் தங்கம்மா தம்பதிகளின் மருமகனும் கலைவாணியின் (ஆசிரியர் யா/மட்டுவில் சந்திரபுர ஸ்கந்தரோதயா மகா வித்தியாலயம்) அன்புக் கண வரும் பிருதிவியின் பாசமிகு தந்தையும் திருமாறன் (லண்டன்), அருள்மாறன் (மேற்பார்வையாளர்-பொது சுகாதாரப் பரிசோதகர்) ஆகியோரின் அன்புச் சகோதரரும் இராஜேஸ்வரி (பிரான்ஸ்), சிவராசா, அற்புதராணி (கொழும்பு), இந்திராணி, பவளராணி (இத்தாலி), ஜெயராணி, மோகனராணி ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (12.06.2016) ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் நண்பகல் 12.00 மணி அளவில் நடைபெற்று பூதவுடல் அராலி பூனாவோடை மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கரைப்பிட்டி பிள்ளையார்
கோயிலடி , அராலி தெற்கு,
வட்டுக்கோட்டை.

தகவல்:
குடும்பத்தினர்.

## கிராம

இது தொடர்பில் எடுக்கப்பட்ட நடவடிக்கைகளை உங்களிடம் வினவுமாறு இராணுவப் பேச்சாளர் தெரிவித்தார். என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது." என்று கேட்டோம். அதற்கு பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி, "ஊடகங்களுக்கு தகவல் வழங்க என்னால் முடியாது. நீங்கள் பொலிஸ் தலைமையகத்துடன் தொடர்பு கொள்ளுங்கள்" என்று பதிலளித்தார். பொலிஸ் தலைமையகத்துடன் தொடர்பு கொண்டு விடயத்தைச் சொன்னோம். இது தொடர்பில் அந்தப் பகுதிக்குப் பொறுப்பான மூத்த பொலிஸ் அத்தியட்சகருடன் தான் தொடர்பு கொள்ள வேண்டும் என்றனர்.

முல்லைத்தீவு மாவட்ட மூத்த பொலிஸ் அத்தியட்சகருடன் தொடர்பு கொண்டு கேட்டபோது, இவ்வாறானதொரு விடயம் தனக்குத் தெரியாது என்று பதில் வழங்கினார். சரி அப்படியானால் இதற்குப் பொறுப்புச் சொல்ல வேண்டியவர்கள் யார் என்று பதில் கேள்வி எழுப்பினோம். அது தனக்குத் தெரியாது என்றார்.

இதன் பின்னர் மீளவும் இராணுவப் பேச்சாளருடன் தொடர்புகொண்டு நிலமையைச் சொன்னோம். தான் கொஸ்கம - சலாவ பகுதியில் பணிப் பளுவுடன் நிற்கிறார் என்றார் இராணுவப் பேச்சாளர். "கொஸ்கமவில் காட்டும் அக்கறையை முல்லைத்தீவு விடயத்தில் காட்டவில்லையே" என்று கேட்டதற்கு," இல்லை, அவ்வாறில்லை. இந்த விடயத்தில் அக்கறை செலுத்துவதனால்தான் உங்களுடன் பேசுகின்றேன்." - என்றார்.

"இந்த விடயம் தொடர்பில் முல்லைத்தீவு இராணுவத் தளபதியினால் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக எனக்கு அறியத் தந்துள்ளார்கள்" என்று குறிப்பிட்டார். என்ன நடவடிக்கைஎடுக்கப்பட்டுள்ளது என்றுகேட்டதற்கு, தெரியவில்லை. நீங்கள் முல்லைத்தீவு மாவட்ட இராணுவத் தளபதியுடன் தொடர்புகொள்ளுங்கள்" என்று தெரிவித்து அவரது செல்பேசி இலக்கத்தையும் இராணுவப் பேச்சாளர் வழங்கினார்.

முல்லைத்தீவு மாவட்ட இராணுவத் தளபதியுடன் தொடர்பு கொண்டோம். "கிராம அலுவலர்கள் தென்பகுதி மீனவர்களால் தாக்கப்பட்டு, இராணுவத்தினரால் அச்சுறுத்தப்பட்டிருந்தனர். இது தொடர்பில் என்ன நடவடிக்கை எடுத்துள்ளீர்கள்" என்று கேட்டதற்கு, "பொதுமக்களுக்கு எதிராக இராணுவம் நடவடிக்கை எடுக்க முடியாது" என்றார். "பொதுமக்க ளுக்கு எதிராக அல்ல, அச்சுறுத்திய இராணுவத்தினருக்கு எதிராக என்ன நடவடிக்கை எடுத்தீர்கள்" என்று கேட்டதற்கு, மீளவும் "பொதுமக்களுக்கு எதிராக இராணுவம் நடவடிக்கை எடுக்க முடியாது" என்றார்.

"இராணுவத்தினருக்கு எதிராக என்ன நடவடிக்கை எடுத்துள்ளீர்கள்" என்று கேட்டதற்கு, "இராணுவத்தினர் தவறிழைத்திருந்தால் நடவடிக்கை எடுக்கலாம்" என்றார். "சரி! என்ன நடவடிக்கை எடுக்கப் போகின்றீர்கள்" என்று வினவியதற்கு, "அதனை இராணுவப் பேச்சாளரிடம் கேளுங்கள்" என்று குறிப்பிட்டார்.

இராணுவப் பேச்சாளரிடம் மீண்டும் அழைப்பை ஏற்படுத்தி, முல்லைத்தீவு மாவட்ட இராணுவத் தளபதி நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்கின்றாரே என்று கேட்டதற்கு, "இப்போதும் விசாரணை நடந்து கொண்டிருக்கின்றது. விசாரணை இறுதிக் கட்டத்தை அடைந்திருக்கின்றது" என்று பதில் வழங்கினார்.

ஏப்ரல் மாதம் 24ஆம் திகதி இராணுவப் பேச்சாளருடன் உதயன் தொடர்பு கொண்டிருந்தது. அப்போது பதிலளித்த இராணுவப் பேச்சாளர், முல்லைத்தீவுச் சம்பவம் தொடர்பாக இராணுவப் பொலிஸாரின் விசாரணை இடம்பெற்று கொண்டிருக்கின்றது என்றும், 25ஆம் திகதி ஏப்ரல் மாதம் அதன் அறிக்கை வெளியிடப்படும் என்றும் தெரிவித்திருந்தார்.

**பின்னணி**

ஏப்ரல் மாதம் 10ஆம் திகதி கொக்குத்தொடுவாய் வடக்கு புலிபாய்ந்த கல் என்ற இடத்தில் அத்துமீறிய சிங்கள மீனவர்கள் தொடர்பிலான முறைப்பாட்டை, கிராம அலுவலர்கள் இருவர் விசாரிக்கச் சென்றனர். அப்போது அங்கிருந்த சிங்கள மீனவர்களால் கிராம அலுவலர் ஒருவர் தாக்கப்பட்டார் என்று பொலிஸில் முறையிடப்பட்டது. அத்துடன் அந்த இடத்துக்கு சிங்கள மீனவர்களால் 593 ஆவது பிரிகேட் தளபதி வரவழைக்கப்பட்டார் எனவும், அங்கு வந்த இராணுவத்தினர் கிராம அலுவலர்களின் அடையாள அட்டையைப் பறித்து, அவர்களது கடமைக்கு இடையூறு விளைவிக்கும் வகையில் அச்சுறுத்தினர் என்றும் முறைப்பாடு தெரிவிக்கப்பட்டிருந்தது என்பது குறிப்பிடத்தக்கது. (உ-வ-5-ரி4)

## மரண அறிவித்தல்கள்

### திருமதி தெய்வநாயகி வேலாயுதம்

பிறப்பு
06.05.1939

இறப்பு
10.06.2016



யாழ் அளவெட்டி மேற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி தெய்வநாயகி வேலாயுதம் நேற்று (10.06.2016) வெள்ளிக்கிழமை காலமாகி விட்டார்.


அன்னார் வேலாயுதத்தின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான சின்னப்பு-ஆச்சிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான இராசநாய கம்-இரத்தினம் தம்பதிகளின் மருமகளும் காலஞ்சென்ற திவாகரன் மற்றும் பகீதரன், (U.K),யெனார்தன் (தாதிய உத்தியோகத்தர் ஆ.வை.தெல்லிப்பழை) , நாவலன் (U.K) ஆகியோரின் அன்புத் தாயாரும் காலஞ்சென்றவர்களான உத்தமிப்பிள்ளை, அன்னம், சேனாதிராஜா, பாலசுப்பிரமணியம் ஆகியோரின் பாசமிகு சகோதரியும் கிஷாந் தினி, வசந்தகுமாரி ஆகியோரின் அன்பு மாமியாரும் அஸ்மிதா, கவின், கரிஷன், தரணிகா, அஸ்விகா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (12.06. 2016) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக மல்லாகம் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தொடர்புகளுக்கு:
வேலாயுதம்- 021 790 0358
பகீதரன் -0094776064814
யெனார்தன்- 077 610 9143
நாவலன் -0094765413304

தகவல்:
குடும்பத்தினர்.

### சட்டநாதர் சதாசிவம்



கந்தரோடையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சட்டநாதர் சதாசிவம் நேற்று (10.06.2016) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சட்டநாதர்-சோதிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான ராசா-பொன்னம்மா தம்பதியரின் அன்பு மருமகனும் பூமணியின் அன்புக் கணவரும் சாந்தகுமாரி, சத்தியசீலன் (டென்மார்க்), ராஜ்குமார் (சுவிஸ்), வசந்தகுமாரி, ஜெயசீலன் (சுவிஸ்), ஜெயக்குமார்(நவம்) ஆகியோரின் அன்புத் தந்தையும் காலஞ்சென்ற செல்லையா மற்றும் மகேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரனும் காங்கேசு, ரோகினி (டென்மார்க்), சிறிவசந்தாதேவி(சுவிஸ்), காலஞ்சென்ற ஜெயமனோகரன் மற்றும் சுதர்ஷினி(சுவிஸ்), பாமாவதி ஆகியோரின் அன்பு மாமனாரும் நிதுஷா, சாரணிக்கா, விதுலன், அஜீவனா, அஜீதன், ஜெயந்தன்-யசிலா, ஜெயரூபி-தனேஸ்குமார், ஜெயசுதன், ஈழவன், ஈழநிலா, ஈழப்பிரியா, கர்ணிகா, தக்ஷயன், டக்சியா ஆகியோரின் அன்புப் பேரனும் சபிராவின் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை(12.06.2016) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் கற்பொக்குனை கந்தரோடையில் அமைந்துள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சங்கம் புலவு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

கற்பொக்குனை,
கந்தரோடை.

தகவல்: குடும்பத்தினர்.
பூமணி (மனைவி)

சத்தியசீலன் (டென்மார்க்)- 075 7236557
ராஜ்குமார் (சுவிஸ்)-0041523430711
ஜெயசீலன் (சுவிஸ்)- 0041766755312
ஜெயக்குமார் (நவம்) 0777299202
சாந்தகுமாரி, வசந்தகுமாரி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இலங்கை

கள் ஆணையாளருடன் பேச்சு நடத்தியதாக ஸூவையர் தமது ருவிட்டர் தளத்தில் பதிவிட்டுள்ளார்.

அத்துடன், ஜெனிவாவில் உள்ள இலங்கைக்கான ஐ.நாவின் வதிவிடப் பிரதிநிதி, ரவிநாத் ஆரியசிங்கவையும், பிரிட்டன் வெளிவிவகார இணை அமைச்சர் ஸூவையர் சந்தித்துப் பேச்சு நடத்தியுள்ளார்.

இதன்போது, இலங்கையின் மனித உரிமைகள் தொடர்பான பொறுப்புக்கூறல் மற்றும் நல்லிணக்க முயற் சிகளின் முன்னேற்றங்கள் தொடர்பாகக் கலந்துரையா டியதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (த-வ-5)

## இனிப்பை

குறித்த பாடசாலையில் கற்பிக்கும் ஆசிரியர் ஒருவரே இந்த மாணவர்களைச் சிகிச்சைக்காக வைத்தியசாலையில் சேர்த்தார் எனச் சாட்சிகள் தெரிவித்தனர்.

பாடசாலையில் இனிப்பு போன்ற தொரு பண்டத்தை இவர்கள் உண்டதாகவும் இதையடுத்து ஏற்பட்ட மோதலில் காயமடைந்தே இந்த நான்கு மாணவர்களும் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டதாகவும் கூறப்பட்டது.

குறித்த இனிப்புப் போன்றதொரு பண்டத்தை குறித்த பாடசாலை மாணவிகள் சிலரும் உட்கொண்டதாகவும் அவர்களைப் பெற்றோர் உடனடியாக தமது வீடுகளுக்கு அழைத்துச் சென்றதாகவும் மேலும் தெரியவந்தது.

குறித்த இனிப்புப் பண்டம் போதைப் பொருளாக இருக்கலாம் என்று சந்தேகம் வெளியிடப்பட்டுள்ளது. (த-வ-ரி)

## ஜங்கரநேசனின்

ருந்தேன். அந்தச் சமயம் அவர் யாழ்ப்பாணம் வந்திருந்தார். வடக்கு மாகாண சபைக்குள் முரண்பாடுகள் இருக்கக் கூடாது என்ற கொள்கையை உடையவர் சம்பந்தன். இதனை அவர் ஆணித்தரமாகவும் எடுத்துரைத்துள்ளார். அந்த அடிப்படையில்தான் இப்பேற்பட்ட விடயங்களை கைவிட்டுள் ளனர் என நம்புகின்றேன். அவர்கள் ஒன்றை மனதில் வைத்திருக்கவேண்டும், எவர் தொடர்பிலும் எந்த குற்றச்சாட்டையும் கூறுங்கள்; நடவடிக்கை எடுப்பேன். 38 பேரும் கை உயர்த்தி ஒருவரைக் குற்றவாளி எனக் கூறினாலும் அவர் குற்றவாளி ஆகமுடியாது. கை உயர்த்திக் குற்றவாளி ஆக்கவேண்டாம்.

இவை தொடர்பில் சில நேரடியான முடிவுகளை எடுக்கலாம். சிலவற்றுக்குக் கட்சி ரீதியில்தான் முடிவு எடுக்கவேண்டும். இதற்கு கட்சி ரீதியில் முடிவு எடுக்கப்பட்டுள்ளது. அதில் முன்னேற்றமும் காணப்பட்டுள்ளது – என்றார்.

(த-வ -101)

**மைத்திரி**
ஐயாட்சியின் போது இந்தக் கருத்து வெளியிடப்பட்டுள்ளது.
அமெரிக்க - இலங்கை உறவுகளில் மகிந்த ராஜபக்ச ஆட்சிக்காலம் பாதகமான விளைவுகளை ஏற்படுத்தியிருந்தது. கடந்த ஆண்டு ஜனவரி 8ஆம் திகதிக்குப் பின்னர், இலங்கையின் நிலைமைகள் முன்னேற்றம் அடைந்திருந்தன. இவ்வாறு அமெரிக்க காங்கிரசின் வெளியுறவுக் குழுத் தலைவர், மாட் சால்மன் தெரிவித்தார்.
2015 ஜனவரி 8ஆம் திகதிக்குப் பின்னரும், இலங்கையில் சில கவலைக்குரிய விடயங்கள் தொடர்கின்றன. பொறுப்புக் கூறலுக்கான உள்நாட்டு விசாரணைப் பொறிமுறையில் வெளிநாட்டு நீதிபதிகளை உள்ளடக்கத் தவறியுள்ளதும் அதில் அடங்கும்.
சீனாவுடனான இலங்கையின் உறவுகள் குறித்தும் கவலை அடைகின்றோம். சீனாவின் நிதியில் கொழும்பில் துறைமுக நகர கட்டுமானத் திட்டம் இடம்பெறுவது குறித்தும் கரிசனை கொள்கின்றோம் - இவ்வாறு மாட் சால்மன் குறிப்பிட்டுள்ளார். (வ-5)

## கண்ணீர் அஞ்சலி



பிறப்பு: 03.05.2011 இறப்பு: 09.16.2016
**திருமதி. பிரபாவதி தேயுராஜின்**
அன்பு மகன்
**தேயுராஜ் கீதப்பிரியனின்**
மறைவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய நாமும் பிரார்த்திக்கின்றோம்.

**பாடசாலைச் சமூகம்**
**யா/மானிப்பாய் மகளிர் கல்லூரி.**

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

**வேலையா சுரேஸ்**

பிறப்பு 29.10.1978
இறப்பு 25.05.2015



கண்ணீர் பிரவாகத்தில் தவிக்கவிட்டு
ஓராண்டாய் சென்றுவிட்டாய்
வேர் அறுந்த விருட்சமாய்
விழுது இழந்து தவிக்கின்றோம்
எமை உங்களில் பாசம் வைத்து
அழைத்து விட்டான்-நாங்களோ
ஏது செய்வது என்று தெரியாமல் தவிக்கின்றோம்.

குமாரசாமி வீதி,
புத்தூர் கிழக்கு புத்தூர்.

குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### திருமதி புவனேஸ்வரி லோகநாதன்

**(சிரேஷ்ட விரிவுரையாளர் உயிரியல்துறை,**
**பிரயோக விஞ்ஞான பீடம் - வவுனியா வளாகம்)**

**மலர்வு**
**16.05.1962**

**உதிர்வு**
**10.06.2016**

மானிப்பாய், சுதுமலை வடக்கைப் பிறப்பிடமாகவும் வவுனியாவை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி புவனேஸ்வரி லோகநாதன் நேற்று (10.06.2016) வெள்ளிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (12.06.2016) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு அவரின் இல்லமான இல.25, வைத்தியசாலை சுற்றுவட்ட வீதி, வவுனியாவில் நடைபெற்று பூதவுடல் பூந்தோட்டம் பொதுமயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்:**
**இராமநாதன் லோகநாதன் -கணவர்**
(V.V.Ramanathan & Co Pvt Ltd
(Constructions Company)

No.25, Hospital Circular Rd,
Vavuniya.

(V/45)
(11,17,18)

**077 617 4009**

## வீட்டுக்கிருத்திய அழைப்பு

அன்னை மடியில
17 . 08 . 1948



ஆண்டவன் அடியில்
12 . 05 . 2016

### அமரர் கதிராமு பத்மநாதன்


கடந்த 12.05.2016 வியாழக்கிழமை இறைவனடி சேர்ந்த எமது குடும்பத்தலைவர் அவர்களின் வீட்டுக்கிருத்திய கிரியைகள் இன்று (11.06.2016) சனிக்கிழமை மு.ப 11.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெறும். அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

டச்சு றோட்,
சாவகச்சேரி.

குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### நாகலிங்கம் இராசையா



யாழ் ஏழாலை வடக்கைப் பிறப்பிடமாகவும் தையிட்டி காங்கேசன் துறையை வசிப்பிடமாகவும் தற்போது 4ஆம் ஒழுங்கை சாந்தசோலை வீதி, பூந்தோட்டம், வவுனியாவை வதிவிடமாகவும் கொண்ட நாகலிங்கம் இராசையா நேற்று (10.06.2016) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நாகலிங்கம்-பூதாத்தை தம்பதிகளின் அருமை மகனும் காலஞ்சென்றவர்களான சரவணமுத்து-பொன்னுப்பிள்ளை தம்பதிகளின் பாசமிகு மருமகனும் காலஞ்சென்ற விஜயலக்சுமியின் அன்புக் கணவரும் அவணிகா (கனடா),தேவிகா(கனடா),வரதகரன்(வவுனியா),அபயகரன்(கனடா), றூபிகா (கனடா), விஜயகரன்(கனடா), ராதிகா (சுவிஸ்), கரிகரன் (வவுனியா) ஆகியோரின் பாசமிகு தந்தையும் ஈஸ்வரன்(கனடா), பாலகிருஷ்ணன்(கனடா), தவநிதி (வவுனியா), றூபினி(கனடா), உதயகுமார்(கனடா), சுமதி(கனடா), ஸ்ரீதரன் (சுவிஸ்), பாக்கியலட்சுமி (ஆசிரியை வ/ஓமந்தை மத்திய கல்லூரி) ஆகியோரின் பாசமிகு மாமனாரும் சிவகணன், பிரணவன், லக்ஷனி, லக்ஷன், லாவினி, விஜயனன், தவகுனன், லாவணன், கோபிஷன், கௌரிஷா, ஹபினா, அபிஷன், ஹரினி,ஹரிஷி, ஹிரானி ஆகியோரின் பாசமிகு பேரனும் நாதானியலின் பூட்டனும் காலஞ்சென்றவர்களான குட்டித்தம்பி, சின்னத்துரை, தங்கராசா மற்றும் பூரணம், தவமணி ஆகியோரின் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (12.06.2016) ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பி.ப ஒரு மணியளவில் பூந்தோட்டம் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.


**தகவல்: குடும்பத்தினர்**
**077 3750663, 077 3287023**

## மரண அறிவித்தல்

### செல்வரத்தினம் குகநாதன் (சோமு)

(ஓய்வுபெற்ற யாழ்.பல்கலைக்கழக ஊழியர்)

**தோற்றம்**
13 . 09 . 1954



**உதிர்வு**
09 . 06 . 2016

ஊரெழு பிள்ளையார் கோயிலடியைப் பிறப்பிடமாகவும் பண்டத்தரிப்பு காலையடியை வசிப்பிடமாகவும் கொண்ட செல்வரத்தினம் குகநாதன் 09.06.2016 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்வரத்தினம் - பவானி அம்மா தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான நாகலிங்கம் - செல்லாச்சி தம்பதிகளின் அன்பு மருமகனும், இராஜமலரின் பாசமிகு கணவரும், யாழினியின் (கனடா) அன்புத் தந்தையும், சுதாஸ்கரனின் (கனடா) அன்பு மாமனாரும்,மகிஷனின் அன்புப் பேரனும், காலஞ்சென்ற கமலாதேவி மற்றும் ஸ்ரீஸ்கந்தராஜா, சண்முகராஜா, சரோஜினிதேவி, காலஞ்சென்ற சகுந்தலாதேவி ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (12.06.2016) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக மாதகல் தம்பின்துறை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

வடலியடைப்பு, காலையடி,
பண்டத்தரிப்பு.
(11,17,18)

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

**077 869 1665 - ஷங்கர்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிர்ணயத்தில் ஈடுபட்டால் ஆயுள் தடை வேண்டும்

## குக் வலியுறுத்து

ஆட்ட நிர்ணயச் சூதாட்டத்தில் ஈடுபடும் கிரிக்கெட் வீரர்களுக்கு ஆயுள் காலத் தடை விதிக்கப்பட வேண்டும் என்று இங்கிலாந்தின் டெஸ்ட் அணிக்கான தலைவர் குக் வலியுறுத்தியுள்ளார்.

2010ஆம் ஆண்டு லோட்ஸில் நடைபெற்றடெஸ்ட் ஆட்டமொன்றில் இங்கிலாந்தை எதிர்கொண்டது பாகிஸ்தான். இந்த ஆட்டத்தில் ஆட்ட நிர்ணயச் சூதாட்டத்தில் ஈடுபட்ட பாகிஸ்தான் வீரர்களான சல்மான் பட், மொகமட் ஆசிப், மொகமட் ஆமிர் ஆகியோருக்குத் தடைகளும் சிறைத் தண்டனைகளும் வழங்கப்பட்டன. அந்த மூவரில் மொகமட் ஆமிர், இங்கிலாந்துக்கு எதிராக இன்னும் சில வாரங்களில் இடம்பெறவுள்ள டெஸ்ட் தொடருக்கான பாகிஸ்தான் குழாமில் சேர்க்கப்பட்டுள்ளார். இத்தகையதொரு பின்னணியில் குக்கின் கருத்து வெளிப்பட்டுள்ளதால் குறித்த தொடருக்கான வார்த்தை மோதல் ஆரம்பித்துவிட்டாதாகவே கருதப்படுகிறது.

நிர்ணயத்தில் வீரர்கள் ஈடுபடுவது கண்டுபிடிக்கப்பட்டால், ஆயுளுக்கும் அவர்கள் தடை செய்யப்பட வேண்டும். விளையாட்டின் நற்பெயரைப் பாதுகாக்க வேண்டுமென்பதால், தண்டனையென்பது கடுமையாக இருக்கவேண்டும். விட்டுக் கொடுப்புக்கள் இருக்கக்கூடாது. ஊக்கமருந்து விவகாரத்திலும் இத்தகைய ஓர் இறுக்கமான நிலைப்பாட்டையே ஐ.சி.சி. பேணவேண்டும் என குக் மேலும் தெரிவித்தார். (ம)




# காலிறுதியில் வெனிசுலா உருகுவே வெளியேற்றம்






கோப்பா அமெரிக்கா கால்பந்து தொடரில் வலுவான உருகுவே அணியை வீழ்த்தி காலிறுதிக்குத் தகுதி பெற்றது வெனிசுலா. இந்தத் தோல்வியால் உருகுவே தொடரிலிருந்து வெளியேற்றப்பட்டுள்ளது.

இந்த ஆட்டத்தில் வெற்றிபெறும் அணி காலிறுதிக்குத் தகுதி பெறும். எனவே ஆட்டத்தில் பார்வையாளர்களுக்குப் பஞ்சம் இருக்கவில்லை. பெரிய கால்பந்தாட்ட அரங்கங்களில் ஒன்றான அமெரிக்காவின் பிலடெல்பியா அரங்கில் கிட்டத்தட்ட 85ஆயிரம் ரசிகர்களுடன் ஆட்டம் ஆரம்பமானது. 36ஆவது நிமிடத்தில்மைதானத்தில் மத்திய பகுதியில் நின்று பந்தைப் பெற்ற ரொன்டொன் உருகுவேயின் தடுப்புக்களை அபாரமாக உடைத்து முதல் கோலைப் பதிவுசெய்தார். மாற்றங்கள் இல்லாமல் முடிவுக்கு வந்தது முதல் பாதி. ஆதிக்கத்தைத் தொடரவேண்டும் என்ற முனைப்பில் வெனிசுலா. பதிலடி கொடுக்கும் முனைப்பில் உருகுவே. ஆரம்பமானது இரண்டாம் பாதி. பந்துடன் இணைந்து நிமிடங்களும் உருண்டோட படிப்படியாக வெனிசுலாவின் வெற்றி உறுதியாகிக் கொண்டிருந்தது. மாற்றங்கள் ஏதும் ஏற்படாத முடிவில் 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது வெனிசுலா. (ம)

# கோக்லியையும் சச்சினையும் ஒப்பிட மறுக்கும் முரளிதரன்

இந்திய டெஸ்ட் அணியின் தலைவரான கோக்லி போர்முக்கு வந்தாலும் வந்தார், கோக்லியா? சச்சினா? என்ற விவாதங்கள் பலம் பெற ஆரம்பித்துவிட்டன. சிலர் சச்சினின் சாதனைகள் கோக்லியால் முறியடிக்கப்படும் என்று அழுத்தம் திருத்தமாகச் சொல்கின்றனர். ஆனால் அவர்கள் இருவரையும் ஒப்பிடுவது முறையல்ல என்று தெரிவித்துள்ளார் முரளி.

கோக்லி தற்போது முழுப் போர்மில் இருக்கிறார். அவர் உலகின் ஆகச்சிறந்த துடுப்பாட்ட வீரர்களில் ஒருவர் என்பதில் மாற்றுக் கருத்துக்களுக்கு இடமில்லை. கோக்லிக்கு பந்துவீசுவது என்றால் யோசித்துத்தான் வீசவேண்டும். ஆனால் அவர்கள் இருவரையும் ஒப்பிடுவது முறையல்ல. சச்சின் கோக்லிக்கு கற்றுக் கொடுத்தவர். 100 சதங்களைப் பதிவுசெய்துள்ள சச்சினுடன் கோக்லியை எந்த வகையில் ஒப்பிட முடியும். இந்த ஒப்பிடலுக்கு கோக்லி இன்னும் அதிகம் கற்க வேண்டும். குறைந்தது 10 வருடங்களாவது விளையாட வேண்டும் என முரளி மேலும் தெரிவித்தார். (ம)

## மாகாண மட்ட சதுரங்கத் தொடர்

யாழ்ப்பாணம், ஜூன் 11

வடமாகாண பாடசாலைகளுக்கு இடையிலான மாகாண மட்ட சதுரங்கத் தொடர் இன்று ஆரம்பமாகிறது

யாழ். இந்து மகளிர் கல்லூரியில் இன்றும், நாளையும் 15 வயது, 19 வயது ஆண்கள் பிரிவு அணிகளுக்கு இடையிலான போட்டிகள் நடைபெறவுள்ளன. (ம-23-108)

# காமாட்சி வி.கழகம் சம்பியனானது புலோலியின் துடுப்பாட்டத் தொடரில்




கரணவாய், ஜூன் 11

புலோலி இளைஞர் விளையாட்டுக் கழகம் நடத்திய துடுப்பாட்டத் தொடரில் 63 ஓட்டங்களால் வெற்றி பெற்று கிண்ணத்தைச் சுவீகரித்தது கொக்குவில் காமாட்சி விளையாட்டுக் கழகம்.

புலோலி இளைஞர் விளையாட்டுக்கழகம் யாழ். மாவட்ட ரீதியாக நடத்திய 15 பந்துப் பரிமாற்றங்களைக் கொண்ட துடுப்பாட்டத் தொடரின் இறுதியாட்டத்தில் மல்லாகம் சிறிமுருகன் விளையாட்டுக் கழகமும் கொக்குவில் காமாட்சி விளையாட்டுக்கழகமும் புற்றளை மாவில் விளையாட்டு கழக மைதானத்தில் அண்மையில் பலப்பரீட்சை நடத்தின. நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற காமாட்சி அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்து நிர்ணயிக்கப்பட்ட 15 பந்துப்பரிமாற்றங்கள் நிறைவில் 8 இலக்குகளை இழந்து 94 ஓட்டங்களைப் பெற்றது. அதிகபட்சமாக மகிழன் 34 ஓட்டங்களைப் பெற்றார்.

95 ஓட்டங்களை இலக்காகக் கொண்டு களமிறங்கிய மல்லாகம் சிறிமுருகன் அணி 31 ஓட்டங்களுக்கு அனைத்து இலக்குகளையும் பறிகொடுத்தது. இதனால் காமாட்சி அணி 63 ஓட்டங்களால் கிண்ணத்தைத் தனதாக்கியது. பந்துவீச்சில் அருண் 4 இலக்குகளைக் கைப்பற்றினார். இவரே ஆட்டநாயகனாகவும் தெரிவானார். தொடராட்ட நாயகனாக மல்லாகம் சிறிமுருகன் அணியின் மகிழன் தெரிவானார். (ம-108)

# அம்பன் அணி கிண்ணம் வென்றது



கரணவாய், ஜூன் 11

புலோலி இளைஞர் விளையாட்டுக்கழகம் நடத்திய 18 வயதுக்கு உட்பட்டவர்களுக்கான துடுப்பாட்டத் தொடரில் அம்பன் அணி சம்பியனானது.

9 வீரர்கள் பங்குபற்றும் 6 பந்துப் பரிமாற்றங்கள் கொண்ட இந்தத் தொடரின் இறுதியாட்டம் புற்றளை மாவில் விளையாட்டு மைதானத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றது. சிற்றி ஸ்போட்ஸ் அணியும் அம்பன் அணியும் மோதிய இந்த ஆட்டத்தில், நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய சிற்றி ஸ்போட்ஸ் அணி 6 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் 5 இலக்குகளை இழந்து 35 ஓட்டங்களைப் பெற்றது. அதிகபட்சமாக சுஜித் 21 ஓட்டங்களைப் பெற்றார். 36 ஓட்டங்களை இலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய அம்பன் அணி 2.3 பந்துப்பரிமாற்றங்களில் இலக்குகள் இழப்பின்றி வெற்றிபெற்று சம்பியனானது. அதிகபட்சமாக தனுசன் 32 ஓட்டங்களைப் பெற்றார். அவரே ஆட்டநாயகனாகவும் தெரிவானார். (ம-108)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐக்கியம் அன்ரனிஸ் அணிகள் வென்றன

யாழ்ப்பாணம், ஜூன் 11
அரியாலை சனசமூக நிலையத்தால் நடத்தப்பட்டு வரும் கால்பந்தாட்டத் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டங்களில் ஐக்கியம், சென். அன்ரனிஸ் அணிகள் வெற்றிபெற்றுள்ளன.
அரியாலை கால்பந்தாட்ட பயிற்சி நிலைய மைதானத்தில் பிற்பகல் 3.30 மணிக்கு நடைபெற்ற முதலா வது ஆட்டத்தில் யாழ். ஐக்கிய அணியை எதிர்த்து ஒலிம்பியன் அணி மோதியது. இதில் ஐக்கிய அணி 3:2 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. தொடர்ந்து மாலை 4.30 மணிக்கு இடம்பெற்ற இரண்டாவது ஆட்டத்தில் வதிரி டயமன்ஸ் அணியை எதிர்த்து மணற்காடு சென். அன்ரனிஸ் அணி பலப்பரீட்சை நடத்தியது. இதில் மணற்காடு சென். அன்ரனிஸ் அணி 5:2 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது. (ம-23)



# யாழ். மத்தி கிண்ணம் வென்றது மானிப்பாய் இந்துவை வீழ்த்தி

யாழ்ப்பாணம், ஜூன் 11
யாழ். மாவட்ட பாடசாலைகளின் துடுப்பாட்டச் சங்கம் நடத்திய தொடரில் யாழ். மத்திய கல்லூரி அணி சம்பியனானது.
நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்ற மத்திய கல்லூரி களத்தடுப்பைத் தெரிவுசெய்தது. இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய மானிப்பாய் இந்துக் கல்லூரி அணி நிர்ணயிக்கப்பட்ட 20 பந்துப்பரிமாற்றங்கள் நிறைவில் 8 இலக்குகளை இழந்து 138 ஓட்டங்களைப் பெற்றது. அதிகபட்சமாக நிரோச்குமார் 49 ஓட்டங்களையும் கஜன் 24 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் மத்திய கல்லூரியின் சார்பாக அலன்ராஜ், தீபன்ராஜ் இருவரும் தலா இரு இலக்குகளையும், தசோபன், பிரியலக்சன், கிருபாகரன் மூவரும் தலா ஓர் இலக்கையும் வீழ்த்தினர்.
120 பந்துகளில் 139 ஓட்டங்களை இலக்காகக் கொண்டு பதிலுக்குக் களமிறங்கிய யாழ். மத்திய கல்லூரி அணி 19 பந்துப் பரிமாற்றங்களில் 8 இலக்குகளை இழந்து இலக்கை அடைந்தது. அதிகபட்சமாக கார்த்தீபன் 42 ஓட்டங்களையும் கௌதமன் 27 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் மானிப்பாய் இந்துக் கல்லூரியின் சார்பில் டிலக்சன் இரு இலக்குகளையும், சஜித், சசிகரன், நிரோச்குமார் மூவரும் தலா ஓர் இலக்கையும் கைப்பற்றினர்.
சிறந்த பந்துவீச்சாளராக மத்தியின் அலன்ராஜ், சிறந்த துடுப்பாட்ட வீரராக மானிப்பாய் இந்துவின் நிரோச்குமார், சிறந்த களத்தடுப்பாளராக மானிப்பாய் இந்துவின் லகிசன், ஆட்டநாயகனாக மத்தியின் கார்த்தீபன் ஆகியோர் தெரிவானார்கள். (ம-23)

# இன்றைய மோதல்கள்

யாழ்ப்பாணம், ஜூன் 11

**மன்னார் கிரிக்கெட் சங்கத்தின் தொடர்**

மன்னார் கிரிக்கெட் சங்கம் நடத்தும் துடுப்பாட்டத் தொடரில் அடம்பன் பிரதேச சபை மைதானத்தில் இன்று காலை 9.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் சென். மைக்கல் அணியை எதிர்த்து சென். நீக்கிலஸ் அணி மோதவுள்ளது. மடு பிரதேச சபை மைதானத்தில் காலை 9.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் கிறீன்பீல்ட் அணியை எதிர்த்து சித்தி விநாயகர் அணி மோதவுள்ளது.

**சரஸ்வதி சனசமூக நிலையத்தின் தொடர்**

அரியாலை சரஸ்வதி சனசமூக நிலையத்தால் நடத்தப்பட்டுவரும் கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் அரியாலை கால்பந்தாட்ட பயிற்சி நிலைய மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று பிற்பகல் 3.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் வீனஸ் அணியை எதிர்த்து சென். சேவியர் அணி மோதவுள்ளது. தொடர்ந்து மாலை 4.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் மெலிஞ்சிமுனை இருதயராஜா அணியை எதிர்த்து ஆனைக்கோட்டை யூனியன் அணி மோதவுள்ளது.

**கழுகுகளின் கால்பந்தாட்டம்**

நெற்கொழு கழுகுகள் விளையாட்டுக் கழகம் வடமாகாண ரீதியாக நடத்திவரும் கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் குறித்த கழகத்தின் மைதானத்திலேயே இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று சனிக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் மன்னார் விடத்தல்தீவு அணியை எதிர்த்து வல்வை ஆதி சக்தி அணி மோதவுள்ளது. (ம-23-108)

# மாகாண வலைப்பந்தாட்டம் காலிறுதியாட்டங்கள் இன்று

யாழ்ப்பாணம், ஜூன் 11
வடமாகாண பாடசாலைகளுக்கு இடையிலான 15வயது, 17 வயது, 19 வயது பெண்கள் பிரிவினருக்கான வலைப்பந்தாட்டத் தொடரின் காலிறுதியாட்டங்கள் தெல்லிப்பழை யூனியன் கல்லூரி மைதானத்தில் இன்று நடைபெறவுள்ளன.
15 வயதுப் பிரிவினருக்கான காலிறுதிகளில், முதலாவதில் அராலி சரஸ்வதி மகா வித்தியாலய அணியை எதிர்த்து வவுனியா நெளுக்குளம் கலைமகள் வித்தியாலய அணியும் இரண்டாவதில், இடைக்காடு மகா வித்தியாலய அணியை எதிர்த்து வட இந்து மகளிர் கல்லூரி அணியும் மூன்றாவது காலிறுதியில் சுண்டுக்குழி மகளிர் கல்லூரி அணியை எதிர்த்து மீசாலை வீரசிங்கம் மகா வித்தியாலய அணியும் நான்காவது காலிறுதியில் வவுனியா சைவப்பிரகாச அணியை எதிர்த்து தெல்லிப்பழை யூனியன் கல்லூரி அணியும் மோதவுள்ளன.
17 வயதுப் பிரிவினருக்கான காலிறுதியாட்டங்களில் முதலாவதில் கொக்குவில் இந்துக் கல்லூரி அணியை எதிர்த்து வட இந்து மகளிர் கல்லூரி அணியும் இரண்டாவது காலிறுதியில் அராலி சரஸ்வதி மகா வித்தியாலய அணியை எதிர்த்து மன்னார் சென். ஜோசப் மகா வித்தியாலய அணியும் மூன்றாவது காலிறுதியில் தெல்லிப்பழை யூனியன் கல்லூரி அணியை எதிர்த்து மன்னார் ஆண்டான்குளம் மகா வித்தியாலய அணியும் நான்காவது காலிறுதியில் கிளிநொச்சி மகா வித்தியாலய அணியை எதிர்த்து மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை அணியும் மோதவுள்ளன.
19 வயதுப் பிரிவினருக்கான காலிறுதியாட்டங்களில் முதலாவதில் பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை அணியை எதிர்த்து சுண்டுக்குழி மகளிர் கல்லூரி அணியும் இரண்டாவதில் மன்னார் சென். சேவியர் அணியை எதிர்த்து சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி அணியும் மூன்றாவதில் மன்னார் சென். ஆன்ஸ் அணியை எதிர்த்து யாழ். இந்து மகளிர் கல்லூரி அணியும் நான்காவது காலிறுதியில் மன்னார் சென். ஜோசப் மகா வித்தியாலய அணியை எதிர்த்து சுழிபுரம் விக்டோரியா கல்லூரி அணியும் மோதவுள்ளன. (ம-422)

# விளையாட்டு விழா

யாழ்ப்பாணம், ஜூன் 11
லிற்றில் மாஸ்டர்ஸ் மொன்டிசூரியின் வருடாந்த விளையாட்டு விழா நாளை பாடசாலை மைதானத்தில் நடை பெறவுள்ளது. கி.சதீஸ்குமாரின் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக வலிகாமம் கல்வி வலய ஆரம்பப் பிரிவு உதவிக்கல்விப் பணிப்பாளர் றூபா உதயரட்ணம் கலந்து கொள்ளவுள்ளார். (ம)

# இந்திய பயிற்சியாளர் விவகாரம்; கிலஸ்பி மறுப்பு

இந்திய அணியின் பயிற்சியாளர் பதவிக்கு ஆஸ்திரேலியாவின் முன்னாள் வீரரான கிலஸ்பி விண்ணப்பித்துள்ளார் என்று தகவல்கள் வெளியாகியிருந்த நிலையில் அவற்றை அவர் மறுத்துள்ளார்.
இந்திய அணியின் பயிற்சியாளர் பதவிக்கு நான் விண்ணப்பிக்கவில்லை. ஆனால் இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச்சபை ஓர் சிறந்த பயிற்றுணரைத் தெரிவுசெய்யவும் வாழ்த்துக்கள் என அவர் தனது டுவிட்டர் பக்கத்தில் குறிப்பிட்டுள்ளார். (ம)

# மன்னார் கால்பந்தாட்ட சங்கத்துக்கு எதிராக லூசியஸின் ஆதரவாளர்களால் போராட்டம்



மன்னார், ஜூன் 11
மன்னார் பள்ளிமுனை சென். லூசியஸ் விளையாட்டுக் கழகத்துக்கு மன்னார் மாவட்ட கால்பந்தாட்ட சங்கத்தினால் தடை விதிக்கப்பட்டுள்ள நிலையில் குறித்த சங்கத்தை எதிர்த்து கழகத்துக்கு ஆதரவாக நேற்றைய தினம் போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டுள்ளது.
தோட்டவெளி ஜோசப்வாஸ் நகரில் இந்த மாதம் 2ஆம் திகதி நடைபெற்ற ஆட்டமொன்றில் சென். லூசியஸ் விளையாட்டுக் கழகத்தைச் சார்ந்தவர்கள் நடுவர்களுடன் வாக்குவாதத்தில் ஈடுபட்டதுடன் தாக்குதல் போக்கையும் கடைப்பிடித்ததாகத் தெரிவித்து குறித்த கழகத்துக்கு மன்னார் கால்பந்தாட்டச் சங்கத்தால் ஆறு மாதங்கள் தடை விதிக்கப்பட்டது.
இதனையடுத்து குறித்த கழகத்தின் ஆதர வாளர் கள் சிலரால் கழகத்துக்கு விதிக் கப்பட்டுள்ள தடையை நீக்கும் படி தெரிவித்தே குறித்த போராட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.
காலை 10.30 மணியளவில் மன்னார் பள்ளிமுனையில் ஒன்றுகூடிய அவர்கள் அபிவிருத்திக்கு குரல் கொடுக்கும் மன்னார் அரசியல் வாதிகளே இந்த அநீதிக்கு குரல் கொடுங்கள், எமது கழகத்தின் வெற்றிக்கு தடை விதிக்காதே, எமது விளையாட்டை வளர விடு உள்ளிட்ட பல்வேறு வசனங்கள் எழுதப்பட்ட பதாகைகளை ஏந்தியவாறு தமது போராட்டத்தை முன்னெடுத்தனர். போராட்டத்தின் முடிவில் மன்னார் மேலதிக மாவட்ட செயலாளர், அதிபர் திருமதி ஸ்ரான்லி டிமெல்லிடம் மனு ஒன்றையும் கையளித்தனர். (ம-56)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஆயிரக்கணக்கானோர் கண்ணீர் மல்க உணர்வுபூர்வமாக அடக்கமானார் அலி



குத்துச்சண்டை ஜாம்பவானான மொகமட் அலியின் உடல் ஆயிரக் கணக்கான மக்களின் கண்ணீருக்கு மத்தியில் நேற்று அடக்கம் செய்யப் பட்டது.

1942ஆம் ஆண்டு பிறந்த மொகமட் அலி தனது 18ஆவது வயதில் குத்துச்சண்டையில் கால் பதித்தார். ஒலிம்பிக்கில் தங்கப் பதக்கம், குத் துச்சண்டை உலகப்பட்டம் என்று வியக்க வைத்த அவர், தான் கள மிறங்கிய 61 போட்டிகளில் 56 போட்டிகளில் வெற்றிபெற்றார். 1980 ஆம் ஆண்டு பாரிசவாதத்தால் பாதிக் கப்பட்ட அவர், அதே வருடத்தின் இறுதிப்பகுதியில் ஓய்வை அறிவித்துச் சென்றார். கடந்த 35 வருடங்களுக்கும் மேலாக பாரிசவாதத்தின் பிடியிலிருந்த அவருக்கு கடந்த வருடம் சுவாசச் சிக்கலும் ஏற்பட்டது. நோய் அதி கமாகியதை அடுத்து, கடந்த 3ஆம் திகதி வெள் ளிக்கிழமை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட அவர், மறுதினம் சனிக்கிழமை இரவு 9.10 மணி க்கு சாவடைந்தார். மக்களின் வேண்டு கோளுக்கு இணங்க அவரது உடல் கடந்த ஒரு வாரமாக அவரது சொந்த ஊரான அமெரிக்காவின் லூயிஸ் வில்லியில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு, ஆயிரக் கணக்கானோரின் கண்ணீருக்கு மத்தியில் நேற்று அடக்கம் செய்யப்பட்டது.

துருக்கி ஜனாதிபதி தயீப் எட்டோகன், ஜோர்தான் அரசர் அப்துல்லா, அமெரிக்க முன்னாள் ஜனாதி பதி பில் கிளின்டன் உட்படப் பல பிரபலங்கள் மொகமட் அலியை வழியனுப்பி வைத்தனர்.

ஒவ்வொரு வெற்றிக்குப் பின்னர் பட்டாம்பூச்சி களைப் போல பறந்திடுங்கள், தேனியைப் போல கொட்டிடுங்கள் என்று மொகமட் அலி தெரிவிப்பது வழக்கம். இவரைக் கௌரவிக்கும் முகமாக ஆயிரத்துக்கும் அதிகமான பட்டாம்பூச்சிகள் வானில் பறக்கவிடப்பட்டன.

(ம)

# இங்கிலாந்துக்குப் பதிலடி கொடுக்கிறது இலங்கை

இங்கிலாந்து– இலங்கை அணி களுக்கு இடையிலான மூன் றாவது டெஸ்ட் ஆட்டத்தில் நேற் றைய இரண்டாம் நாளில் இங் கிலாந்தின் இன்னிங்ஸ் 416 ஓட்டங்களுடன் முடிவு கண்டது டன் பதிலுக்குத் துடுப்பெடுத் தாடும் இலங்கை, நாள் முடிவில் 160-1 என்றுள்ளது.

நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்ற இங்கிலாந்து முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித் தது. குக்கின் அரைச்சதம், பரிஸ் ரெளவ்வின் சதம் கைகொடுக்க முதல் நாள் முடிவில் இங்கி லாந்து 279-6 என்றிருந்தது. பரிஸ்ரெளவ் 107 ஓட்டங்களு டனும், வோக்ஸ் 23 ஓட்டங்களு டனும் இரண்டாம் நாளுக்காகக் களமிறங்கினர். இந்த இணை நேற்றும் சில பந்துப்பரிமாற் றங்கள் வரை தாக்குப்பிடிக்கவே செய்தது. அரைச்சதம் கடந்தார் வோக்ஸ். மறுமுனையில் 150 ஓட்டங்களை எட்டினார் பரிஸ் ரெளவ். 66 ஓட்டங்களுடன் வோக்ஸ் ஆட்டமிழந்ததுதான் தாமதம், இங்கிலாந்தின் இன் னிங்ஸ் 416 ஓட்டங்களுடன் முடிவு கண்டது. பரிஸ்ரெளவ் 167 ஓட்டங்களுடன் ஆட்டமிழக் காதிருந்தார்.


பந்துவீச்சில் இலங்கை சார்பாக கேரத் 4 இலக்குகளையும், லக் மல் 3 இலக்குகளையும், பிரதீப் 2 இலக்குகளையும், எரங்க ஓர் இலக்கையும் வீழ்த்தினர்.

பதிலுக்குக் களமிறங்கிய இலங் கைக்கு வழக்கத்துக்கு மாறாக சிறப்பான ஆரம்பம் அமைத் தனர் ஆரம்ப வீரர்களான கரு ணாரத்ன மற்றும் சில்வா. புரோட், அன்டர்சன் கூட்டணி யால் இணைப்பாட்டத்தைப் பிரித்துவிட முடியவில்லை. இலக்குச் சரிவில்லாமல் 50 ஓட்டங்களை எட்டியது இலங்கை. பின், மொயின் அலியின் பந் துப்பரிமாற்றங்களும் தோற்றுப் போக இருவரும் ஆளுக்கொரு அரைச்சதம் கடந்தனர். இலங் கையின் ஓட்ட எண்ணிக்கை 108ஆக இருந்தபொழுது 50 ஓட்டங்களுடன் கருணாரத் னவை வீழ்த்தினார் பின். சில்வா, மெண்டிஸ் இணை மற்றுமொரு இணைப்பாட்டத்தை அரங் கேற்ற நாள் முடிவில் இலங்கை 160-1 என்றுள்ளது. சில்வா 79 ஓட்டங்களுடனும், மெண்டிஸ் 23 ஓட்டங்களுடனும் ஆட்ட மிழக்காதுள்ளனர்.

**அலிக்கு அஞ்சலி**

குத்துச்சண்டை ஜாம்பவானான மொகமட் அலியின் உடல் அடக்கம் செய்யப்பட்ட நேற் றையதினம், இங்கிலாந்து, இலங்கை அணிகளுக்கு இடை யிலான ஆட்டம் ஆரம்பிப்ப துக்கு முன்பாக மைதானத்தின் பெரிய திரையில் உருவப்படம் காட்சிப்படுத்தப்பட்டு அஞ்சலி செலுத்தப்பட்டது.

(ம)



## இந்தியா – சிம்பாப்வே ; முதல் ஆட்டம் இன்று

இந்தியா – சிம்பாப்வே அணிகளுக்கு இடையிலான முத லாவது ஒருநாள் ஆட்டம் இன்று நடைபெறவுள்ளது. சிம்பாப்வேக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள இந்திய அணி மூன்று ஆட்டங்களைக் கொண்ட ஒருநாள் தொடரி லும், 3 ஆட்டங்களைக் கொண்ட ரி-20 தொடரிலும் விளை யாடவுள்ளது. இதன் முதலாவது ஒருநாள் ஆட்டம் ஹராரே மைதானத்தில் இலங்கை நேரப்படி பிற்பகல் 12.30 மணிக்கு இன்று நடைபெறவுள்ளது.

(ம)

**Sky Computer System**
சகலவிதமான Desktop pc, Laptop,
உடனுக்குடன் திருத்திக் கொடுக்கப்படும்

T.P:021-222-1417
89,கண்டி றோட், யாழ்ப்பாணம். (கச்சேரிக்கு அருகாமையில்)

**BRITISH COLLEGE OF HIGHER STUDIES**
BCHS
சர்வதேச பாடத்திட்டத்தின் தராதரத்திற்கு அமைய நவீன தொழில் நுட்பத்துடன் வழங்கும்
**Spoken English with Grammar** 1 1/2 Months
(ஆங்கிலத்தில் பேசுவதற்கு 100% உத்தரவாதம்) (Quick Learning course)
**Diploma in English** 2 1/2 Months
* எமது கற்கை நெறிகள் Writing, Speaking, Reading, Listening என வகைப்படுத்தப்பட்டு ஒவ்வொரு பிரிவும் மிகச்சிறந்த ஆசிரியர்களினால் கற்பிக்கப்படுகின்றது.
* O/L, A/L பரீட்சை எழுதிய மாணவர்கள், தொழில் தேடுவோர், தொழில் புரிவோர் மற்றும் ஆங்கிலம் கற்க விரும்பும் அனைவருக்கும் ஏற்றது.
* Excellent Teachers' Panel & Individual Attention
Batch 1 : 13.06.2016
Batch 2 : 15.06.2016
Batch 3 : 18.06.2016
Batch 4 : 20.06.2016
No.15 1/2, Siriampiyady Lane, (Above Sathosa SM) Jaffna. Tel :021-2224550
0770365728
Hotlines
0777585913, 0777222422, 071429935
கிழமை நாட்கள் மற்றும் சனி, ஞாயிறு வகுப்புக்களும் ஆரம்பமாகின்றன.
அனுமதிகள் மட்டுப்படுத்தப்பட்டுள்ளதால் தங்கள் பதிவுகளுக்கு முந்துங்கள்

**Spoken English (160hrs)**
100% Practical Class
Indoor and Out door learning
On the spot training
New batches start on: 11.06.2016 Weekend
9.00 Am/1.30Pm 13.06.2016 Weekdays
7500/=
**Diploma In English** Reading,Writing,Listening and Speaking
New batches start on: 11.06.2016 Weekend
13.06.2016 Weekdays
9.00 Am/1.30Pm (240hrs)
10,000/=
**Spoken Sinhala** 100% Speaking from the beginning
Alphabate writing and reading (160hrs)
New batches start on: 11.06.2016 Weekend
13.06.2016 Weekdays
8.30 Am/1.30Pm/3.30Pm
7500/=
ELAS
English Language Adventure School
Sir Pon Ramanathan Road, Thirunelveli, Jaffna.
T.P: 021 221 2410, 076 697 3040

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 11.06.2016 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.